# தமிழ் மாமலை



கவிஞர்கோ
கோவை. இளஞ்சேரனார்

சொற்பொழிவின்
நூல் வடிவம்

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

# தமிழ் மாமலை

கவிஞர்கோ. கோவை இளஞ்சேரனார்

மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்
தம் பெற்றோர் பெயரில் நிறுவிய
“அன்னை அஞ்சுகம் தந்தை முத்துவேலர்”
அறக்கட்டளையின் முதற் சொற்பொழிவு.

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்
1997

ISBN: 81-7090-263-0

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீட்டு எண்: 203
திருவள்ளுவர் ஆண்டு 2028 புரட்டாசி திங்கள் - அக்தோபர் 1997

| | | |
|---|---|---|
| நூல் | : | தமிழ் மாமலை |
| பதிப்பாசிரியர் | : | கவிஞர் கோ. கோவை இளஞ்சேரனார் |
| விலை | : | உரு. 40/- |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| ஒளியச்சு | : | கவிதா கம்பியூட்டர்ஸ்<br>சென்னை |
| அச்சு | : | தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகம்<br>தஞ்சாவூர். |

தமிழ்ப் பல்கலைக்கழக இராசராசன் விருது பெற்ற
முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி
அவர்கள் நிறுவிய
'அன்னை அஞ்சுகம் தந்தை முத்துவேலர்
அறக்கட்டளை'
சொற்பொழிவு-எழுத்துரு

பொழிவர் :
கவிஞர்கோ. கோவை இளஞ்சேரனார்
தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத் துறை
முன்னாள் துணைஇயக்குநர்,
தஞ்சாவூர்

பொருள் :
"தமிழ்க்கென வாழ்ந்த தமிழ் மாமலை"

பொழிவுறு சான்றோர் :
நிறைதமிழ்ச் செம்மல் மறைமலையடிகளார்

பொழிவுநாள் :
திருவள்ளுவர் ஆண்டு 2024
பங்குனி 25
7.4.1993

மன்றம் :
தமிழ்ப் பல்கலைக்கழக மொழிப்புலக்
கருத்தரங்கக் கூடம்.

# அணிந்துரை

''பகைவர்க்குத் தாழாமல் படைகண்டு வீழாமல்
பல்லூழி வாழ்கின்ற தமிழ்''

(கலைஞர் கவிதைகள், பக். 59)

தமிழ் மொழியின் சீரிளமைத் திறம் குறித்துக் கலைஞர் அவர்கள் எழுதியுள்ள மேற்கண்ட கவிதை வரிகள் அவரின் நெஞ்சாழத்துத் தமிழுணர்வின் வீர வெளிப்பாட்டுச் சொற்கள். இருபதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் வீறுகொண்டெழுந்த திராவிட இயக்கத்தைத் தோற்றுவித்த தந்தை பெரியாரின் சிந்தனை மரபில் அரசியல் சாதனை புரிந்த மாமனிதர் பேரறிஞர் அண்ணாவின் தளபதியாகத் திகழ்பவர் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள். தமிழ் உணர்வின் வடிவமாகத் திகழ்பவர். பகுத்தறிவுச் சிந்தனையாளர், நாடகப் படைப்பாளி, புதினக் கலைஞர், இதழியல் வல்லுநர், புதிய கவிதை மரபிற்கு வித்திட்டவர் – எனப் பல்வேறு பெருமைகளுக்குரிய கலைஞரின் இலக்கியச் சாதனைகளுக்காக, தமிழ்ப் பல்கலைக்கழகம் மாமன்னன் இராசராசன் விருது வழங்கி அவரைச் சிறப்பித்தது.

மாமன்னன் இராசராசன் விருதாக அவருக்கு வழங்கப் பெற்ற உருபாய் ஒரு இலட்சத்தையும் அவர் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கே திரும்ப அளித்து, தம் பெற்றோர் பெயரில் ஓர் அறக்கட்டளை நிறுவினார். ''அன்னை அஞ்சுகம் – தந்தை முத்துவேலர் அறக்கட்டளை'' என அழைக்கப்பெறும் இவ்வறக்கட்டளை மூலம், ஆண்டுதோறும், தமிழுணர்வினை வித்திட்டு வளர்த்த பேரறிஞர் பெருமக்களான மறைமலை அடிகள், திரு. வி. கல்யாணசுந்தரனார், நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், கா. சுப்பிரமணியபிள்ளை, கால்டுவெல் ஆகியோர் ஆற்றிய பணிகள் குறித்து ஆய்வுரைகள் நிகழ்த்த வேண்டுமென்று விதி அமைத்தார். தமிழ் உணர்வு என்ற நெருப்பினை அணையாமல் காக்கும் பெரும்பணிகளில் ஒன்றாக, இப்பெருமக்கள் குறித்து ஆண்டுதோறும் ஆய்வுரைகள் நிகழ்த்த இவ்வாறு கலைஞர் ஏற்பாடு செய்து வைத்துள்ளார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நிறுவியுள்ள அன்னை அஞ்சுகம் தந்தை முத்து வேலர் அறக்கட்டளை சார்பில் நிகழ்த்துப் பெற்ற சில சொற்பொழிவுகளில், மறைமலை அடிகள் பற்றிய முதற் சொற்பொழிவே ''தமிழ் மாமலை'' என்ற பெயரில் இப்போது நூலாக

வெளி வருகிறது. இச்சொற்பொழிவை நிகழ்த்தியவர் தஞ்சை நகரின் முதுபெரும் தமிழறிஞரும் தமிழுணர்வாகவே தன்னை அமைத்துக் கொண்டு வாழ்பவருமான கவிஞர்கோ. கோவை இளஞ்சேரன் அவர்கள் ஆவார். தமிழ்ப் பல்கலைக்கழக வளர்ச்சியில் தொடக்கம் முதலே பங்கெடுத்து உழைத்துச் சிறந்தவர். தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத் துறை இயக்குநராகப் பணியாற்றியவர். மறைமலை அடிகளின் பல்வேறு திறன்களை அவரின் நூல்களின் வழி நின்று, நல்ல ஆராய்ச்சிப் பாங்குடன், காலத்திற்கேற்ற முறையில் கவிஞர்கோ. கோவை. இளஞ்சேரன் அவர்கள் இந்நூலில் அறிமுகம் செய்துள்ளார். இன்றைய தலைமுறையினர் மறைமலை அடிகள் ஆற்றிய பணிகள் குறித்துத் தெரிந்துகொள்ள இந்நூல் நன்கு துணை புரியும்.

இருபதாம் நூற்றாண்டில் தமிழிலக்கிய – மொழி ஆராய்ச்சி வளர்ச்சிக்கு மறைமலை அடிகள் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்க சிறப்புடையது. இலக்கியம் – மொழி பற்றி மட்டுமன்றி, சைவ சித்தாந்தம், மனித வாழ்வியல் போன்றவை பற்றியும் பல நூல்கள் எழுதியுள்ளார். 54 நூல்களைத் தமிழுலகத்திற்குத் தந்த பெருமைக்குரியவர் மறைமலை அடிகள். வடமொழி நூல்களைத் தமிழுக்கு அறிமுகம் செய்துள்ளார். மேலை நாட்டு அறிவியல் முறை பற்றி அறிந்து தமிழ்நாட்டார்க்கு ஏற்றவகையில் வாழ்வியல் நூல் எழுதியுள்ளார். தொல் இலக்கியங்களான முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை ஆகியன பற்றி அவர் எழுதியுள்ள ஆராய்ச்சி உரைகள் மிகவும் புகழ் பெற்றவை. நவீன கால மாறுதல்களை எல்லாம் உள்வாங்கிக் கொண்டு தமிழ் வளர்ச்சிக்கு ஆக்க பூர்வமாகச் செயல்பட்டவர் மறைமலை அடிகள் அவர்கள். "மாறுதலே உயிர் வாழ்க்கையாம், அஃது இன்மையே மாய்வாம்" என்ற அடிகளாரின் கூற்று, எதிர்காலத் தமிழ் வளர்ச்சி, நவீன கால வளர்ச்சியோடு இணைந்து செல்ல வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுவது எனலாம். தொலை நோக்குணர்வு மிக்க மறைமலை அடிகள் பற்றிக் கவிஞர்கோ. கோவை. இளஞ்சேரன் அவர்கள் எழுதியுள்ள இந்நூல் இன்றைய தமிழ் மக்களுக்கும், இளைய தமிழ் ஆராய்ச்சியாளர்க்கும், தமிழ் உணர்வு கொண்ட அனைவருக்கும் விருப்பமான ஒரு நூலாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**சி. கருணாகரன்**
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 5
23.9.97

# ‘தமிழ்க்கென வாழ்ந்த தமிழ் மாமலை’
# ‘நாகையில் ஒரு மலை’

**பொலிக! வாழ்க!**

*“மறைநூல் என்பது தமிழ்நான் மறைநூல்;*
*மற்ற மறைநூல் பின்வந்த குறைநூல்.*
*முறையாய் இவைகட்குச் சான்று காட்டி,*
*முழக்கஞ் செய்த முத்தமிழ் அறிஞனை*
*வாழ்த்தாத நாளில்லை- வையம்*
*மறைமலையடிகள் மறவாத் திருப்பெயர்*
*வாழ்த்தாத நாளில்லை”*[1]

இந்த இசைப்பாடலின் சொல்லோட்டம் ‘பாவேந்தர் பாரதிதாசனார் பாட்டு’ என்று காட்டுகின்றது. பாவேந்தர் தாம் வாழ்ந்த நாளை எண்ணியும், நாம் வாழும் எதிர்கால நாள்களையும் எண்ணியுமே “வாழ்த்தாத நாள் இல்லை” என்று பாடினார். ஆனால், மறைமலையடிகளை வாழ்த்தும் நாள்கள் சிலவாயின. இன்றைய நாளை ‘மறைமலையடிகள் மறவாத் திருபெயர்’ வாழ்த்தும் நாளாகச் செய்த பெருமக்களைப் ‘பொலிக; வாழ்க’- என்று பாராட்டி வாழ்த்தி நன்றி கூறுகின்றேன்.

தமிழ்ப் பல்கலைக்கழக இராசராசன் விருது பெற்று அறக்கட்டளை நிறுவியுள்ள டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் நெஞ்சில் நிறைவாக நிறுத்தற்குரியவர். டாக்டர் கலைஞர் அவர்கள் சான்றோர்களை மதித்துப் போற்றும் பண்புக் கலைஞர். தம் பெற்றோரை முதற் சான்றோராகக் கொண்டு அன்னார் பெயரால் அறக்கட்டளையாக இராசராசன் விருதைப் படைத்தமையே அவர் தம் பண்பின் ஒளிவிளக்கு. அறக்கட்டளையில் ஐந்து சொற்பொழிவு என்றமைத்து ஐந்தையும் தமிழுக்கு ஐவகை முடிசூட்டிய தமிழ்ச் சான்றோர் ஐவரைப் போற்றிப் புகழப் பதிந்தமை அவர் தமிழ் உள்ளத்தின் இளஞாயிற்றொளி. குறிப்பாக மறைமலையடிகளாரின் பல்வகைத் திறனைப் போற்றிப் பேசும், எழுதும் பெருந்தகை கலைஞர். மக்களும் நிலைத்துப் போற்றச் செய்கையில் மர்மலாங்பாலத்தை மறைமலையடிகள் பாலம் ஆக்கியவர். நாட்டில் பெயர் முழக்கி நிலவ ‘மறைமலைநகர்’ கண்டவர். புகைவண்டி நிலையத்திற்கு மறைமலையடிகள் பெயர் சூட்டிச் சிறப்பித்து, அது

குறைபட நேர்ந்தபோது ஊன்றி நின்று குரல் கொடுத்து நிலைநாட்டியவர். மறைமலையடிகளாரின் முழு உருவ வெண்கலச்சிலையை நாகை நகரில் திறந்து வைத்துப் பெருமை கூட்டிய தமிழக முதல்வர். அவ்விழாவில் மலர்ந்த மறைமலையடிகளார் நினைவுமலரில் 'மறத்தமிழ் மாண்பினர் மறைமலையடிகளார்' என்னும் கட்டுரை படைத்துப் புகழ் சேர்த்தவர். இவற்றையெல்லாம் நினைவுகூரும் வகையில் இவ்வறக்கட்டளையின் இப்பொழிவிற்கு அக்கட்டுரையில் அவர் மறைமலையடிகளார்க்குச் சூட்டிய புகழ்த் தொடராகிய 'தமிழ்க்கென வாழ்ந்த தமிழ் மாமலை' என்பதைத் தலைப்பாக்கி மகிழ்கின்றேன். இந்நேரத்தில் இஃது அவர்க்குக் கூறும் பாராட்டும் நன்றியும் ஆகும்.

நயப்பும் வியப்பும் தரும் ஒரு பொருத்தத்தை இங்கு குறிக்கலாம். தொடங்கிய பாவேந்தர் பாட்டியல் அடிகளால் 'முழங்கிய புலவனை முத்தமிழ் அறிஞனை' என்று முத்தமிழ் அறிஞராகப் பட்டம் சூட்டினார். இதனை நினைவிற் கொள்ள முடியாத இந்தியப் பெருநாட்டின் குடியரசுத் தலைவர், மறைமலையடிகள் அறக்கட்டளை அமைத்தவர்க்கு 'முத்தமிழ் அறிஞர்' என்று விருது சேர்த்தமை வியப்பிற்குரியதே. அதனையும் இராசராசன் விருது வழங்கிய விழாவில் இதே தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் சூட்டியமை நயத்தற்குரியதே. இவ்வறக்கட்டளையைத் தாங்கிப் பதிந்து விளக்கும் தமிழ்ப் பல்கலைக்கழகம் வளர்க; வாழ்க என்று வாழ்த்துகின்றேன்.

விளங்கவைக்க வேண்டிய இவ்வறக்கட்டளையைப் போற்றி செயற்படுத்த முனைப்புற்ற தமிழ் நெஞ்சத்தர், துணைவேந்தர் முனைவர் அவ்வை நடராசன் அவர்களை உவக்கும் உள்ளத்தில் அமர்த்திப் பாராட்டி வாழ்த்தி நன்றி கூறுகின்றேன். இன்று நிகழ்ச்சியாக்கி நடைமுறைப்படுத்தும் தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத் துறையினருக்கு என் பாராட்டும் நன்றியும் அணியாகுக. இன்னோர் அனைவரையும் வருகை தந்து மகிழ்விக்கும் மன்றத்தாரையும் வணங்கி மகிழ்கின்றேன்.

## அ. மலையின் முகடுகள் மூன்று

இப்பொழிவின் தொடக்கமான பாவேந்தர் பாரதிதாசனார் பாடல் நிறைதமிழ்ச் செம்மல் மறைமலையடிகளாரின் ஆய்வுச் சிறப்பை, திறத்தை அறிமுகப்படுத்துகின்றது. அதன் உள்ளீடாக ஒலிப்பது அடிகளாரின் ஆய்வுத்திறன் மட்டுமன்று, தமிழின உணர்வையும் தழுவிக் காட்டுகிறது.

இவ்வுணர்வு அடிகளாரின் தமிழின ஊற்றம். ஆம் தமிழ் இன ஊற்றம்! இத்தமிழின ஊற்றத்தை அறிமுகப்படுத்தியது கவிஞருலகில் வீறு பெற்ற ஆண்மகனின் குரல். மற்றோர் கவிக்குரல் இப்படி ஒலிக்கிறது.

*"முடியுமா பேச, வேற்று*
*மொழிக்கலப் பின்றி? வாழ்வு*
*விடியுமா தமிழால்?-என்று*
*வினவிய ஆணவந் தான்*
*ஒடியுமா றுதைத்து, நாவில்*
*ஒரு தனித் தமிழே, கற்பில்*
*அடையுமா றுழைத்த எங்கள்*
*அடிகளார் புகழே வாழ்க!"* [2]

கவித் திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் அமைதியை ஆற்றொழுக்கில் வைத்துப் பாடுபவர். அவரே, "ஆணவந்தான் ஒடியுமாறு உதைத்து" என்று வெடித்திடும் குரலில் பாடினார். குரலை வெடிக்க வைத்தது அடிகளாரின் தனித்தமிழ் உணர்வு மூட்டிய நெருப்புப் பொறி எனலாம். இவ்வெடிப்பில் முழங்குவது அடிகளாரின் தமிழ் முத்திரை; ஆம்; தமிழ் முத்திரை! மேலும் பேராசிரியர்க்கெல்லாம் பேராசிரியராய்த் திகழ்ந்த முனைவர் மு.வரதராசனார் குரல், வாழ்த்துடன் இனிக்கிறது:

*சாதிப் பேயைச் சாடிய வீரன்;*
*சைவ சமயம் சாதியைக் கடந்ததென்*
*றையந் தீர அறிவுறுத் திட்டோன்*
*மறைமலை யடிகள் மாண்புகழ்*
*துறைதொறும் தமிழ்போல் துலங்குக பெரிதே!* [3]

என்று எழுந்த அகவல் சாதிப்பேய் குமுகாயத்தில் புகுந்ததைப்போல் சைவத்திலும் புகுந்ததை அடிகளார் சாடிய சாட்டலை ஒலிக்கிறது. இது அடிகளாரின் சைவப் பகுத்தறிவு முழக்கம்.

*பாவேந்தர் பாட்டின் தமிழின ஊற்றம்*
*கவித்திருமதியின் தமிழ் முத்திரை*
*முனைவரின் சைவப் பகுத்தறிவு முழக்கம்*

ஆகிய மூன்றும் இணைந்து பிணைந்த திருவுருவமே நிறைதமிழ்ச் செம்மல் மறைமலையடிகளார் எனலாம். 'தமிழின ஊற்றம்' என்னும் வயிரத்தால் உடலாக்கி 'தனித்தமிழ்' என்னும் முத்திரையால் உயிரூட்டி, 'சைவப்பகுத்தறிவு'என்னும் முழக்கத்தால் அறிவேற்றிய நிறை உருவமே மறைமலையடிகளார் எனலாம். இம்மூன்றுமே முனைத்த கருவிகளாகப் பைந்தமிழ் அன்னைக்குச் சொற்பொழிவு என்னும் பொன்னாடை உடுத்தி, நூல்கள் என்னும் மணியணிகளைப் பூட்டின.

*இன்று,ஊற்றத்தையும், முத்திரையையும், முழக்கத்தையும்*
*என்பொழிவு விரிக்கும். நாளை, பேச்சுத்திறனையும்,*
*எழுத்தாற்றலையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வேன்.*

**புகழ்வாழ்வின் ஒலிபரப்பு**

முன்னே ஒன்றை மொழிய வேண்டும். அஃதும் வேண்டப்படுகின்றது. அடிகளாரைக் கவிஞர்களும் பேராசிரியர்களும் மட்டுமோ பாராட்டினர்? பாராட்டி, புகழ்ந்து, வழிபற்றி, வழிபட்டோர் பட்டியல் மிகப் பெரிது. எண்ணிக்கைப் பெருமை மட்டுமன்றி அப்பட்டியலில் உள்ளடங்குவோர் பல துறையினருமாவர். அன்னோர் கருத்துக்களை வேற்றுமுனையிலும் மாற்று முகப்பிலும் வைத்துக் காண்பது அடிகளாரின் அறிவு வாழ்வின் ஒலிபரப்பாகும்.

பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள், "அடிகளார் என் வலக்கை போன்றவர்" என்றார். இவர் பகுத்தறிவுத் தந்தை; மன்பதைத் தலைவர்.

தவத்திரு சங்கராச்சாரியார், "அவர் எழுதிய சாகுந்தலம் அவருடைய இரு மொழிப்புலமைக்கும் சான்று" என்று, அது கருதிய பரிசுக்கு அறக்கட்டளை நிறுவினார். இவர் உலக குரு எனப்படுகின்றார்.

அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், "அடிகளார் வழங்கும் கருத்துக்களைப் பதப்படுத்திப் பக்குவப்படுத்தித் தந்திருக்கிறார்" என்றார். இவர் அரசியல் அறிஞர்; மேடையரசர்.

"வேதாசலனார் சொற்பொழிவின்பத்தில் மூழ்கிவிட்டேன்" என்றார் தமிழ்த் தாத்தா எனப் பெறும் உ.வே.சா. அவர்கள். இவர் பதிப்பரசர்.

தமிழ்க்காசு கா. சுப்பிரமணியனார், "தமிழ் நாகரீகத்திற்குப் புத்துயிர் ஊட்டுபவர்" என்றார். இவர் சட்ட வல்லுநர்.

"தமிழ் நூல்களில் குப்பைக்கூளங்களை-இடைச்செருகல்களை அடிகளார் கண்டிப்பாகத் தள்ளிவிடுவார்" என்றார் கல்கியார். இவர் எழுத்துலக முன்னோடி.

கோவை. கோ. து. நாயுடு அவர்கள், "அடிகள் கருத்துக்கள் விலைமதிப்பற்றவை" என்றார். இவர் அறிவியல் அறிஞர்; தொழில் வல்லுநர்.

"நக்கீரரும் சிவஞான முனிவரும் ஒருருக் கொண்டாலனையவர்" என்றார் திரு.வி.க அவர்கள். இவர் தமிழ்த் தென்றல்; தொழிலாளர் தலைவர்.

முனைவர் மில்லர், "இந்தச் சிறந்த பேராசிரியரைப் பயன்படுத்த வேண்டும்" என்று கல்லூரிப் பணியை ஏற்க வற்புறுத்தினார். இவர் ஐரோப்பிய அறிஞர்; கல்வி வல்லுநர்.

"அடிகளார் மும்மொழிச் செம்மல்" என்றார் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர். இவர் மொழியியல் வல்லுநர்.

"அடிகள் பாடம் நடத்துவதை மாணவர் பேருவகையோடு கேட்டு மகிழ்வர்" என்றார் திரு எஃச். வையாபுரிப் பிள்ளையவர்கள். இவர் தமிழ்ப் பேரகராதித் தலைமையாசிரியர்.

தவத்திரு ஞானியாரடிகள், "சைவத் தலைமைக்குத் தகுதியானவர் மறைமலையடிகளாரே" என்றார். இவர் சிவத்திருமடத்துத் தனித்தன்மைத் தலைவர்.

இவ்வாறு பாராட்டிய பலமுனைப் பெருமக்கள் பாராட்டுரைகள் அடிகளாரை,

*நெறியான வாழ்வினராக,*
*மும்மொழி வல்லுநராக,*
*சிறந்த பேச்சாளராக,*
*தேர்ந்த நூலாசிரியராக,*
*ஆர்ந்த சைவச் செம்மலாக,*
*தனித்தமிழ்த் தந்தையாக,*
*தெளிந்த ஆய்வாளராக,*
*தெரிந்தெண்ணிச் செய்பவராக,*
*தமிழன்இன உணர்வினராக,*
*தன்மானத் தகவாளராக,*
*தன்மதிப்பு உணர்ந்தவராக*
*இந்தி எதிர்ப்பாளராக,*
*தமிழ் மரபின் தாளாளராக*

மேலும் பலவாறாக அடுக்கும் அளவிற்குக் கருத்துரைகளைத் தருகின்றன. இவ்வாறு அடிகளாரின் தகவுகள் விரிந்தாலும் இவ்விரிவைத் தொகுத்து வகைப்படுத்தினால் முன்னே கண்ட தமிழின ஊற்றம், தமிழ் முத்திரை, சைவப் பகுத்தறிவு முழக்கம் என்னும் மூன்றின் அடித்தளத்தில் திகழ்வதைக் காணலாம்.

இத்துணையளவில் உணர்வும் அறிவும் திறனும் கொண்டவரை அறிமுகம் கொள்ளும் எவரும் அவர் தம் வாழ்வியலை அறிய மனம்பற்றுவர்.

குற்றாலத்தை நினைப்போர் அவ்வருவியின் குளிர்ச்சியை எண்ணி மனம் குளிர்வர்; அது தரும் உடல்நலத்தை உன்னி உடல் குளிர்வர்; அதுதரும் நீரின் சுவையை நினைந்து நா ஊறுவர். இம்மூன்று உணர்வின் உந்துதலால் அவ்வருவியின் ஊற்று எது என்றறிய ஆர்வங்கொள்வர். எங்கு தோன்றுகிறது ? எவ்வாறு கூடுகிறது ? எவ்வழி வருகிறது ? எந்நலங்களை எவ்வாறு தொகுத்துக் கொண்டு வருகிறது ? என்னும் அதன் வரலாற்று விரிவை அறிய ஆர்வங்கொள்வர்.

அது போன்றே மறைமலையடிகளார் என்னும் தமிழ் அருவியில் அறிவு நீராடுவோர்; உணர்வுச் சுவை கொள்வோர், நூல்நலங் கொள்வோர் அவரது வாழ்வு வரலாற்றையும் அறிய மனம் பற்றுவது இயல்பாகும்.

அடிகளார் வாழ்வு தமிழ் இழையோடிய வாழ்வு; தமிழ் தழுவிய சாயலுடையது. நாகர்பட்டின நகரத்தைச் சேர்ந்ததாக அதன் வடக்கெல்லையில் காடவர் கோன்பாடி என்றொரு பகுதி உள்ளது. பல்லவ மன்னரது ஆளுகைத் தலைவரான காடவர்கோன் கழற்சிங்கன் அரசலுவல் தொடர்பாக அங்குப் பாடி வீடமைத்துத் தங்கியமையால் காடவர்கோன் பாடி எனப் பெயர்பெற்றது. இக்காலம் அது காடம்பாடி எனப்படுகின்றது. அது அடிகளார் பிறந்த ஊர்ப்பகுதி என்பர். அஃது உண்மையன்று. உண்மையை அறிய அடிகளாரின் பெற்றோர் எவர் என்னும் விவரத்தை அறிய வேண்டும்.

**காதலில் கனிந்த குழந்தை**

நாகைக் காடவர் கோன்பாடியில் திரு சொக்கனாத பிள்ளை தம் மூதாதையர் இல்லத்தில் வாழ்ந்து வந்தார். அவர் குடியால் சைவ வேளாளர்; தொழிலில் அறுவை மருத்துவர். அதன் தொடர்பில் நாகைக் கடைத்தெருவில் ஓர் அறைகொண்டு தொழில் செய்தார். செல்வராய் வளர்ந்தார். அவருக்கு நாகையிலும் ஒரு குடும்பம் அமைந்தது. அங்கு யாதவத்தெரு என்னும் கடைத்தெருவில் ஒரு பேரில்லத்தை வாங்கி அதில் தம் காதல் மனைவியுடன் வாழ்ந்தார். அவ்வம்மையார் பெயர் சின்னம்மை. அவர் சேனைக்கொண்ட செட்டியார் குடியினர். இன்னோர் ஈன்றெடுத்த செல்வமே நம் அடிகளார். தாய் வணிகக் குடிமகள்; தந்தை வேளாளர் குடிமகன். வேளாண்மையும், தாளாண்மையும் கலந்து தோன்றிய மலையே மறைமலை. இவ்வாறு குறிப்பதில் தவறில்லை. உண்மை தன்னுருவில் வெளிப்படுத்தப்படுகிறது எனலாம்.

மகப்பேற்றிற்கு அறுபது அகவை வரை அங்காந்திருந்த திரு சொக்கலிங்கனார் சின்னம்மையுடன் திருக்கழுக்குன்றம் சென்று தங்கி அவ்விறைவனை வேண்டி ஆண்மகவைப் பெற்றார் என்பர். திருக்கழுக்குன்ற இறைவன் பெயர் வேதகிரீசர் என்னும் வேதாசலம். வேதாசலர் அருளால் திருவள்ளுவர் ஆண்டு 1845 ஆனித் திங்கள் 31-ற்கு நேரான கி.பி.1876 சூலைத் திங்கள் 15-ஆம் நாள் தோன்றிய தன் மகனுக்கு வேதாசலம் என்ற பெயரிட்டனர் பெற்றோர்.

இக்காலம் தென்னிந்தியத் திருச்சபை மேனிலைப்பள்ளியாக விளங்கும் அந்நாளைய வெசிலிமிசன் பள்ளியிலும் கல்லூரியிலும் பயின்று ஆங்கில அறிவு பெற்றார் வேதாசலம். தன் வீட்டிற்கு எதிரில் புத்தகக் கடை வைத்திருந்த இலக்கணப் புலவர் திரு வே. நாராயணசாமி பிள்ளை கடைக்குச் சென்று நூல்களைக் கண்டு நிற்கும் துடிப்பறிந்த பிள்ளையவர்கள்

வேதாசலத்தின் மதிநுட்பத்தை உரையாடி அறிந்தார். அவர் கற்பிப்பில் இலக்கண இலக்கியப் புலமை பெற்றார்.

> "எனது பதினைந்தாம் ஆண்டில் முறைப்படி துவங்கிய தமிழ்ப் பயிற்சியானது எனது இருபத்தோராம் ஆண்டில் பெரும்பாலும் நிரம்பியதென்னலாம்" [4]

என்று திருவளர் வேதாசலம் எழுதியதுபோன்று ஆறு ஆண்டுகளில் தமிழ்க்கல்வி நிறைவானது. தாமே முயன்று வடமொழியைக் கற்றார். மொழிபெயர்க்கும் திறனளவில் வடமொழிப்புலமை அமைந்தது. விரைந்து பயிலவும் ஆற்றொழுக்காகப் பேசவும், உரையாடவும், தெளிவுற எழுதவும் ஆங்கில அறிவு பெற்றார்.

இலக்கணப் புலவர் திரு வே. நாராயணசாமி பிள்ளையவர்களிடம் மனோன்மணியம் ஆசிரியர் சுந்தரம்பிள்ளை தமிழ் பயின்றார். அவரது நாகை வருகையால் திருவளர் வேதாசலம் அவருக்கு நண்பரானார்.

நாகையில் சிலமுறை'சைவப் பொழிவின் சண்டமாருதம்' எனப் புகழ்பெற்ற சைவத்திரு சோமசுந்தர நாயக்கர்பால் மனந்தோய்ந்து சைவக்கோட்பாட்டறிவினை நிறைவாக்கிக் கொண்டார். நாளும் அவர் நினைவில் நின்று போற்றியிசைக்கும் கடமையையும் மேற்கொண்டார்.

நாகையில் இளமையிலேயே 'இந்து மதாபிமான சங்கம்' என்னும் ஒன்றை நிறுவித் தாம் தலைவராக அமர்ந்து கிழமைதோறும் சொற்பொழிவாற்றினார் (திருவளர் வேதாசலத்தின் விரைந்த கல்வி முன்னேற்றத்தைக் குறிக்கும் விரைவில் அவர் தம் இல்லற அமைவு பற்றிக் குறிப்பது இடையீடுபடுவது இயல்பே).

**இல்லறப்பாங்கு**

12 அகவைச் சிறுமப் பருவத்தில் தந்தையை இழந்த வேதாசலத்திற்குத் தாய் சின்னம்மை 16 அகவையில் திருமணம் முடித்தார். சங்ககாலத் திருமண அகவையும் 16 ஆக இருந்தமை இங்கும் எதிர்பாராமல் பொருந்துகின்றது. திருவளர் வேதாசலம் தன் மாமன் மகள் சவுந்தரத்தை விரும்பியேற்றுத் திரு வேதாசலமானவர், 17ஆவது அகவையில் தந்தையுமானார். "16-இல் தொடங்கிய தமிழ்க்கல்வி" என்றாரே அது இப்பதினேழில் காப்பிய இலக்கியங்களில் ஊன்றிநின்றது. சீவக சிந்தாமணியில் திளைத்திருந்த காலப்பருவத்தில் பிறந்த முதல் மகளுக்குச் சிந்தாமணி என்று பெயரிட்டார்.

மனோன்மணியம் சுந்தரனார் நட்பாலும், ஆசிரியர் சோமசுந்தரர் அழைப்பாலும் சென்னையைச் சேர்ந்த திரு. வேதாசலம் தமிழ்ப் பேராசிரியர்

பரிதிமாற்கலைஞர் நேர்முகத்தால் தேர்ந்தெடுக்க தாம்பரம் கிறித்துவக் கல்லூரிப் பேராசிரியர் ஆனார். சென்னை வாழ்வு நிலைத்தது. தமிழ் நாடெங்கும் தமிழ்ச் சைவச் சொற்பொழிவு முழங்கியது. பல்லாவரத்தில் இல்லம் அமைந்தது. சென்னையில் அமைந்தாலும் நாகை நினைவு படிந்திருந்ததால் அடுத்த மகளுக்கு நாகை அம்மை பெயராகிய நீலாம்பிகை பெயரிட்டார். ''நாலுபேர் போன பாதையில் நடந்த திரு வேதாசலனார் அந்நால்வர் இல்லத்தில் தவழத் தவழ முறையே நான்கு ஆண்மக்கட்கும் திருஞானசம்பந்தம், திருநாவுக்கரசு,மாணிக்கவாசகம், சுந்தரமூர்த்தி எனப் பெயரிட்டழைத்து மகிழ்ந்தார்.

தம்மிடம் தமிழ் பயின்ற மாணவியைப் பின்னர் வரைந்த பெருமனைக் கிழத்தியாக மணந்தார். அப்பருவம் ''அமராவதி அம்பிகாபதி'' என்னும் நாடகம் எழுதிக் கொண்டிருந்த காலம். இக்காதல் கருவூலக் காப்பியத்தால் மேலே மணந்தது காதல் மணமா, இக்காதல் மணத்தால் ''அமராவதி அம்பிகாபதி'' நாடகமா ? என்று ஆராய்வதைவிட அம்பிகாபதி அமராவதி போன்று அவலமின்றி மறு அம்பிகாபதியையே செல்ல மகனாகப் பெற்றார் திரு. வேதாசலனார். ஆம், பின்னர் வரைந்த பெருமனைக்கிழத்தி தந்த செல்வத்திற்கு அம்பிகாபதி என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார். இப்பெயர்ப்பொருத்தத்தைக் கருதிப் பார்க்கும்போது கவிஞர் பெருமகன் மில்தன்,

> *''ஒரு சிறந்த நூல் என்பது ஒரு சிறந்த அறிஞனின் அரிய*
> *வாழ்க்கைச் சாரமேயாகும்''*

என்று எழுதிய வரிகளின் கருத்து பொருந்துகின்றதாகக் கொள்ளலாம்.

இவ்வாறாக மக்களொடு துவன்றி மனையறங் காத்தவர்; கட்டிளமைக் கல்வியில் தொல்காப்பியத்தை ஊன்றிப் பயின்றவர். இவ்வாறாக வாழ்க்கைப் பருவத்தின் நிறைவை நோக்கி ஏறும் முதற்படியில் காலை வைத்த வேதாசலனார்,

> *''காமஞ் சான்றார்''அதன் ''கடைக்கோள் காலமும் கண்டார்:*
> *''ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றினார்;*
> *''அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்''*

என்னும் அடியில் ஒரு திருத்தமாக, ''கிழவனும் கிழத்திகளுமாக அமைந்தார். இனிச் ''சிறந்தது பயிற்றும்''[5] ஒழுங்கில் அமர மனம்பற்றினார் போலும். அதனால் முன்னே சுவாமி என்னும் அடைமொழி சேர்த்தார். இது இல்லறம் துறவாத துறவு. சுவாமி வேதாசலம் ஆனார். இப்போது சுவாமி வேதாசலனார்க்கு அகவை முப்பத்தைந்து. ஏறத்தாழ இளமைத்துறவு. துறவு மேற்கொண்ட நாள் 27.8.1911.

இதற்கு மூன்று திங்களுக்கு முன்னர் பல்லாவர வாழ்க்கை அமைத்தவர் அதனை மாளிகையாக்கி அதனையே கோவிலாகவும் கொண்டு அம்பலவாணர்க்கு இருப்பிடமாக்கி தமிழில் வழிபாடு இயற்றினார். பல்லாவரம் வாழ்க்கை தொடங்கி ஏறத்தாழப் பத்தாண்டுகள் தமிழகத்தில் மட்டுமன்றி வடபுலம், இலங்கை ஆகியவற்றில் தேர்ந்த தமிழ்ச் சைவச் சொற்பொழிவு வாழ்வும் நூல் படைப்பு-பதிப்புப் பணியும் வளர்ந்தன. தமிழகமும் தமிழும் மேன்மேல் அணிகலன்கள் பெற்ற பருவம் இது எனலாம்.

புகழ்பட வாழ்தல் என்னும் நற்றொடருக்கு இலக்கியமாகத் திகழ்ந்த சுவாமி வேதாசலனார் 1916-இல் தம் தனிப்புகழுக்கு வித்தாகும் தனித்தமிழ் உணர்வை இயக்கமாக்கத் தொடங்கினார். தம் அன்பு மகளார் நீலாம்பிகை அம்மையாரின் தனித்தமிழ் உந்துதலால் முனைப்புகொண்ட சுவாமி வேதாசலனார் தம் பெயரை மறைமலை என்று மாற்றிக் கொண்டார். சுவாமி என்னும் அடைமொழியையும் அடிகள் என்று தமிழாக்கிப் பெயரின் பின்னே அமைத்து மறைமலையடிகள் என்று மாற்றிக்கொண்டார். முடங்கல், ஆவணம் முதலியவற்றில் இடும் கைச்சான்றை மறைமலையடிகள் என்று பதித்தார். ஆங்கிலத்தில் இடும் கைச்சான்றிலும் மறைமலையடிகள் என்றே பதித்தார்.

**இளவரசனைவிட ...**

தம் வாழ்வில் நூலறிவை உயிர்த்துணையாகக் கொண்ட மறைமலையடிகளார் சிறந்த நூல்களை விலைகொடுத்துப் பெற்றே மணிமொழி நூலகத்தைக் கண்டார். தம் நூல் தாமே நேர்நின்று பதிப்பித்தற்கு உதவியாகத் தம் மாளிகையிலேயே ஓர் அச்சகம் கண்டார். நிறைவாழ்வில் புகழ்த்தூண் நாட்டிய அடிகளார் தம் விருப்ப ஆவணத்தில் மணிமொழி நூலகத்தைப் பொதுவாக்கி எழுதியமை அவரது ஒப்புரவாற்றும் பண்பின் அடையாளமாயிற்று. புகழ் வாழ்வில்-திகழ் வளத்தில் அகழ் ஆய்வில்-நிகழ் செயலிலெல்லாம் நிறைவே கண்டின்புற்ற தம் பூரிப்பை,

> "இளவரசனைவிட வாழ்க்கையை இனிதாக நடத்துகின்றேன்;
> எங்கும் எனக்கு மிகச்சிறந்த வரவேற்பும் ஒப்புரவும்
> ஆற்றப்படுகின்றன" [6]

என்று தம் நாட்குறிப்பில் 8.5.1912 ஏட்டில் பதிந்து ஒரு முத்திரையாக்கினார். இப்போது அகவை 36. 'அரசனைவிட' என்று குறிக்காமல் 'இளவரசனைவிட' என்றதன் பொருளில் பூரிப்புக் குறிப்பு மட்டுமன்று. இளமையுணர்வின் மிடுக்கும் ஒலிக்கிறது.

அடிகளாரின் இளமை உணர்வுமட்டுமன்று அவர் தம் தோற்றமும் பொருந்தும். அவர்தம், உடல் பொன்நிறம்: முகம் வட்டநிலா; பின்னுள்ள வாழைப்பூக் குடுமி பழம் மரபின் சின்னம்; அடுத்து அழுகுறுத்திய தோளைத்

தட்டும் குடுமி ஓர் அழகுப் பாகை; உடலின் முழுத் தோற்றம் ஓர் அமைப்புக் கவர்ச்சி; முழுமதிக்கும் முகில் சூழ்ந்த முக்காடு உண்டன்றோ: அதற்கு ஈடுகொடுத்தது அவரிட்டுக்கொண்ட முக்காடு; காவிப்போர்வை துறவுக்கோலத்தை நினைவுறுத்தி நெற்றி நீறால் சைவத்திருவைக் காட்டியது. இத்துறவு இளவரசர்க்கு எழுதுகோல் செங்கோல்; அஃதே தமிழ்ப்பகையைச் சாடும்போது வாள்; தமிழ் மூளையே அரச முடி; நூலறிவே அரிமானேந்திய அமளி; குரல் குயிலொடு கும்மளிக்கும் குழல் ஒலி; தனித்தமிழ் தான் குடிபுரக்கும் ஆவண முழக்கம். அவர்தம் தமிழாட்சி இந்திய நாட்டெல்லை நிறையப் பரவி இலங்கையையும் கொண்டது.

இவ்வாறு செல்வப் புகழில் பிறந்து, கல்விப் புகழில் தவழ்ந்து, இல்லறப் புகழில் நடைபழகி, சைவப்புகழில் கைவீசி, சொற்பொழிவுப் புகழில் விரைந்து, எழுத்துப் புகழில் ஆற்றொழுக்காக ஓடி, தனித்தமிழ்ப் புகழில் தந்தையாகி, தன்மானப் புகழில் தலைவனாகி, புலமைப் புகழில் செம்மலாகி, மும்மொழிப் புகழில் குரிசிலாகிப் புகழ்வாழ்வே நிறைந்த மறைமலையடிகளார் தம் புகழுடம்பை 15.9.1950 இல் அடைந்தார். 74 ஆண்டு வாழ்வில் முன்னர்க்கண்ட தமிழின ஊற்றமும் தமிழ் முத்திரையும் சைவப் பகுத்தறிவு முழக்கமும் அரும்பி, மலர்ந்து, மணந்தன.

**ஆ. அரும்பிய தமிழின ஊற்றம்**

நாகையில் சிறுவன் வேதாசலமாக வளர்ந்தபோது அங்குள்ள சூழ்நிலைகளால் அவரது உணர்வுகள் மற்றவர்களைவிட வேறுபட்டனவாகவே காணப்பட்டுள்ளன. அதிகம் வெளிப்போந்து விளையாடியோ சுற்றியோ திரியவில்லையென்றாலும் சில நாள்களில் கடற்கரைக்குச் செல்வதும் கடலின் இயற்கை அழகில் மனந்தோய்வதுமாக மகிழ்ந்துள்ளார். அச்சூழலும் அங்கு வாழ்ந்த பரதவரின் வாழ்க்கையுமே அவர் உள்ளத்தில் சில உணர்வுகளைக் கெல்லின.

அம்மக்கள் கந்தலுடையுடன் கட்டுமரத்தில் ஏறி, மீன்பிடிக்கும் வலைகளையும் சில வேளைகளுக்கு வேண்டிய பழைய சோற்றைப் பெரிய பானைகளில் அடைத்துக் கொண்டு கடலில் இறங்குவதை உன்னிப்பாகப் பார்த்துள்ளார். சற்று அளவான படகில் பலர் கூடிச் செல்வதையும் அன்னார்தம் உடல் உழைப்பையும் கூர்ந்து கவனித்துள்ளார்.

**படகர் - பரதவர்**

கடற்கரைவாழ் பரதவர் செம்படவர் எனவும் குறிக்கப்படுவர். படகுகளில் தொழில் செய்வதால் படகர் என்றும், அத்தொழிலைச் செம்மையாகச் செய்வதால் செம்படகர் என்றும் குறிக்கப்பெற்றனர். செம்படகரே செம்படவர்

ஆயிற்று. இப்போதும் நாட்டு உட்பகுதியில் மீன்பிடிப்போர் இவ்வினத்தவராகக் குறிக்கப்படுவர். நீலகிரி மலைப்பகுதியில் 'படகர்' எனக்குறிக்கப்பெறும் பழங்குடியினர் வாழ்கின்றனர். 'தென்னிந்திய குலங்களையும் குடிகளை'யும் ஆராய்ந்தெழுதிய எட்கர் தர்ஸ்டன் என்பார்.

> *"படகன் அல்லது வடுகன் என்ற சொல் வடக்கத்தியான் என்று பொருள்படும். படகர்கள் கன்னடப் பகுதியிலிருந்து வந்து குடிபுகுந்த மைசூரரின் வழித்தோன்றல்கள் என்று நம்பப்படுகின்றது "*

என்று விளக்கினார். இப்படகர் படகுத் தொடர்புடைய படகர் அல்லர்.

அவ்வறிஞரே,

> *"பகடர், பாக்டார், பக்டா" எனப் பலவாறாக வழங்கப்பெறும் தெலுங்கர்களாகிய இவர்கள் உள்நாட்டில் மீன்பிடிப்பவர்கள். நீண்ட ஈட்டிகொண்டு மீன்பிடிப்பதில் திறமை மிக்கவர்கள் என்று இவர்களைப்பற்றிக் கூறுப்படுகிறது"* [8]

என்று மற்றொரு வகை இனத்தவரைப் 'பகடர்' என்று குறிப்பிடுகின்றார். இன்னோர், படகுகொண்டு மீன்பிடிக்கவில்லையாயினும் படகுகொண்டு மீன்பிடிப்போரின் இனத்தவரே. ஆனால் தெலுங்கர் எனல் பொருந்தாது. 'பகடர்' என்பது 'படகர்' என்பதன் திரிபே. நாகைப்பகுதியிலும் கீழைக்கடற்கரைப் பகுதியிலும் வாழும் 'படகர்' தொன்மைத் தமிழகத்து நெய்தல் நில மக்களாகக் குறிக்கப்படும் பரதவராவர்.

இளைஞர் வேதாசலமாக 15 அகவையில் தமிழ் கற்கத் தொடங்கிய காலத்தில் தமிழ் மக்களின் மரபு, பண்பாடு முதலியவற்றில் கருத்தூன்றியவர் இக்கடற்கரைவாழ் மக்களை நெய்தல் நில மக்கள் எனும் தமிழ்நோக்கில் கண்டார்.

**காற்றைப் பிடித்துக் கையில் அடக்கி...**

இன்னோர் இக்காலத்திலும் கொள்ளும் பழக்கவழக்கங்கள் சொல்லாட்சிகள் கடல்நிலையறிந்த அறிவாற்றல்கள் இவர்களைத் தமிழ்நிலப் பாகுபாடாகிய நெய்தல் நிலத் தமிழர்களாகவே காட்டுகின்றது. இன்றும் மகளிரும் குழந்தைகளுங்கூட "அகழ்தல்" என்னும் தமிழ் ஒலிப்புச் சொல்லைப் பிறழாது வழங்குவதைக் காணலாம். காற்றைத் தன்வயமாக்கிக் கலஞ்செலுத்திய சோழ மன்னனை "வளிதொழிலாண்ட உரவோன்" [9] என்று புறம் குறிக்கும். இன்னோர் படகுகளைக் கடலில் செலுத்தும் திறனைப் பார்த்தால் காற்றைத் தம்வயப்படுத்திச் செயற்படும் வயத்தகு திறனைக் காணலாம். வேறுவகையில் காற்றைக் கொண்டு வானிலையை அறியும் திறன் ஒன்றை நான் கண்டுள்ளேன்.

நாகையில் நான் பணியாற்றியபோது கடற்கரைக்கண் உலாப்போவேன். ஒருநாள் மாலை, கடற்கரையில் சற்று கருத்து மப்பாக வானம் தென்பட்டது. மழை வருமோ என்று ஐயங்கொண்ட நான் அங்கு நின்ற ஒரு பரதவ முதியவரைப் பார்த்து "மழை வருமா" என்றேன். உடன் அவர் தம் கையை உயர்த்தி வானத்தில் வீசி எதையோ பிடிப்பவர் போல் காற்றைப் பிடித்து மூக்கில் கொண்டு வந்து மோந்து பார்த்து 'இன்னும் அரை நாழியில் நல்ல மழை வரும்' என்றார். அவ்வாறே மழை பெய்தது. காற்றைப் பிடித்து அதன் குளிர்ச்சி கொண்டு மழை வருகையை உறுதியாக்கும் இவரும் 'வளிதொழில் ஆள்பவர்' தான்.

அவர்கள் பேசும் உறவுச் சொற்களும், கட்டுமரம் பற்றிய சொற்களும், படகு கட்டுவதுபற்றிய சொற்களும் தூய தமிழ்ச்சொற்கள். 'பரதவர், நுளையர், நுளைச்சியர்' முதலிய இலக்கியச் சொற்கள் வழக்கில்லாது போயினும் 'மீனவர்' என்ற வழக்குண்டு.

இளைஞர் வேதாசலம் இவர்களது எளிய வாழ்க்கை முறையைக் கூர்ந்து கவனித்துள்ளார். தமிழ் பயிலத் தொடங்கியதும் இவர்கள் பற்றிய இலக்கியச் செய்திகளையும் வாழ்வியலையும் பார்த்து பண்டைத் தமிழ் நெய்தல் நிலத்தவர் என்னும் ஒருவகைக் கவனம் இவர்கள்பால் விழுந்திருக்கிறது.

இன்னோர் கடற்கரையிலேயே மணல்மேடான பகுதியில் குடிசை அமைத்துக் கொண்டு வாழ்பவர். இவர்கள் தொழிலுக்கு இவ்வாழ்வே ஏற்றது. ஊர்க்குள் இவர்கள் இடம்பெறுவதில்லை. இவர்கள் தீண்டப்படாதவராகக் கருதப்படாது போயினும் மேட்டுக்குடியினர் இவர்களுடன் கலந்து வாழ்வதில்லை. அவர்கள் அளவில் தீண்டப்படாதவராகவே கருதப்பட்டனர். அவர்தம் தொழிலால் நேரும் மீன் வீச்சு, மேட்டுக்குடியினர்க்கு அருவெறுப்பைத் தந்திருக்கலாம். எவ்வாறாயினும் மீனவர் ஒதுக்கப் பட்டவராகவே கருதப்பட்டனர். பழங்குடி மக்களைப்பற்றியும், திராவிட இனம் பற்றியும் சிறப்பாகப் படித்துவரும் திருவளர் வேதாசலத்திற்கு இவர்களைப் பற்றிய கவனம் எழுவது இயற்கையே.

இக்கவனத்தில் இவர் பழங்குடியினராகிய இவர்கள் ஒதுக்கப்பட்டவர்களாக ஊர்ப்புறத்திலேயே வாழ்வதும் மேட்டுக்குடியினர் இவர்களைத் தாழ்வாகக் கருதுவதும் மற்றொரு உணர்வை எழுப்பியது.

நாகை நகரத்தில் கி.பி. ஒன்று, இரண்டாம் நூற்றாண்டளவில் அகநகர்க்குள்ளே ஓர் ஆறு மேற்கிலிருந்து புகுந்து கிழக்காகப் பாய்ந்து கடற்கரையிலிருந்து ஏறத்தாழ 300 அடி அளவில் வடக்காகத் திரும்பி ஓடி நகரின் வடக்கெல்லையில் கிழக்கே திரும்பிக் கடலில் கலந்துள்ளது. இதனை

அடிகளாரும் தம் அறிவுக்கடல் இதழில் விரிவாக எழுதியுள்ளார்கள். இதற்குச் சான்றாக ஓர் ஐரோப்பியர் வரைந்த ஒரு படத்தையும் அப்படத்தில் இதன் தெற்குக் கரையில் நகர் நடுவே (தற்காலம் நாணயக்காரத்தெரு எனப்படும் இடத்தில்) நான்கு மாடிக்கட்டடம் இருப்பதையும் கன்னிமரா நூலகத்தில் நான் பார்த்திருக்கின்றேன். இந்தக் கடலில் கலக்கக் கிழக்கு நோக்கித் திரும்பும் வடகரையில் பார்ப்பனர் இடம்பெற்று வாழ்ந்துள்ளனர். இன்றும் அப்பகுதி 'பார்ப்பனச்சேரி' எனப்படுகின்றது.

**அக்கரை அகரம்**

ஆரியராக வந்தோர் ஊர்ப்புறத்தே ஆற்றின் அக்கரையில் குடியிருப்பு 'அகம்' அமைத்துத் தங்கினர். இஃதே 'அக்கரையகரம்' எனப்பட்டது. அத்தமிழை 'அக்கரைக்கிரகம்' எனக்கொண்டு 'அக்ரகாரம்' என்றனர். தமிழில் அக்கரகாரம் என்றொரு மூலிகை உண்டு. அது எரிச்சலைத் தரும் மூலிகை. 'அக்கரையகரம்' என்பதே உரிய சொல். இப்போதும் அகரம் என்ற பெயருடைய ஊர்கள் பல இருப்பதைக் காணலாம். ஆனால், 'பார்ப்பனச்சேரி' என்பது பழங்கால வழக்கை நினைவுபடுத்துவது.

அவ்வாறு ஊர்க்குப் புறத்தே ஆற்றங்கரையில் இடம்பெற்றிருந்தோர் திருவளர் வேதாசலம் காலத்தில் ஊர்க்குள்ளே மையமான பகுதியில் அக்கரையகரம் கொண்டு வாழ்வதும் பண்டைத் தமிழ் நெய்தல் நில மக்களாம் மீனவர் ஒதுக்கப்பட்டவராக ஊர்க்குப் புறத்தே கடல் எல்லையில் வாழ்வதும் ஒருவகை இன உணர்வைத் தந்துள்ளது. இவ்வுணர்வை இவர் வெளிப்படுத்தியுள்ளார்.

நாகை நகரில் திருநெல்வேலியிலிருந்து அரசுப்பணியாக வந்து அறமன்றத்தில் அமீனா அலுவல் மேற்கொண்டிருந்தவர் திரு மருதநாயகம் என்பார். தமிழ் ஆர்வமும், ஓரளவு புலமையும், மிகு சைவப்பற்றும், சைவசித்தாந்த அறிவும் கொண்ட இவர் நாகை வெளிப்பாளையத்தில் சைவ சித்தாந்த சபை ஒன்றை நிறுவினார். அதில் கிழமைதோறும், திங்கள்தோறும் இளைஞரான திருவளர் வேதாசலத்தைச் சொற்பொழிவாற்றச் செய்தார். அக்கூட்டங்களில் மேற்கண்ட இனஉணர்வுக் கருத்துக்களை திருவளர் வேதாசலம் ஆணித்தரமாக வெளிப்படுத்தியுள்ளார்.

இளம்பருவத்திலேயே வடமொழிப் பயிற்சியையும் தம் முயற்சியாலேயே பெறத் துவங்கினார். மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழ்ப்புலத்துக் காலத்தை ஓர் அரண்மனையாக உருவகப்படுத்திக் கண்ட திருவளர் வேதாசலம் அது பாழ்பட்ட அரண்மனையாகக் காட்சியளிப்பதாகவும் அதற்குள் சில ஒளி மாணிக்கங்கள் விளங்குவதாகவும் கொண்டு அவ்வொளி மாணிக்கங்களை நூல்களாகக் கண்டார்.

"உள் நுழைந்து அவற்றினருகே சென்று விழைந்து
நோக்க அவைஅவ்வரிய பெரிய முழு மாணிக்க மணிகள்
தொல்காப்பியம், திருக்குறள்,இருக்கு வேதம், திரிபிடகம்
முதலியனவாய் இனிது விளங்கின" [11]

என்று எழுதி இந்நூல்களின் துணைகொண்டே ஆய்வுகள் செய்ததாகவும், மேலும் துணையாகத் தமிழ் இலக்கியங்களைக் கொண்டதாகவும் குறித்துள்ளார்.

தமிழ்ப் பண்பாடுகளை-வாழ்வியலைப் படித்துணரும்போதே அவற்றின் உயர்தன்மைகளைச் சுவைத்துச் செம்மாந்துள்ளார். பழந்தமிழர் வாழ்வுடன் அவர்கள் 'திராவிடர்' எனப்பெற்ற குறிப்புகளையும் கண்டுள்ளார். இருக்கு முறையில் திராவிடர்கள் தஃச்சூக்கள் என்றும், அசுரர்கள் என்றும் குறிக்கப்படுவதைக் கண்டு அடி உணர்வில் ஓர் எழுச்சி கொண்டார். இவ்வுணர்வைத் தம் 'அறிவுக்கடல்' என்னும் இதழில் அவ்வப்போது எழுதினார்.

இருக்கு மறையில் இந்திரன் எனப்படும் ஆரிய வேந்தன் திராவிடர்களை அழித்தான் என்பதுடன் ஆரியர்கள் திராவிடரது வாழ்வியல் வளத்தைக்கண்டு பொறாமை கொண்டனர் என்பதையும் கண்டார். இருக்குமறையில் பின்வரும் தொடர்கள் உள்ளன:

"செல்வத்திற் சிறந்த தஃச்சூக்களை நீயே (இந்திரன்) தனியாய்
நின்று குலிசப்படையால் பிளந்து கொன்றனை"

"கிரியைகளைச் செய்யாத அப்பண்டை மக்கள்"

"பொன்னணிகளாலும் மணிக்கலங்களாலும் தம்மை ஒப்பனை
செய்துகொண்ட அவர்கள்"

"இந்நிலத்தின் கடைக்கோடிக் கரையில் ஊடுருவிப்
பரவி நிற்கும்அவர்கள்" [12]

என்றுள்ளவற்றைக் கண்டு பண்டைத் திராவிடரின் செல்வ வளத்தை இருக்குமறை குறிப்பதையும் ஆரியர் அரசன் இந்திரன் அவர்களை அழிக்க முந்தியதையும் கண்டார். அத்துடன் ஆதி திராவிடர் என்னும் வழக்கையும் உன்னினார். அவர்கள் தம் தமிழினத்துப் பண்டை மக்கள்வழியினர் என்பதையும் அவர்கள் தீண்டப்படாதவர்களாக ஒதுக்கி வைக்கப்பெறுதல் இடையில் ஆரியர் செய்தது என்பதையும் உணர்ந்து அவர்பால் பேரன்பு கொண்டார். அது வளர்ந்து பிற்காலத்து பல்லாவரத்தில் தம் மாளிகையில் ஓர் ஆதிதிராவிடரை மாணவராகச் சேர்த்துக்கொண்டு அவர்தம் குடும்பத்திற்கும் உதவி, ஓம்பினார்.

இருக்கு மறையை ஊன்றிப் பயின்ற அடிகளார் அதன்கண் மாந்தர் இயல்புக்கு ஒவ்வாத அருவெறுப்புப் பழக்கங்கள் மரபுகளாக உள்ளவற்றைத் தோலுரித்துக் காட்டினார்.

அத்துடன் இருக்கு மறை தமிழர்க்குப் பகையான நூல்-பகையை ஊடாடி வளர்த்த நூல் என்பதையும், அதன்கண் தமிழரை அஃதாவது திராவிடரைத் தஃக்சுக்கள் என்றும், சூத்திரர் என்றும் தாழ்வுபடுத்துவதைப் பிட்டுக் காட்டினார்.

> "ஆரியமொழியையும் ஆரிய நடையையும் பின்பற்றித் தம்மை ஆரியரெனஉயர்த்திச் சொல்லிக்கொள்ளும் இஞ்ஞான்றை மாந்தர் பலரைப் பேரற்பண்டிருந்த ஆரிய மாந்தரும் தம்மவர் அல்லாதவர் பிறர் நன்கு வாழ்வதைக் கண்டு மனம்பொறாது வயிறெரியும் வன்மையர் என்பது அவர் பாடின இருக்கு மறைப் பதிகங்களினாலேயே நன்கறியக் கிடக்கின்றது" [13]

என்று வெளிப்பாடாக்கினார்.

தமிழரைத் தாழ்த்துவதற்கென்றே நால்வருணம் கண்டு அதில் நான்காமவராகச் சூத்திரர் என்ற சொல்லால் குறித்ததை ஓர்ந்து பார்த்து அடிகளார் வடமொழி மறைகள், மனு சுமிருதி முதலியவற்றில் குறிக்கப்படும் அச்சொல் விளக்கத்தை வைத்து அச்சொற்குப் பின்வரும் ஏழு பொருட்கள் உள்ளமையைக் கண்டு மனம் வெம்பி அப்பொருள்கள் பின்வருவன என்று எடுத்துக்காட்டினார்:

"அநாகரிகர், அறிவிலி, அடிமை, குற்றேவலர், வேசைமகன், சிறைப்பட்டோர், குற்றவாளி" எனும் ஏழு பொருள்கள் கொண்ட சொல் அது என்று குறித்தார்.

மற்றொரு புது உண்மையை வெளிப்படுத்தினார். இருக்கு மறைக்குப் பின் வந்த உபநிடதங்கள் முன் மறையின் தவறான கருத்துக்களைச் சுட்டிக்காட்டி நல்ல தன்மைகளை பண்புகளை அறிமுகப்படுத்துவதை முதன்முதலில் கண்டு சொன்னவர் அடிகளாரே. அந்நற்பண்புகள் தம் மூதாதையர் இனமாகிய தமிழரின் தனிப் பண்புகளாக இருப்பவற்றைக் கண்டறிந்து வெளியிட்டார்.

## உபநிடதம் தமிழர் படைப்பு

இதில் இவர் கண்ட உண்மை வடமொழி பயின்ற தமிழ்ப் புலவன்மாரே இவ்வுபநிடதங்களை உருவாக்கினர் என்பதாகும். இருக்கு மறைக்கும் உபநிடதங்கட்குமுள்ள முரண்பாட்டைக் கண்டு தன்இனத்தாரின் தகவுகளை இனமான உணர்வுடன் விளக்கி எழுதினார். இவற்றிற்கெல்லாம் சான்றாகப் பல வரலாறுகளை எடுத்துக்காட்டியுள்ளார்.

ஆரியருக்கு மன்னர்களே அரிய கருத்துக்களை வழங்கினர் என்பதற்கு மன்னன் அசாத சத்துரு வரலாற்றிலிருந்து பாலாசி முனிவர் மகன் ஒருவனுக்கு அவனறியாத மெய்ப்பொருள் உண்மைகளை அறிவுறுத்தியதைக் காட்டியுள்ளார்.

தமிழ் மன்னர் 'அரசினியர்' எனப்பட்டனர். அதனையே இருக்குமறை "ராஜ்ந்யர்" என்பதையும் அவரையே 'அசுரர்' என்றதையும் குறிப்பிட்டு 'அரசர்' என்பதையே 'அசுரர்' என்று குறித்து அவர் 'அரக்கர்' என்று கூறியதையும் வெளிப்படுத்தினார்.[14]

இவ்வுணர்வுகளின் உந்துதலால் தம் இல்லத்து நிகழ்ச்சிகளை இறையுணர்வுடன் தமிழிலேயே தமிழர்களைக் கொண்டு நிகழ்த்தினார். தம் மாளிகையில் உருவாக்கிய அம்பலவாணர் கோயிலமைப்பிற்குக் குடமுழுக்கு விழா ஏற்பாடு செய்து தமிழ்ச் சைவ ஓதுவார்களைக் கொண்டு தமிழிலேயே நிகழ்த்தினார்.

கடலூர் சைவத்திருமடத்து ஞானியாரடிகள்பால் நேயம் பூண்டு, தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் துணையுடன் பார்ப்பனரும் வடமொழியும் அற்ற தமிழ்த் திருமணங்களை நிகழ்த்தத் திட்டங்கள் தந்ததுடன் தம் மகளார் திருமணத்தை அவ்வாறே நிகழ்த்திக் காட்டினார்.

நாகை வாழ்க்கையில் அதிலும் கட்டிளமைப் பருவத்தில் முளைத்த அல்லது அரும்பிய இந்த இன ஊற்றம்-தமிழின ஊற்றம் சென்னை வாழ்க்கையில் ஆணிவேர் ஊன்றியது. தளிர்த்துத் தழைத்து மலர்ந்தது எனலாம். இவ்வுணர்வு வெடித்து மணம்பரப்ப மதுரை நிகழ்ச்சி ஒன்று களமாயிற்று.

மதுரையில் தமிழ்ப்புலவர் நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவிய தோன்றல் பாண்டித்துரையார், வேதாசலனார்பால் பேரார்வமும் பெருமதிப்பும் கொண்டிருந்தார். சங்கத்து மூன்றாம் ஆண்டுவிழாவிற்கு அழைத்துச் சொற்பொழிவு அமிழ்தம் மாந்தித் திளைத்தார்; நல்ல சிறப்பளித்துப் போற்றினார். அவர் தமிழ்ப் புரவலர் மட்டுமல்லர்; தமிழ்ச் சான்றோருமாவர்; அத்துடன் பின்னிப் பிணைந்த தமிழ்ப் புலமையும் சைவப் பேரார்வமும் செறிந்தவர். இவற்றிற்கெல்லாம் இழையோட்டமாகத் தமிழின உணர்வும்-ஏன் ஊற்றமும் உள்ளவர்; உள்ளுணர்வில் மிக்கவர்.

தம் தமிழ்ச்சங்க நான்காம் ஆண்டுவிழாவை அறிஞர் திரு. வி.கனகசபைப் பிள்ளை அவர்கள் தலைமையில் நிகழ்த்தினார். இவ்விழாவிற்குப் புலமைத்திரு வேதாசலனாரையும் அழைத்திருந்தார்.

இந்நிகழ்ச்சிதான் தமிழ்த்திரு வேதாசலனாரின் ஊற்றத்தை வெடிக்கச் செய்தது. அதிலும் தலைமையேற்றவாறு தலைமையுரையே வெடிப்புத் திரிக்குப் பொறி ஏற்றியது. அறிஞர் வி. கனகசபைப்பிள்ளையவர்கள் "1800 ஆண்டுகளுக்குமுன் தமிழர்" என்னும் அரிய ஆங்கில நூலை எழுதியவர். சென்னையில் தலைமை அஞ்சலகத்தில் மதிப்பார்ந்த அலுவலராகப்

பணியாற்றியவர். யாழ்ப்பாண மூதாதையரைக் கொண்டவர். தமிழ்ப்புலமையில் குறைவில்லாதவர். அவர் ஆற்றிய தலைமையுரை எவ்வகையிலும் தமிழுக்குச் சிறப்பளிப்பதாக இல்லை என்பதை விடத் தமிழைத் தாழ்த்துவதாக அதன்மூலம் தமிழ்ச் சான்றோரை இழிவுபடுத்துவதாக அமைந்தது. அப்பேரரங்கில் பெரும்புலவர்கள் இரா. இராகவையங்கார், திரு நாராயண ஐயங்கார், உ.வே. சாமிநாத ஐயர் முதலியோர் பங்கேற்றனர். தமிழ்த்திரு வேதாசலனாரும் பங்கேற்றார். இது நிகழ்ந்தது 1905-இல். அப்போது அவருக்கு அகவை 29. கட்டிளமையின் மிடுக்கு புலமை மெருகுடன் விளங்கிய பருவம்.

தலைமையுரையில்தான் என்னதான் பொதிந்திருந்தது ? அக்காலச் சூழலை நோக்க ஒன்றும் புதிய கருத்தில்லை. பேரவையில் இருந்தோர்க்கும் வேறுபட்ட கருத்தில்லை இருவர் தவிர. மன்றத்தில் வேறுபட்ட கருத்துள்ளோர் அமர்ந்திருந்தாலும் பெரும்புலவர்கள் பேச்சில் மூழ்குபவர்கள். கருத்தென்ன ?

“தொல்காப்பியர் திரணதூமாக்கினி என்னும் ஆரியர்; அகத்தியரும் அவ்வாறே. திருவள்ளுவரும் ஸ்ரீவல்லபரே. இன்னோரன்ன ஆரியப்பார்ப்பனர் செய்திருக்கும் தமிழ்ப்பணிக்கு தமிழர் மிகவும் கடமைப்பட்டவர்கள்.” இதுதான் கருத்து.

“........நான்கு கோடிப்
பொதுவான தமிழரிலே
பொன்னான தமிழ்வெறுத்தோர்
பெரும்பாலோராம்”[15]

என்று பாவேந்தர் பாடியது போன்று தமிழகத்தில் தமிழ் படித்த பெரும்பாலோர் ஆரியர்க்குத் தமிழர் கடமைப்பட்டவர் என்னும் புலமையில் ஊறியவர்கள்.

பாவேந்தர் சுட்டிய பெரும்பாலோரினும் ஒதுங்கித் தனியே நின்ற தமிழர் வேதாசலனார் இன்னும் மறைமலையடிகள் ஆகவில்லை. இளமை முடியில் நின்று ‘ஆரியர்க்குக் கடமைப்பட்டவர் தமிழர்’ என்பதில் முற்றிலும் மாறுபட்டவர். சென்னைப் பேச்சுகளில் இதனை அவ்வப்போது வெளிப்படுத்தியும் வந்தார். இதனை மனத்துள்கொண்டே அறிஞர் வி. கனகசபை அவர்களால் அவ்வாறு தலைமையுரை நிகழ்த்தப்பட்டதோ என்றுகூட ஐயுறலாம்.

தமிழின ஊற்றமுள்ள வேதாசலனார் அத்துணைக் கருத்துக்களையும் தக்க சான்றுகளுடன் மறுத்தார்; வன்மையாக மறுத்தார்; கடுமையாக மறுத்தார்; வைரம் பாய்ந்த சான்றுகள் காட்டினார். இருக்கு மறையிலிருந்தும் பிற வட நூல்களிலிருந்தும் அவற்றிற்கேயுரிய உரிமைக் கருத்துக்களை எடுத்துக்காட்டி, தொல்காப்பியம், திருக்குறள் பதித்துள்ள அவற்றிற்கு முரண்பட்ட கருத்துக்களை எடுத்துவைத்து மறுத்தார். பாணிணி இயற்றிய ‘அட்டாத்தியாயி’ என்னும் வடமொழி இலக்கண நூலுக்கு நானூறு

ஆண்டுகளுக்கு முந்தியது தொல்காப்பியம் என்னும் வடமொழி, தமிழ், ஆங்கிலம் ஆகிய நூல்களிலிருந்து கருத்துக்களையும் பல்வகை ஆய்வாளர் கருத்துக்களையும் எடுத்துக் காட்டினார்.

அவை களைகட்டியது. வருங்கால அடிகளாருக்கும் களைகட்டியது. 'வடமொழி, எழுத்தில்லாமல் இருந்த காலத்தில் எழுத்திற்கு உருவம் காட்டியது தொல்காப்பியம்' என்று காட்டினார். 'தமிழர் பினீசியரின் வழிவந்தவர் என்னும் கருத்தை' உடைத்தார். 'பணிகர் என்னும் தமிழரே பரவிச் சென்று பினீசியர் ஆயினர்' என்று மொழி மூலத்துடன் காட்டினார். 'பணிகரே வணிகர்' என்று காட்டினார்.

'இருக்கு மறையில் வரும் 'மனா' என்னும் சொல்கொண்டு தமிழர்க்கு நிறுவை முறையைச் சொல்லிக் கொடுத்தவர் ஆரியர்' என்று வைக்கப்பெற்ற கருத்தை 'மனா-மணங்கு' [16] என்று இக்காலத்தில் வழங்கப்பெறும் நிறையளவை மணங்கு என்னும் சொல்லின் முன்னுருவமே என்று காட்டித் தகர்த்தார்.

அவை மேடை மட்டுமன்று மன்றத்திலும் கலகலப்பேறியது. பாண்டித்துரையார் உள்ளம் குளிர்ந்ததை முகம் எடுத்துக்காட்டியது. புலமைக்கருத்துக்களில் கருண்டு கிடந்த மன்றத்துப் பொதுமக்கள் வரவேற்பு ஆரவாரம் செய்தனர்.

இந்திய நாட்டின் முதல் எழுத்துமுறை தமிழரால்தான் துவங்கியது என்பதற்கு இருக்கு மறை தொடங்கி பாணினி இலக்கணம் தொடர்ந்து பல சான்றுகள் காட்டியதுடன் ஆங்கில அறிஞர் ஆய்வுக் கருத்தொன்றையும் எடுத்து வைத்தார். அது இது:

> "தற்போது கிடைத்துள்ள சான்றுகளை வைத்துக்கொண்டு பார்த்தால் இந்தியாவின் எழுத்துமுறை ஆரியரது அன்று. இந்தியாவில் இவ்வெழுத்துத் தொடக்கம் திராவிட வணிகர்களால் அறிமுகப்படுத்தப்பட்டதே"
>
> *"All the present available evidence tends to show that the Indian. alphabet is not Arian at all; that it was introduced into India by Dravidian Merchants"*[17]

இக்கருத்தை நம்காலத்தில் வாழ்ந்த வடமொழிப் பேராசிரியர்-அகழ்வாராய்ச்சிப் பேராசிரியர் இராகுல சாங்கிருத்தியாயர் தம் 'வால்காவிலிருந்து கங்கைவரை' என்னும் நூலில் கதைப்பாங்கில் உறுதியாகவும் நயமாகவும் உண்மை காட்டியுள்ளார். வரலாற்று அடிப்படையில் வடபுலத்து வைசாலி நாட்டு ஆசானால் செய்திகள் அறிந்து வருமாறு

விடுக்கப்பெற்ற இரண்டு மாணவர்கள் உரையாடலாக வைத்து, தெற்கிலிருந்து வந்த மாணவன் கூற்றாக,

> *"வாய் திறந்து பேசாமலே அவர்களால் சம்பாதிக்க முடிகிறது. மண், கல், தோல் முதலிய ஏதாவது ஒன்றில் ஓர் அசுரன் (திராவிடன்) சில அடையாளங்களைக் கிழித்து மற்றவனிடம் கொடுப்பான். அடுத்தவன் எல்லா விசயங்களையும் தெரிந்துகொள்வான். நாம் இரண்டு மணி நேரம் பேசியும் விளங்கவைக்க முடியாத ஒரு விசயத்தை அவன் இரண்டு மூன்று கோடுகளை இழுத்து விளங்க வைத்துவிடுகிறான். இந்த விசயத்தை ஆரியர்களாகிய நாம் இதுவரை அறியவே மாட்டோம். இப்பொழுதுதான் நம்முடைய ஆரியர் இந்தக் கோடுகளைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால், வருசக்கணக்காக முயன்றும் அவர் இன்னும் பூரணமாகக் கற்றுக்கொள்ள முடியவில்லை"*[18]

என்று சான்றுகளுடன் காட்டியுள்ளார். இதனை இங்கு நான் காட்டுவது பொருத்தமானதே.

தொடர்ந்து சொற்பொழிவுகளில் தமிழின ஊற்றத்தை மலர்த்தினார்.

'தமிழர்-திராவிடர், உலகில் முதன்முதலில் தோன்றிய முதற்குடியினர்' என்றும் 'அவர் பரவியே பிற இனத்தாரைத் தோற்றுவித்தனர்' என்றும், 'அவர்தம் தமிழ் மண் நாகரிகமே பண்பாடுடையது' என்றும், 'இதனைக் கண்டு மேலையாராய்ச்சியாளராம் மாக்சுமுல்லர், ஈராசு, கால்டுவெல் முதலியோர் பலபடப் பாராட்டி எழுதியுள்ளனர்' என்றும் 'அழிந்த நூல்கள் போக எஞ்சியவற்றில் முழு நூலாகக் கிடைத்துள்ள தொல்காப்பியம் இற்றைக்கு 4500 ஆண்டுகட்கு முற்பட்டதென்றும் ஆணித்தரமாகக் கூறினார். கி.பி. 1400 -க்கு முற்பட்டதாக வரையறுக்கப் பெற்றுள்ள பாரதப் போர்க்காலத்தில் இரு பகைப்படைகளுக்கும் பண்பாட்டுடன் சோறளித்த உதியஞ் சேரலாதன் திறத்தையும் சோறளித்த அமைதித் தகவையும் காட்டி அதற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் தோன்றி வளர்ந்த பண்பாட்டின் வழி வகைகளை விவரித்து நிறுவினார்.

கூடுபிடித்த கூட்டம் தெளிவுபெற்று நிறைந்தது. தமிழ்த்திரு பாண்டித்துரையார் பலபடப் பாராட்டினார். உண்மையாகவே இப்பொழிவு தமிழகத்தில் ஒரு விழிப்புணர்வைத் தூண்டியது. தமிழனின் தனித்தகவுகளை நிறுவும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டார். இத்தமிழ்ச் சங்கத்துப் பொழிவே பின்னர் 'பண்டைத் தமிழரும் ஆரியரும்' என்னும் நூலாயிற்று.

தொடர்ந்து சென்னையில் தமிழர் நாகரிகம்', 'திராவிடர் நாகரிகம்' முதலிய சொற்பொழிவுகளும், 'சீர்திருத்தக் குறிப்புகள்' என்னும் வெளியீடும் அடிகளாரின் தமிழ் ஊற்றத்தை வைரப் பதிவாக்கின.

கடவுட்கொள்கை, சமயக்கருத்துக்களில் மாற்று முனைகளில் நின்ற பெரியார் ஈ.வே.ரா. அவர்கள் அடிகளாரை மிகப் போற்றியதும், 'அடிகள் என் வலக்கை' என்றதும், அடிகளாரின் தமிழின ஊற்றத்தின் முத்திரை எனலாம். கடவுட் கொள்கையில் ஊறிநின்ற அடிகளார் அக்கொள்கையைத் தகர்க்க நின்ற பெரியார் அவர்களைத் தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டுவிழாவில் பார்வையாளராகக் கண்டபோது அவரை மேடைக்கழைக்கப் பெரியார் அடக்க உணர்வால் முன்னே அமர்ந்தமையும் இத்தொடர்பில் நினைவுகூர்தற்குரியது. இத்தொடர்பு இந்தி எதிர்ப்பியக்கத்தில் இறுகியது.

அடிகளார் தம் ஊற்றப் பதிவத்தில் மற்றொன்றைக் குறிப்பிட வேண்டும். அது அடிகளாரின் கம்பராமாயணக் கண்டனம்.

இலக்கியங்களை-அது தமிழ் இலக்கியமாயினும், வடமொழி, ஆங்கில இலக்கியங்களாயினும் மதித்துப் போற்றிப் பயின்ற அடிகளார் அதனினும் ஒரு வரையறை கொண்டார். உண்மைக்கு மாறான பொய்க்கதைகள் கொண்டவை தமிழகத்திற்குத் தாழ்வு காட்டுபவை என்ற குறிப்பில் பல தமிழ் இலக்கியங்களையும் ஒதுக்கினார்; மறுத்தார்; கண்டித்தார். அவற்றுள் ஒன்று கம்பராமாயணம். 'அது வைணவ சமயக் கதைகொண்டது என்பதால் கண்டிக்கவில்லை. அக்கதை மெய்யற்றது; கற்பனை; கற்பனையிலும் திராவிடரைத் தாழ்வுபடுத்துவது; தமிழ் இனத்தாரைக் குரங்குகளாகப் பேசுவது; மூல முதற் கடவுள் வழிபாட்டை மறக்கச் செய்வது' எனும் கோட்பாட்டில்தான் கண்டித்தார்.

அடிகளார் சைவ சமயத்தில் ஊன்றி நின்றவராயினும் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் முதலிய குறிப்பிடத்தக்க தமிழ் வைணவ நூல்களின் திறத்தைச் சுவைத்துள்ளார்; ஓரளவில் பாராட்டியும் உள்ளார். சைவ நூல் என்பதற்காக அது பொய்க்கதைகளை கட்டிக் கூறுவதாயின் வெறுத்து ஒதுக்கினார். கச்சியப்பர் என்னும் சைவப் பெரியாரால் எழுதப்பட்டுத் தமிழ்ச் சைவர்களாலும் பிறராலும் விரும்பியும் போற்றியும் படிக்கப்பெற்ற கந்தபுராணத்தை அடிகளார் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. "கந்தபுராணப் புளுகு" என்றொரு நாட்டு வழக்கே உண்டு. அது முருகனைப் பற்றிய கதைகொண்டதாயினும், அதில் கட்டுக்கதையே வளர்கின்றது. இதனால் தேர்ந்த நூலன்று என்பதே அடிகளார் கருத்து. இதனை வெளிப்படையாகச் சொல்லவும், எழுதவும், நேரம் வாய்க்கும்போது சொற்பொழிவில் குறிக்கவும் தயங்கவில்லை. அதிலும் தமிழினத்தைத் தாழ்த்தும் குறிகள் உண்டு என்றே அதனை ஒதுக்கினார். இதுபோன்றே கம்பராமாயணத்தையும் கண்டித்தார். இஃதும் அடிகளாரது தமிழின ஊற்றத்தின் பதிவேயாகும். இவ்வூற்றத்திற்கு நிறைவாக ஒன்றைக் குறிக்க வேண்டும்.

'நான்மறை' என்பது தமிழில் உருவான மறைகள் நான்குதான்: வேதம் எனப்பெறும் வடமொழி நூல்கள் அன்று' என்பதே அடிகளாரின் ஆழ்ந்த கருத்து. இதற்குக் காட்டிய காரணங்கள் 'வடமொழி வேதங்கள் நான்கும் வேறுபட்ட சில இடங்களில் மாறுபட்ட கருத்துக்களைத் தருபவை; அவை தமிழினத்திற்கு ஒவ்வாதவை; தமிழினத்தைத் தாழ்த்துபவை' என்பனவற்றைத் தம் நூல்களில் ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளார்.

## ஆரியர் வேறு பார்ப்பனர் வேறு

மற்றும் அவர் கருத்து ஒன்று; அவ்வடமொழி வேதங்கள் பல முனிவர்களால் கூறப்பட்டும், மனப்பாடம் செய்யப்பட்டும் தொகுக்கப் பெற்றவை. அவற்றின் பதிகங்களில் சில வடமொழி பயின்ற தமிழ் முனிவர்களால் எழுதப்பெற்றவை என்பது அவர் தம் கருத்து. அதற்குச் சான்றாக அவர் கொண்ட அடித்தளக் கருத்து, 'ஆரியர் வேறு, பார்ப்பனர் வேறு, தமிழரில் வடமொழி கற்று அதிலுள்ள மரபுகளில் மனம்பற்றித் தம்மை ஆரியர்களாக்கிக் கொண்டு அவர்போல் மற்றவரைத் தாழ்வாகக் கருதியும், அதனால் தாம் உயர்ந்தவர் என்று கொண்டு வாழ்ந்தவர்' என்பார். 'பார்ப்பனரென்று சொல்லிக்கொண்டு கோயிலில் வழிபாடு செய்யும் குருக்கள் உண்மையில் பார்ப்பனரல்லர். பண்டைக்கோயில்களில் பூசெய் செய்த தமிழ் இனத்தவரே' என்கின்றார். இஃது பெருமளவில் உண்மையே. நற்றிணை காட்டும் "குயவர் கோயிற்பூ செய்பவர். அவர் தலையில் நொச்சிப் பூவைச் சூடிக்கொண்டு தெரு வழிச் சென்றால் ஊர் மக்கள் அதனைக் கோயில் திருவிழாவின் அறிவிப்பாகக் கொள்வர்' என்னும் கருத்து ஈண்டு நோக்க வேண்டியதாகின்றது. குயவர்கள் பூசெய்து வந்த பழநிக்கோயிலுக்கு இராமநாதபுரம் திவான் திரு. சிவராமையர் என்பார் தம் வயிற்றுநோவு தீரச் செய்த ஏற்பாடும் இங்கு நினைக்கத்தக்கது. அவர் தம் வயிற்றுவலி தீரப் பழநிக் கோயில் திருநீற்றை அருந்தலாம் என்று கூறப்பெற்றது. "அங்கு கீழ்இனத்துக் குயவர் பூசெய் செய்வதால் அவர் வழி நீறு பெறுவது மேலினத்தவராகிய நமக்கு ஏலாது" என்று மேலினத்தார் கூறியதால் உடன் திவான் பூசெய் செய்துவந்த குயவர் குடும்பத்திற்கு மாற்றாக ஐந்து ஐயர் குருக்கள் குடும்பத்தை அமைத்தார். இஃதும் தமிழர் குருக்களாயிருந்து ஐயருக்கு மாறிய தொடர்பைக் குறிக்கும்.

எனவே, 'பார்ப்பனர் என்போர் ஆரியரல்லர்; தமிழரின் மாற்றுருவே' என்றார் அடிகளார். 'இருக்கு மறை தோன்றுவதற்கு முன்னரே தமிழில் நான்கு மறைகள் இருந்தன' என்றும், அவற்றையே 'சங்க இலக்கியங்களும், தேவார திருவாசகங்களும் நான்மறை, நால்வேதம் என்றெல்லாம் குறித்தன' என்றும், பின்னரே 'இந்நான்கைப் போன்று வடவேதமொழியில் வேதங்கள் பலரால் கூறப்பட்டுப் பின்னர் வேதவியாசரால் நான்காகப் பகுக்கப்பட்டன' என்பதே அடிகளாரின் முடிந்த முடிபு.

**தமிழ் நான்மறை**

இம்முடிபிற்கு இவர் சான்றுகளுடன் கூறும் விளக்கத்தைச் சுருக்கமாகக் காணலாம். "கல்லாலின் கீழிருந்து நால்வர்க்கு அறமுரைத்தவை தாம் நான்கு மறைகள். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் ந ாற்பொருள்கள்தாம் அந்நான்கறம். நால்வர்க்கு உரைத்ததையும் எண்ணளவில் ஒரு பொருத்தமே. இருக்கு முதலிய வடமொழி வேதங்களில் இந்நான்கு பொருள்களுமோ, நால்வர்க்குச் சிவபெருமான் அறம் உரைத்ததோ எங்குமில்லை. அவை நான்கும் வேதம் தோன்றியதற்கு வெவ்வேறு வகைப்பட்ட, மாறுபட்ட, முரண்பட்ட கருத்துக்களைத் தருகின்றன. பிரமன் உரைத்தான் என்கிறது ஒன்று; பிரமன் தாடி மயிரிலிருந்து நான்கு வேதங்கள் தோன்றின என்கின்றது மற்றொன்று. பல முனிவர்களால் அவ்வப்போது கூறப்பெற்று அவ்வப்போது தொகுக்கப்பெற்றன வேதங்கள் என்கின்றது ஒன்று. இவ்வாறு பலவகைப்பட்ட பொருந்தாத கருத்துக்களையே தருகின்றன. மற்றும் 'வேதம்' என்னும் சொல்லுக்கு 'மறைபொருளான கருத்துக்களை-அறங்களைக் கொண்டது" என்பது பொருள். அம்மறைபொருள்களையே கல்லாலின் கீழிருந்து விளக்கினார். 'வேதம்' என்னும் சொல்லும் தமிழ்ச்சொல்லே. இதற்கு 'வே' என்பது முதனிலை. 'வேய்தல்' என்னும் சொல்போல பல சொற்கள் இம்முதனிலையில் பல்கின. 'வேய்தல்' என்றால் மூடி மறைத்தல் என்ற கருத்து. இதுபோன்றே 'வே அம் இடையில் 'த்' எழுத்துப்பேறு கொண்டு 'வேதம்' என்று ஆகி 'மறைபொருளைக் கொண்டது' என்னும் பொருளைத் தந்தது. அறிவுறுத்தியதால் அஃதொரு அறிவு நூல். இருக்கு வேதத்தில் ஓரிடத்தில் மட்டும் வரும் 'வேதம்' என்னும் சொல்லுக்கு அறிவுநூல் என்னும் பொருளில்லை. "புல் கட்டினால்" என்னும் பொருளிலேயே உள்ளது. பாரதத்திற்கு முற்பட்ட பாடலாகிய முரஞ்சியூர் முடிநாகராயர் பாடலில் வரும் "நால் வேதநெறி திரியினும்" என்பதில் தமிழ் நான்மறைகளே குறிக்கப்படுகின்றன. இதற்குப் பின்னரே பாரதம் பாடிய வியாசரால் நான்காக வடமொழி வேதம் வகுக்கப்பெற்றது.

இவ்வாறு விரிவாக வடமொழி-வேதமொழிகளைச் சான்றாகக் காட்டி விளக்கியுள்ளார். இவற்றைக் கொண்டு நோக்கினால் பாவேந்தர் பாடிய, "மறைநூல் என்பது தமிழ்நான்மறை நூல்" என்றும் "முறையாய் இவைகட்குச் சான்று காட்டி முழங்கிய புலவன்" என்றும் பாடியமை பொருந்துகின்றது.

அண்மை நாளில் நம் நகர் திரு. உ. சுப்பிரமணியம் அவர்கள் 'நான்மறை எனப்படுவது தமிழ்மறைதான்' என்று நூல் எழுதி வெளியிட்டதையும், அதற்குத் தமிழ்ப் பல்கலைக்கழகம் பரிசு வழங்கியதையும் அறிவோம்.

இவ்வகையிலும் அடிகளார் தமிழ் நான்மறைகள் என்று தமிழனின் படைப்பைக் காட்டித் தம் தமிழின ஊற்றத்தை நிலைநாட்டினார். அடிகளாரது இவ்வாறு வளர்ந்த பாங்கையெல்லாம் கருதித்தான் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள்,

> "மறைமலையடிகள் பல்வேறு கருத்துக்களை - தமிழன் தனியானதோர் மாண்புக்கு-பண்புக்குச் சொந்தக்காரன் என்பதை வலியுறுத்தும் கருத்துக்களை மிகத் தெளிவாக எடுத்துக் கூறினார்"[19]

என்று பதிவாக்கினார். இது அடிகளாரின் தமிழின ஊற்றத்திற்கு மறு முத்திரை. இம்முத்திரைகளை அழிக்காத முத்திரை அடிகளாலேயே குத்தப்பட்டது. அதுதான் தமிழ் முத்திரை. அதன் முழுஉருவம் தனித்தமிழ் முத்திரையாகும்.

### இ. தமிழ் முத்திரை

இத்தனித்தமிழ் முத்திரை குத்தும் அச்சுக்கட்டையை உருவாக்கியது அடிகளார் தம் மகள் செல்வி நீலாம்பிகை. இம்மங்கை அடிகளார் தமிழ்ஊற்றத்தில் சமமான நிலையுள்ளவர். இளமையிலேயே தந்தையார் போன்று அறிவுத்திறமும் நுணுக்கமும் உடையராகத் திகழ்ந்தார்.

பல்லாவரம் மாளிகையில் ஒருநாள் மாலை அடிகளார் தம் மகள் செல்வி நீலாம்பிகையுடன் உலவி வரும்போது வழக்கம்போல் சைவப்பாடலைப் பாடி வந்தார். அன்று "பெற்ற தாயினை மகமறந்தாலும்" என்னும் பாடலைப் பாடினார். இதில் இரண்டாவது அடியாகிய "உற்ற தேகத்தை உயிர்மறந்தாலும்" என்று பாடியவர், அங்கு நிறுத்தி நீலாம்பிகையைப் பார்த்து, "நீலா, உற்ற தேகத்தை என்பதிலுள்ள 'தேகம்' என்பது வடசொல்; அதனை நீக்கி 'யாக்கை' என்னும் தமிழ்ச் சொல்லை அமைத்தால் ஓசையும் நன்றாக இருக்கிறது; சொல்லும் தமிழாகும்" என்றார்.

கேட்ட தமிழ்மகள் செல்வி நீலாம்பிகை "ஆம், அப்படியே செய்யலாம்; அப்படியே பாடலாம். இதுபோன்றே நாம் பேசும்போதும், எழுதும்போதும் வடசொல் கலவாமல் தனித்தமிழிலேயே பேசுவதும் எழுதுவதும் இனிமையும் முறையும் ஆகும்" என்றார். கேட்ட அடிகளார், 'தமிழில் வடமொழி கலப்பதால் தமிழின் தூய்மை மட்டுமன்று ஓசைஇனிமையும், சில இடங்களில் பொருள் சூழலும் கெடுகின்றன. இனி இவ்வாறே செய்வோம்' என்றார்.

அடிகளார் இதனை ஒரு நடைப்போக்கில் ஒரு கருத்தாகத்தான் கூறினார். செல்வியோ அதனைக் கொள்கையாக்கிவிட்டார். 'தனித்தமிழ்' என்னும் சொல்லும் உருவாகச் செய்தார். அவருக்கு அப்போது அகவை 13. இது நிகழ்ந்தது 1916-இல் அதுமுதல் செல்வியும் அடிகளாரும் வடமொழி கலவாத ஆங்கிலம் கலவாத தனித்தமிழிலேயே உரையாடினர்; பேசினர்; எழுதினர்.

**தனித்தமிழாக மாற்றம்**

செல்வியார் ஒரு படி மேலே போய், தனனுடன் பிறந்தார் பெயர்களில் செல்வன் திருநாவுக்கரசு தவிர மற்றைச் சொற்கள் வடமொழியில் இருப்பதை ஓர்ந்து கண்டு அவற்றையெல்லாம் இவ்வாறு மாற்றினார்:

| | | |
|---|---|---|
| ஞானசம்பந்தம் | - | அறிவுத்தொடர்பு |
| மாணிக்கவாசகம் | - | மணிமொழி |
| சுந்தரமூர்த்தி | - | அழகுரு |
| திரிபுரசுந்தரி | - | முந்நகரழகி |

என்றெல்லாம் மாற்றினார். அவரவரும் பிறரும் முன்னமைந்த பெயரிலேயே வழங்கிக்கொள்ளினும் செல்வியார், தாம் அமைத்த தனித்தமிழ்ப் பெயர்களாலேயே குறித்தும், அழைத்தும் மகிழ்ந்தார்.

மற்றும், 'தனித்தமிழ்க் கட்டுரை' என்னும் நூலையும் எழுதினார். மேலும் 12 நூல்களைத் தனித்தமிழிலேயே காலப்போக்கில் எழுதினார். "வடசொற்றமிழ் அகர வரிசை" என்னும் அகரமுதலி ஒன்றையும் மற்றவர்க்குத் தனித்தமிழ்ச் செயற்பாட்டிற்குத் துணையாகத் தொகுத்தார். கருத்தைக் கொள்கையாக்கிய செல்வியார் கொள்கையைக் கடைப்பிடியாக்கினார்.

அடிகளாரும் தம் பெயரை முன்னே குறித்தது போன்று மறைமலையடிகள் என்று மாற்றிக்கொண்டு அதனையே கையாண்டு வந்தார். மற்றும் தாம் வெளியிட்டு வந்த "ஞானசாகரத்தை "அறிவுக்கடல்" என்றும், "சமரச சன்மார்க்க நிலைய"த்தை, "பொதுநிலைக் கழகம்" என்றும், "மாணிக்கவாசகர் நூலகத்தை" "மணிமொழி நூலகம்" என்றும், "சித்தாந்த தீபிகை"யை "உண்மை விளக்கம்" என்றும் மாற்றியமைத்தார். உரையாடலிலும் பேச்சிலும் எழுத்திலும் இதனை விடாப்பிடியான கொள்கையாகக் கொண்டார்.

முன்னர் எழுதி வெளியிட்ட நூல்கள் மறுபதிப்பிற்கு வரும்போது அவற்றிலமைந்த வடசொற்களையெல்லாம் நீக்கி உரிய இனியதமிழ்ச் சொற்களையே பெய்து பதிப்பித்தார். இதனை நூல்களின் முன்னுரையில்,

"இந்நூல் நடையின்கண் ஆங்காங்கு விரவியுள்ளசிற்சில வடசொற்களும்அம்முன்றாம்பதிப்பின்கண் முற்றும்களைந்துவிடப்படும்"[20]

என்று குறித்தார்.

தாம் நூல்களைப் பயிலும்போதே இக்கருத்து தோன்றியதாகவும் அதற்கொரு முறை காணவேண்டும் என்றும் கவனத்திற் கொண்டிருந்த அடிகளார் இந்நிகழ்ச்சி முதல் இம்மாற்றத்திற்கு விளக்கம் தரவும் மறக்கவில்லை.

செல்வி நீலாம்பிகையால் துவங்கப் பெற்ற தனித்தமிழ்க் கொள்கை கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டுவிழா மேடையை முடுக்கிவிடும் களமாக்கிக் கொண்டது. 1927-இல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் 15, 16 ஆவது ஆண்டு விழாக்கள் இணைந்து ஒரு விழாவாகக் கொண்டாடப் பெற்றன. அடிகளார் தலைமைக்கு அழைக்கப் பெற்றிருந்தார். பேராசிரியர்கள் ந. மு. வேங்கடசாமி நாட்டார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், தமிழவேள் உமாமகேசுரனார், கவியரசு வேங்கடாசலனார் முதலிய பெருமக்கள் பங்கு கொண்டனர். அவ்விழாவில் இரண்டாம் நாள் முடிவுரையில் அடிகளார்,

> " 'ஆ' என்றால் பலருக்கு விளங்காது. 'பசு' என்றால் விளங்கும். 'ஆ' என்பது தனித்தமிழ்ச் சொல். 'தண்ணீர்' என்று உரையாது. நம் மக்களிற்பலர் 'ஜலம்' என்கின்றனர். ஐயகோ! மலையாளிகள் கூட 'வெள்ளம்' என்னும் தனித்தமிழ்ச் சொல்லை வழங்குகின்றனரே"

என்றார் எதிரே அமர்ந்திருந்த பண்டிதமணி அவர்கள்,

"அப்பரடிகளே" சலம் பூவொடு தூபமறந்தறியேன்" என்று 'ஜலம்' என்ற சொல்லைத் தமிழுருவில் வழங்கியுள்ளாரே" என்றார்.

அத்தடைவிடை பெருகியது. இதற்கும் அடிகளார்,

> " 'சலசல' என்னும் துணையுடன் ஓடுதலின் 'சலம்' எனப்பெற்றது. எனவே, சலம் தமிழ்ச்சொல். அது வடமொழியாகுமானால் 'நீர்' என்று தனித் தமிழில் வழங்கலாம்"

என்றனர், தமிழ்ப்புலவரே அறிஞர் பேரறிவுடைய பெருமகனே இவ்வாறு கூறுவதைப் பொறுக்க இயலாதவராகச் சற்று உணர்ச்சிவயப்பட்டவராக

> "தமிழிலே கடவுளை வணங்கக்கூடாது என்று கூறும் பார்ப்பனர் உளர். பெரியோர் தமிழைப் பழித்துப் பாழ்செய்தால் அது குற்றம் இல்லையோ? இப்படிப்புலவர் பலர் தனித்தமிழுணர்ச்சி தகுதியற்றதென்று மொழிந்து தமிழைப் பாழாக்கினால், ஐயகோ! என்செய்வது:"[21]

என்று சற்று உயர்த்திய குரலில் முழங்கினார். தொடர்ந்த சொற்போரில் அடிகளார், "பழம்புலவர்கள் இதில் தவறே செய்துள்ளனர். அதனால் அத்தவற்றைச் செய்து தமிழைக் குறைக்க வேண்டுமா ?" என்றும், "இவ்வாறு வழக்கிலுள்ள இலக்கியங்களிலுள்ள பொருள் பொதிந்த தமிழ்ச்சொற்கள் மாறி வடமொழியால் மறைக்கப்படுவதால் நாளடைவில் அச்சொற்கள் வழக்கற்று மறைந்து போகுமே ! இவ்வாறே போனால் உரிய தமிழ்ச் சொற்களே இல்லாமல் தமிழே ஒரு புது மொழிபோல் ஆகிவிடுமே"-என்றெல்லாம் கவன்றும், சற்று கனன்றும் உரையாற்றினார். இந்நிகழ்ச்சி அம்மன்றத்தில் ஒரு புதுமலர்ச்சி

எண்ணத்தையும், தமிழுணர்வினர்க்கு ஒரு தனிப்பட்ட உணர்ச்சியையும் தூண்டியது. புலவர்களிற் பலரும் தமிழவேள் போன்றோரும் தனித்தமிழ் உணர்வைக் கொள்ள ஒப்பினர்.

இவ்வாண்டுவிழா நிகழ்ச்சிக்குப் பின்னர் பையப்பையத் தமிழ்நாடெங்கணும் இவ்வுணர்ச்சி பரவலாயிற்று. இதில் மிக முழுகிய அடிகளார்,

"வடசொற்களைத் தமிழில் தமிழுருவில் இடம்பெறச்
செய்வதற்குத் தம் நூலிலேயே, "வடசொற் கிளவி வடவெழுத்
தொரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"[22]

என்று இலக்கணமே வகுத்திருப்பது தவறு" என்றும் எழுதினார்; பேசினார். தமிழ் நலங்கருதிய ஆழ்ந்த உணர்வையே இது புலப்படுத்துகிறது. நாம் போற்றும் அரிய தமிழ் இலக்கண நூல் தந்த தொல்காப்பியரையே குறைகூற எழுந்த அறிவும் உணர்வும் அடிகளாரின் தனித்தமிழ்க் கொள்கையின் முத்திரையைப் பளிச்சிட்டுக் காட்டுகின்றன. பாவேந்தரும்,

"ஒல்காத பெரும்புகழ்த் தொல்காப்பியமும்
நன்னூலும் தமிழர்க் கெல்லாம்
நல்கரிய நன்மையெலாம் நல்கினஎன்
றால் நாமும் நன்றி சொல்வோம்"[23]

என்று நன்றி சொல்கின்றவர்.

"இனித்திடும்அவ் விருநூலில் வடமொழிஏன்?
வடவெழுத்துக் கொழுங்கு தான்ஏன்?

என்னும் வினாவையும் விடுத்து "அகத்தியர் காப்பியர்கள் கெடுப்பினும்"[24] என்றும் சாடினார். தமிழைத் தாய்மொழியாக உணர்வால் ஏற்றுக்கொள்ளாப் பிறர்,

"வீட்டிலே தூத்தம் என்பார்
வெளியிலே பிழைப்பிற் காக
ஏட்டிலே தண்ணீர் என்பார்"[25]

என்று தோலூரித்துக் காட்டியது போன்று இயற்கையில் தமிழ்ப் பகைவர் தனித்தமிழை எண்ணாதது பெருங்குறையன்று தமிழரே அதிலும் தமிழ் இலக்கணம் எழுதியோரே ஆழ்ந்த புலமையிருந்தும், தாய்மொழி உணர்வு இன்மையால்

"தமிழ்நூற் களைவிறைய அவற்றுள்
ஒன்றே யாயினும் தனித்தமிழ் உண்டோ?"[26]

என்று நம் இலக்கணக்கொத்தில் அவர் எழுதியதை அவர் சொற்றொடராலேயே சொன்னால், "முக்குணவசத்தால் முறைமறந்தறைத்தார் என பலரும் கருதலாம். 'இலக்கணக்கொத்து ஆசிரியர் சொல்வதுபோல் தனித்தமிழ் நூல் என்று

சொல்ல ஒன்றும் இல்லைதானே ? இவ்வுண்மையை எடுத்துச் சொல்லிய புலவரை ஏன் தமிழுணர்ச்சி இல்லாதவராகக் குற்றஞ் சொல்ல வேண்டும்' அஃது இயல்பே, அதற்குரிய சூழலை அவர் கருதாது போனமையே குற்றம். தமிழின் நூற்கடலில் கடல்கோள் கொண்டவை அதிகம். தொல்காப்பியத்தில் ஏறத்தாழப் பத்து சொற்களும், திருக்குறளில் எட்டு சொற்களும், அவையும் தமிழாக இருக்கலாம் என்று கருதும்போது அழிந்து போன முந்தையத் தமிழ் நூல்கள் வடமொழி பெறாமலே அமைந்திருக்கும் என்று ஏன் அவ்வாசிரியர் கருதவில்லை. அவ்வாறு கருதுவதை மேலையாசிரியர் மேற்கொண்டபோது தமிழ் மண்ணில் பிறந்தவருக்கு ஏன் அவ்வெண்ணம் எழவில்லை ?

> *"ஆரியர் இந்தியாவில் புகுந்தபின் தமிழருடைய நாகரிக*
> *முதிர்ச்சியி னையும், அவர் தாம் கருதிய பொருளை*
> *எழுத்திலிட்டுப் பொறித்ததுங் கண்டு தாமும் தம்முடைய*
> *பாட்டுக்களைப் பண் அடைவுபட வகுத்தபோது*
> *எழுத்துமுறையைக் கண்டறிந்தார்"*

என்று ஆங்கில அறிஞர் கோல்டு ஃச்டக்கர் என்பார் ஆய்ந்து வெளிப்படுத்தினார். அவர் தமிழ் உணர்வால் அவ்வாறு காட்டவில்லை உலக மொழிகளின் அறிவைக் கொண்டு காட்டினார். எம்மொழி அறிவும், இருக்க வேண்டிய தமிழுணர்வும் இல்லாமையால்தான் இலக்கணக்கொத்து ஆசிரியர் ஒப்பீட்டியல் அறிவும் இல்லாமல்,

> *"ஐந்தெழுத் தாலொரு பாடையென்*
> *றறையவே நாணுவர் அறிவுடை யோரே*
> *யாகையால் யானும் அதுவே யறிக"*[27]

என்று தன்னை அடையாளங்காட்டினார். எழுத்துக்களே பெறாமல் வாய்மொழியாகவே இருந்த வடமொழி தமிழ் எழுத்துமுறையைக் கண்டுதான் எழுத்துமுறை பெற்றதென்னும் உண்மையை நினைக்கும்போது, 'பின்தோன்றி எழுத்துப்பெற்ற மொழியை விட ஐந்து எழுத்துக்களே உள்ள மொழி தமிழ்' என்று ஒப்பீட்டியல் அறிவின்றிச் சொல்லியதை எண்ணினால்தான் அவ்வாசிரியரின் தமிழ் உணர்வில்லாக் குற்றத்தின் உண்மை புலப்படும். மற்றும், அவ்வொப்பீடு அறிந்தவர் போன்று,

> *"வடமொழி தமிழ்மொழி யெனுமிரு மொழியினும்*
> *இலக்கண மொன்றே"*[28]

என்று தவறான தம் ஒப்பீட்டை வெளிப்படுத்தினார்.

வடமொழி பொருளிலக்கணம் இல்லாதது: தொல்காப்பியர் எழுத்தியலில் "பன்னீ ரெழுத்தும் உயிரென மொழிப" என்றார். வடமொழியில் உயிரெழுத்து 13. அவற்றில் "ரு, ரூ, லு" என்னும் உயிர்மெய் ஒலிஎழுத்துக்கள் அமைத்திருப்பது - பொருத்தமற்றது. சொல்லதிகாரத்தில் "உயர்திணை

மக்கட்சுட்டு; அஃறிணை அவரல பிற'' என்னும் திணைப் பாகுபாடுண்டு. வடமொழியில் திணைப் பாகுபாடு இல்லை. பால், உண்டு. அப்பால்பகுப்பிலும் நகைப்பிற்குரியதாக அமைந்துள்ளவற்றை அடிகளார் பின்வருமாறு எடுத்துக்காட்டினார்:

| | | | |
|---|---|---|---|
| கோயில் | : ஆண்பால் | சாலை | : பெண்பால் |
| மனோரத | : ஆண்பால் | சந்தியா (அந்திப்போது) | : பெண்பால் |
| லோக எண் (உலகம்) | : ஆண்பால் | ஜகதோ | : பெண்பால் |
| காது | : ஆண்பால் | சுவர் என்னும் பித்தி | : பெண்பால் |
| ச்ரவண | : அலிப்பால் | ஸ்ருதி | : பெண்பால் |

இவ்வாறு காட்டி,

"நண்பர்காள் ! ஈதென்ன புதுமை பாருங்கள். அசையாப்பொருளான இவைகளை எல்லாம் ஆண், பெண் எனக் கூறினால் யாருக்குத்தான் நகை விளையாது ? இவ்வாறு சொற்களை வரன்முறையின்றி ஆண், பெண் எனக்கூறி, அவை தம்மைச் சொற்றொடர்களில் இயைத்துக் கூறுங்கால் ஆண்பெயர்க்கேற்ப ஆண்வினையும், பெண்பெயர்க்கேற்ப பெண்வினையும் கூட்டியுரைக்கவென விதித்தால் இவை தம்மை அறிவுடையோர் கற்க முற்றுவரோ ?"[29] என்று விளக்கினார்.

**பாணினிக்கு முன்னர் தொல்காப்பியம்**

வடமொழி இலக்கணமாம் பாணினியின் 'அட்டாத்தியாயி' என்னும் நூலின் காலத்தையும் தொல்காப்பியர் காலத்தையும் ஆராய்ந்து வரையறுத்த அடிகளார்,

> "பாணினி முனிவர்க்கு நானூறு ஆண்டுகளின் முன்னே ஆசிரியர் தொல்காப்பியனார் இருந்தனர்"[30]

என்று காட்டினார். இவ்வாறு காட்டப்பட்ட காலத்தால் பிற்பட்ட வடமொழி இலக்கணம், அதற்கு முற்பட்ட தமிழ் இலக்கணத்தோடு ஒத்ததன்று'' என்று நிறுவினார்.

தென்னிந்தியக் குலங்களையும் குடிகளையும் களத்தில் இறங்கி ஆராய்ந்து எழுதிய அறிஞர் எட்கர் தர்ஃச்டன் என்பார்,

> "தென்னிந்திய மக்கள் மொழியில் இலக்கணப்பாங்கு
> திராவிடர்களுக்கே உரிய தனித்தன்மை
> வாய்ந்ததாயிருப்பதோடு அதில் வேற்றுமொழிக் கூறுகள்
> கலந்திருந்தன என்று கூறுவதற்கான தடயங்கள் ஏதும்
> காணப்படவில்லை"[31]

என்று உலகமொழிகளைப் பொருத்தி எழுதினார்.

தனித்தமிழ்க் கொள்கையில் ஊறியிருந்த அடிகளார் பல புலவர்கள் தமிழ்ச் சொற்களை அவற்றின் வேர்ச்சொல் காணாமல் வடசொற்கள் என்று கருதிப் பேசி வந்ததை மனத்துட்கொண்டு பல சொற்களை வேர்ச்சொல்லுடன் பொருள்கண்டு எழுதிக்காட்டினார். சான்றுக்கு ஒன்று:

> *"குனிந்து நீண்டிருக்கும் கோபுரம் ஆதலாலும், இது தென்னாட்டுத் திருக்கோயில்களிலன்றி பழைய வடநாட்டுக் கோயில்களில் காணப்படாமையாலும் கோபுரம் என்னுஞ்சொல் வடமொழிக்குரியதாகாது; தமிழ்மொழிக்கே உரித்தானதாமென்க"*[32]

இவ்வாறு தமிழிருக்க வடசொல்லைக் கூறும் இழிநிலையைக் கண்ட அடிகளார் மனங்கவன்று அவ்வாறு செய்வோருக்காகத் தாம் நாணிக் கூறினார்:

> *"இசை தமிழ்ச்சொல்; இராகம் வடசொல்.*
> *இராகம் என்றால்தான் பெரும்பாலான மக்கட்குத் தெரிகின்றது.*
> *ஆதலால் இராகம் என்று சொல்லித்தான் இசையைப்பற்றி விளக்க வேண்டிய நாணக்கேடான நிலை தமிழர்க்கு உண்டாகியிருக்கிறது"*[33]

என்றார்.

தனித்தமிழ் என்னும் இக்கொள்கை மறைமலையடிகளார் ஒருவர்மட்டுமே கொண்டது போன்றும் தமிழில்மட்டுந்தான் இப்படிப் பேசப்படுவது போன்றும் பலர் உரைப்பது அறியாமையால் கூறப்படுவதாகும். தமிழில் வினைமொழிகளாகிய கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மூன்றும் தமிழில் வடசொல் கலப்பால் உருவான மொழிகள். அவை உருவாகி ஒரு நிலைக்கு வந்ததன் பின் மேலும் வடசொல்-பிறசொற்களைக் கலப்பதற்குப் பெரும் எதிர்ப்பும் நேர்ந்தது. அவ்வம்மொழிப் புலவர்கள், அறிஞர்கள் தத்தம் மொழிகட்குத் தனித்தன்மை வேண்டுமென்று கருதிச் செயற்பட்டனர். கன்னடத்தில் இராட்டிரகூட மன்னனாகிய நிருபதுங்கன் என்பவன் தன் 'கவிராச மார்க்கம்' என்னும் நூலில்,

> *"கன்னடத்தில் சமஸ்கிருதச் சொற்களைக் கலப்பது சுடுபாலில் மோரை ஊற்றுவது போன்று தீதாகும்"*

என்று எழுதியுள்ளான். கன்னடத்தில் தனிக்கன்னடம் 'திருள் கன்னடம்' என்று தனிப்பெயரே பெற்றது. தெலுங்கில் தனித்தெலுங்கு 'அச்ச தெலுகு' எனப்படும். தனிமலையாளக் கொள்கையர் உள்ளனர். அவர் 'பச்சை மலையாளம்' என்னும் தலைப்பில் செயற்படுவர். தனிக்கன்னட, தனிச் தெலுங்கில் நிகண்டு நூல்கள் எழுதப்பெற்றுள்ளன.

அன்றும் - இன்றும் தமிழ் அறிஞர்களிடையே பலரிடம் ஒரு 'மொழிக்கருத்து' நிலவுகிறது. 'தனித்தமிழ்' என்றால் ஏதோ ஒதுங்கியிருப்பது

போன்றும், அவ்வாறு சொல்லி ஒதுங்கிப் பிறமொழிச் சொற்களைக் கலந்து தமிழை வளப்படுத்தாது விடுவதாகக் கூறுகின்றனர். அதற்குச் சான்றாக ஆங்கில மொழியைக் காட்டுகின்றனர். ஆங்கிலம் பலமொழிகளிலிருந்து சொற்களைக் கூட்டிக்கொண்டு வளர்ந்துள்ளதாகக் காட்டுகின்றனர். ஆங்கிலம் மிகப் பிற்காலத்தே தோன்றியது. சொற்களைத் தொகுத்துக்கொள்ள வேண்டிய இன்றியமையாமை கொண்டது. ஆகவே கடன் வாங்கிற்று. ஆனால் கடன்வாங்கி ஓர் அமைப்பை ஏற்படுத்திக் கொண்டபின் அவ்வாறே மேலும் மேலும் கடன் வாங்குதல் கூடாது என்னும் கருத்தையும் ஆங்கிலேயர் கொண்டனர். இதற்கென ஓர் இயக்கமே எழுந்தது. கேம்பெல் என்னும் ஆங்கிலப் பேரறிஞர்,

> "ஒரு மொழி பிறவகைகளில் அழிந்துபடுவதினும் பிறமொழிச் சொற் கலப்பால் அழிவது பெருந்துன்பமாகும்"

என்றார். தனித்தமிழை வேண்டாது குறைகூறுவோர் இதனைக் கருதிப் பார்த்தல் நலம்.

அறிஞர் அடிசன் இதனினும் ஒருபடி மேலே போய், "நமது சட்ட அமைப்பில் உரிமை, வாணிகச் சட்டம் முதலியவற்றைப் பேணும் கண்காணிப்பாளர்களை அமைக்க விதி இருக்கின்றது. அதுபோன்றே பிறமொழிச் சொற்கள் தன் தாய்மொழியில் (ஆங்கிலத்தில்) கலவாமல் பேணும் கண்காணிப்பாளரை அமைக்கும் விதி வேண்டும்"[34] என்றார். அவர் கி.பி. 1672-1719 கால வாழ்வினர். மொழிக்கலப்பை ஒரு குற்றமாகக் கொண்டு அதனை நீக்கச் சட்டவிதி வேண்டுமென்றார். அதற்கு மேலும், அச்சட்டத்தை நடைமுறைப்படுத்தவும் கண்காணிப்பாளர் வேண்டும், அவ்ரை விதிக்கவும் சட்டவிதி வேண்டும் என்றார். இதனைத் தமிழ் மொழியியல் அறிஞர்கள் சற்று நினைத்தல் நலமாகும்.

ஆங்கில அறிஞர் கருத்துக்கள் எழுந்தமைக்குத் துணைத்தளமாக ஓர் ஆங்கிலச் சொல் நினைவிற்கு வருகின்றது. அது 'Barbaric' என்னும் சொல். இச்சொல்லிற்கு முரட்டுத்தனமான, காட்டுமிராண்டியான எனப்பொருள். 'Barbarism' என்பதற்குக் காட்டுமிராண்டி வாழ்க்கை என்னும், பொருளுடன் மற்றொரு விளக்கமான .பொருளையும் ஆங்கில அகரமுதலிகளும், ஆங்கில-தமிழ் அகரமுதலிகளும் காட்டுகின்றன. அது என்ன ?

"தாய்மொழிச் சொல்லை நீக்கி அயல்மொழிச் சொல்லைப் பயன்படுத்துதல்" என்பதைக் காண்கிறோம். எனவே, தமிழில் பிறமொழிச் சொற்களைக் கலந்து மொழிக் கலப்படம் செய்வது ஒரு 'முரட்டுத்தன்மையான குற்றம்; பண்புள்ள செயலன்று; நாகரீகமற்றது; என்பதை உணரலாம். இப்படிச் சொல்வது சற்றுக் கடுமையேயாயினும் இதில் உண்மை பொதிந்திருப்பதை மறுக்க முடியாது.

பிறமொழிச் சொற்கலப்பால் தமிழ் காலப்போக்கில் தன் சுவடின்றி அழியும் என்பதை ஓர்ந்து கண்ட அடிகளார் அவ்வாறு நேராமல் தடுக்கப் பலவகையிலும் தமிழர் முனைய வேண்டும் என்று அறிவுறுத்துபவர்,

> "தமிழர் அனைவரும் பண்டுபோல் தமக்கும் தம் இல்லங்கட்கும்
> தம் ஊர்களுக்கும் பிறவற்றிற்குமெல்லாம் தூய
> தமிழ்ப்பெயர்களையே அமைத்தல் வேண்டும்"[35]

என்றார். இது தமிழர் கைக்கொள்ள வேண்டிய இன்றியமையாதத் தமிழ்ப்பணி என்று சொல்லலாம். பெயர்களாக வடசொற்களையே கொள்வதும், தமிழில் வடசொற்களைக் கலந்து எழுதுவதும் கண்டு மனம் வெம்பினார். அவ்வெம்பலை வெளிப்படுத்தும் வாயிலாகத் தாம் தமிழரைக் கையேந்திக் கெஞ்ச வேண்டும் என்னும் நிலைக்குப் போய் அவர் அறிவித்த சொற்றொடரை நோக்கின் அது அவர்தம் தனித்தமிழ் முத்திரைக்கு அரக்கு முத்திரை எனலாம்.

> "தமிழ் நன்மங்கையின் அழகிய நன்மேனியில் அம்மைத்
> தழும்புபோல் வடசொற்களைப் புகுத்தாதீர்கள். அடியேன்
> உங்களைப் பெரிதும் கெஞ்சுகின்றேன். ஆண்டவர்களே!
> தமிழைக் கெடுக்காதீர்கள். தனித்தமிழுக்குப் பாடுபடுங்கள்"[36]

என்றெழுதிய இவ்வுணர்வின் வடிப்பான சொற்றொடர் தனித்தமிழின் அடித்தளத்தில் குத்தப்பெற்ற வைரமுத்திரை. அடிகளாரின் தமிழ் முத்திரை.

தனித்தமிழ் என்ற தொடரமைப்பு தமிழ் தனித்துவிடுவது போன்று கருதுவது ஓரளவில் இயல்பாகலாம் என்ற உணர்வு எனக்கும் உண்டு. அதுகருதி தனித்தமிழ் என்பதற்கு மாற்றாக 'நிறைதமிழ்' என்று குறிக்கலாம் என்று கருதினேன். அதனால் நாகையில் மறைமலையடிகளார்க்கு நிறுவிய சிலையின் அடிக் கற்பீடத்தில் "நிறைதமிழ்ச் செம்மல் மறைமலையடிகளார்" என்று பொறிக்கச் செய்துள்ளேன். பிற சொற்கள் பல்கித் தமிழ்ச் சொற்கள் குறைபடுவதைவிட நிறைவாகத் தமிழ்ச் சொற்களே கொள்வதை 'நிறைதமிழ்' என்று நிறைவாகக் கொள்ளலாம்.

இத்தமிழ் முத்திரையையும் முன்னே கண்ட தமிழின ஊற்றத்தையும் அற்றம் காக்கும் கருவிகளாகக் கொண்டு அடிகளார் சைவப் பகுத்தறிவு முழக்கம் செய்தார்.

### ஈ. சைவப் பகுத்தறிவு முழக்கம்

அடிகளார்க்குத் தமிழின ஊற்றம் நாடித் துடிப்பு; தமிழ் முழக்கம் மூச்சோட்டம். சைவமோ ஐம்புலன்களின் உணர்வு முழக்கம். அவ்வுணர்வு அறிவால் உந்தப்பெற்றது. அதனால்தான் 'ஐம்புலன்களின் உணர்வு முழக்கம்' என்றேன். 'ஐம்பொறிகளின் உணர்வு முழக்கம்' என்று குறிக்கவில்லை. புலன்

என்பது அறிவு. பொறி என்பது உறுப்புதான். அவற்றை இயக்கும் கருவி அறிவு என்னும் புலன். அப்புலன் உணர்வைச் சென்றவிடத்தால் செல்லவிடாது; தீதை ஒருவும் நன்றின்பால் உய்க்கும். திருவள்ளுவர் தந்த இந்த அறிவு இலக்கணம் உள்ளே ஓர் உண்மை பொதிய வைக்கப்பெற்றது. அறிவு, உணர்வை அதன் போக்கிற்கு விடாமல் கட்டுப்படுத்தும். கட்டுப்படுத்தி நன்மை எது; தீமை எது என்று பகுத்துப் பார்க்கும். பகுத்துப் பார்த்த அறிவு தீதை நீங்கச் செய்யும்; பகுத்துப்பார்த்த அறிவு நன்மையில் கொண்டு செலுத்தும். அதனால் இவ்வறிவு பகுத்தறிவு.

அடிகளார் தம் ஐம்புலன் உணர்வான சைவத்தைத் தம் நூலறிவும் நுண்ணறிவும் கொண்டு பகுத்துப் பார்த்தார். அதில் கலந்த தீமைகளை ஒருவினார்; நன்மைகளை உய்த்துக் கண்டு பதிவாக்கினார். அவற்றைப் பேச்சில் முழக்கினார்; எழுத்தில் எழுத்தை முழங்கச் செய்தார்.

அடிகளார் சைவத்தைத் தம் உள்ளத்தில் வைத்தார்; சைவத்தில் தம்மை வைத்தார். சைவ உலகில் தம் பெயரை நிறுத்தினார். சைவர்களைப் பகுத்தறிவுப் பார்வைக்கு உட்படுத்தினார்.

எதையும் ஏன் ? எவ்வாறு ? என்று வினவும் பகுத்தறிவு வினாக்களை மிகு அழுத்தமாக வினவினார். அவரே தக்க விடையும் கண்டார். ‘சிவபெருமானே முழுமுதற் கடவுள். பிற சமயங்கள் அனைத்தும் பொய்யான கருத்துக்களைக் கொண்டவை; அவை கொண்டு இறையருளைப் பெற இயலாது’ என்று நம்பினார் அஃது அவர் உரிமை. ஆனால் பிற சமயநூல்களில் ஏற்கத்தக்க கருத்துக்களை எடுத்துக் கொண்டார்.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் முறையே சமண, புத்த சமய நூல்களாயினும் “உள்ளன உள்ளபடி கூறிய முழுக்காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை என்பனவற்றின்முன் தலையெடுத்து நிற்கும் வேறு காப்பியங்கள் இவ்வுலகில் வேறு எந்த மொழியிலேனும் உளவா ? இல்லையே”[37] என்று மனந்திறந்து எழுதினார்.

வேற்று மொழியாகிய பாலியிலும், வடமொழியிலும் எழுந்த திரிபிடகம், இருக்குமுறைகளின் கருத்துக்களை ஆய்விற்குத் துணையாக எடுத்துக் கொண்டார்.

இருப்பினும் சிவபெருமானே உலகமளாவிய கடவுள் என்றார். இறைவன் என்பதை வாய்க்கும் இடந்தோறும் கொண்டு காட்டினார். உலக மக்கள் பண்டைக்காலத்தில் சிவனையே வணங்கினர் என்று அதனை அவ்வம்மொழிகளில் இறைவன் பெயர்களைக் கொண்டே அறியலாம் என்று

| | | |
|---|---|---|
| 'எபிரேயத்தில் | - | சிகாவோ (yehova) |
| கிரேக்கத்தில் | - | சிபூஃச் (Jesus) |
| உரோமத்தில் | - | கபிதர் (Jupiter) |

என்றெல்லாம் தொன்றுதொட்டு வழங்கினர்' என்று காட்டினார். இவை சற்று வலித்து கொள்ளப்படும் கருத்தெனினும் அவர் சிவப் பற்றில் அத்துணைப் பிடிப்பாக இருந்தார் என்பதைக் காட்டுவதற்காக எடுத்துக் கொள்ளலாம். ஆனாலும் சைவ சமயத்தில் பெருகிப்போன வீண் கோட்பாடுகள், கதைகள் முதலியவற்றை இவர் முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. சிலவற்றைத் தழுவி அவற்றிற்கு அமைதி கூறினார். பலவற்றை மறுத்தார்; கண்டித்தார்; சாடினார்; கடுமையாகச் சாடினார்.

புராணக் கதைகளைப் பற்றிய அடித்தளக் கருத்துக்களாக இவர் கொண்டவை இரண்டு. ஒன்று:

> "இறைவன் உயிர்களுக்குச் செய்துவரும் செயற்கருஞ் செயல்களை ஆழ்ந்தறியும் நுண்ணறிவில்லாத பொதுமக்கட்கு உணர்த்தும் பொருட்டாகவே அவை தம்மைக் கதைகளாக அமைத்து வைப்பாராயினர்"[38]

என்பது. இஃதொன்றும் புதுமையன்று; பல சான்றோர்கள் அறிவித்ததோ மற்றொன்று;

> "பொதுமக்களை ஏமாற்றும் பொருட்டுப் பார்ப்பனரும் கோயிற் குருக்கள்மாரும் வடமொழியில் வரைந்து வைத்த பொய்யான புராணங்களையும் தலபுராணங்களையும் பெரும்பாலும் அடியோடழித்து விட்டனர்"[39]

என்பது. இதுபோன்ற கருத்துக்கு 16-ஆம் நூற்றாண்டில் தோன்றிய சில சித்தர்கள் பாடல்கள் இடம் வைத்துள்ளன என்றாலும் அவற்றை வலியுறுத்தியும் அளவையியலான மறுப்புக்கள் தந்து முதன்முதலில் மறைமலையடிகளாரே கொடி காட்டினார்.

கடவுட்கொள்கையை ஏற்காத பெரியார் போன்றோர் புராணங்களை மறுத்ததினும் சைவப்பற்றில் நின்ற சமயியாகிய அடிகளார் மறுத்தது சமயிகளையே நினைத்துப் பார்க்க உந்தியது எனலாம். இது கருதிய பெரியார் இவரைத் தம் 'வலக்கை' என்றார்.

மேற்குறித்தவாறு இருவகைக் கருத்துக்களை அடிகளார் கொண்டதற்குக் காரணம் இவர் பழம்பெரும் நூல்கள்பால் கொண்ட பற்றும் நம்பிக்கையுமேயாகும்.

தக்கன் வேள்வியை அழிக்கச் சிவபெருமான் மேற்கொண்ட கதையை ஓர் உருவமாகக் கொண்டு "வீரபத்திரன் ஓர் வீரம் செறிந்த முனிவன், அவ்வாறு அழிந்தான்" என்கிறார்.

பழம்பெரும் நூல்கள் காரணமாகச் சிலவற்றை ஏற்பது மக்கள் நலம் காரணமாகப் பலவற்றை மறுப்பாக்கும் இவர் தமிழுணர்வைச் சொல்லி விளக்கியுள்ளார்:

> "எண்ணளவில் மேற்குறிக்கப்பெற்ற கடவுள் இயல்புகளைச் சொல்வதில் (புராணம் பற்றிச் சொல்வதில்) யாம் வெறுப்புடையேனாயினும், இவைகள் குற்றமில்லாதனவாகவே எடுக்கப்படுமாயினும், தமது சமய வாழ்க்கைக்கு இவை தினைத்துணையாவது பயன்படுமென்று கருதக்கூடவில்லை என்பதைத் திறந்து சொல்கிறேன். ஆகவே, இவை (புராணங்கள்) ஒன்றும் உண்மையானவை அல்ல"[40]

என்று உளந்தோய்ந்த உண்மையை மனந்திறந்து எழுதிவைத்தார்.

தமிழர் தம் சமய வாழ்க்கை திரிக்கப்பெற்றது என்பதற்கு உலகப் பேரறிஞர்கள், மெய்யுணர்வாளர்கள் ஆய்வுக் கருத்துக்களை மேற்கோள்களாகக் காட்டினார். அவற்றில் ஒன்றிரண்டை இங்கு காட்டுவது பொருந்தும். அடிகளார் ஏதோ ஆரிய வெறுப்பால் இக்கருத்தைக் கொள்ளவில்லை; உண்மை நிலையைக் கண்டே அறிவித்தார் என்பதற்கும் பொருந்தும்.

> "ஆரியர்கள் தங்களுடைய சமயத்தையும் பழக்கவழக்கங்களையும் திராவிடர்மேல் திணிக்கத் தொடங்கிய காலப்பகுதி தொன்மையான அரசுக்கள் குலமரபுகள் குறிக்கும் காலகட்டம் ஆகும்"[41]

என்று காட்டிய அறிஞர் சி. மெக்லின் கருத்தையும், அமெரிக்க மெய்யுணர்வாளர் வில்லியம் சேம்சு என்பார்,

> "கடந்த நிலையைக் கூறினால் மாயாவாத ஆராய்ச்சியுரைகள் சமய உண்மையினை உலகமெல்லாம் தழுவும்படி செய்ய மாட்டாதவையாய் வழுவுகின்றன"[42]

என்று மாயாவாதத்தாரை மறுத்துக் கூறியதையும் சார்ந்து நின்று எடுத்துக் காட்டியுள்ளார்.

இவ்வாறு சமயத்தொடர்புக் கதைகளை மறுக்க முன்வந்தவர் பிற சமயங்கள் பற்றி மட்டுமன்று தாம் ஊன்றிநின்ற சைவக் கதைகளையும் இப்பார்வையிலேயே நோட்டமிட்டார். தாம் முழுமுதற் கடவுளாகக் கொண்ட சிவபெருமான் பிற முருகன், பிள்ளையார், திருமால் ஆகிய கடவுளரைப் பற்றிய கதைகளையும் அலசினார்.

அவ்வாறு அலசும்போது அவ்வக் கதைகளின் அடித்தளக் கருத்துக்களை ஏற்று வளர்த்த பொய்மைக் கற்பனைக் கருத்துக்களைத் தோலுரித்துக் காட்டிச் சாடுவதைத் தம் கொள்கையாகவே கொண்டார் எனலாம்.

சிவபெருமான் தக்கன் வேள்விக் கதையில் அவ்வேள்வி நிகழ்ச்சியை ஏற்றுக்கொள்ளும் அடிகளார் சிவபெருமான் தோற்றுவித்த வீரபத்திரன் கதையைப் பொய்யென்று தள்ளி வீரம் மிக்க ஒரு முனிவன் அவ்வேள்வியை அழித்தான் என்கின்றார்.

தாம் நோய்வாய்ப்பட்ட காலத்தில் அது தீரத் திருவொற்றியூர் முருகன் மேல் மும்மணிக்கோவை பாடிப் போற்றியவர் முருகன் தன் பிறப்புக் கதைகளை ஏற்க மறுத்துக் கண்டிக்கிறார். அளவையியல் திறத்தோடு கண்டிக்கிறார்.

'தீக்கடவுளுக்குக் கங்கையாற்றின்பால் பிறந்த ஆறு குழந்தைகள் ஒன்றாக அணைத்தெடுத்தபோது ஒரு குழந்தையாகி ஒருடலும் ஆறு தலைகளும், பன்னிரண்டு கைகளும் கொண்ட முருகனாக விளங்கியது' என்னும் வால்மீகி இராமாயணக்கதையை மறுக்கும் திறன் குறிக்கத்தக்கது.

உயிர் அருவமானது; உடல் உருவத்தது. ஓர் உடல் மற்றோருடலாகக் கூடும். உயிர் மற்றோர் உயிராகவோ மற்றொரு உயிருடன் இணைவதாகவோ இயலாத இயல்பு கொண்டது. ஆறு குழந்தைகளின் உடல்கள் ஓர் உடலாகக் கூட அவற்றின் தனித்தனி ஆறு உயிர்களில் ஒன்றுதானே அவ்விணைப்பு உடலில் இடம்பெறும். மற்றை ஆறு உயிர்கள் என்னவாயின ? என்று வினவி மறுக்கிற திறன் அளவையியலை நினைவுறுத்துகின்றன.

இதுபோன்றே பிள்ளையார் பிறப்பில் பலவகைக் கதைகளையும் ஆய்ந்து அவையாவும் பொய் மூட்டைகள் மட்டுமன்றி இறைவன் இறைவியரைத் தாழ்வு படுத்தும் நிலை கொண்டவை என்று தள்ளுகின்றார்.

வைணவச் சமயத்தை ஓரளவில் இசைந்து கொள்கின்றவர், திருமாலின் பத்துத்தோற்றரவுகளை மறுத்து விடுகின்றார். இக்கதைகள் எல்லாம்,

> "ஆராய்ச்சி அறிவில்லாத கயவன் எவனோ ஒருவன்
> கட்டிவிட்டனன்"[43]

என்று முருகன் பிறப்பு பற்றிக் கூறியதை அனைத்திற்கும் கொள்ள வேண்டும்.

இங்கே ஒரு நிகழ்ச்சியைச் சொல்லிக்காட்ட வேண்டும்.

பாளையங்கோட்டையில் ஒரு கூட்டத்திற்கு அடிகளார் அழைக்கப் பெற்றிருந்தார். சைவசமயத் தொடர்பான பேச்சு. சில கூட்டங்களில் அடிகளார் தாம் விரும்பாத கம்பராமாயணம் பற்றிக் குறைகள் கூறுவதுண்டு. சில வேளைகளில் அக்குறை மலிவான நகைச்சுவையாகவும் அமைந்ததுண்டு. பாளைக் கூட்டத்தில் அது இப்படி அமைந்தது. 'இராவணன் பத்துத் தலைகளை உடையவன் என்று இராமாயணம் கூறுகின்றது. கம்பரும் அவ்வாறே எழுதியுள்ளார். அவ்வாறாயின் இராவணன் படுக்கும்போது ஒருக்கணித்துப் படுத்தானா ? இயலாதே ! எப்போதும் மல்லாந்தே படுத்திருப்பானோ ?" என்று பேசினார்.

## இராவணன் முருகன் தலைகள்

கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து பேரார்வத்துடன் அழைத்திருந்தவர் ஓர் இளைஞர். அப்போதுதான் வழக்கறிஞர் படிப்பில் தேறியவர். அவர் நன்றி கூறும்போது இந்த நகைச்சுவையைத் தொட்டு "இராவணன் பத்துத் தலைகளுடன் எவ்வாறு படுத்திருப்பான் என்று அடிகளார் கேட்டார்கள். அவன் ஆறு தலைகளையுடைய முருகன் படுத்ததுபோல் படுத்திருப்பான்" என்றார். இஃது அடிகளார் போற்றும் முருகனை மலிந்த நகைச் சுவைக்குள்ளாக்குவதன்றோ ! கூட்டம் இதனையும் சுவைத்தது. அதில் குறிப்பிடத்தக்கது அடிகளாரும் அதனை நகைச்சுவையாகவே ஏற்றுப் புன்முறுவல் பூத்ததாகும். ஒரு காப்பியத்தில் வரும் மன்னனை அதிலும் கெட்டவனாக வைக்கப்பட்டுள்ளவனை நகைச்சுவையில் வாட்டியது சொற்பொழிவாளரால் ஏற்கத்தக்கதாகும். பொழிவாளர் இடைமறித்தேனும், அதற்கு மறுப்போ கண்டனமோ தெரிவிக்க வேண்டியதாகும். மாறாக அடிகளார் புன்முறுவலில் அதை அடக்கியதற்குக் காரணம் உண்டு.

அக்காரணம் அடிகளார் முருகன் உருவத்தை வரிவடிவமாகக் கொள்ளாமல் அருவாகக் கொண்டதேயாகும். ஆறு தலைகளைக் கொண்ட கதைகளையெல்லாம் சாடும் அடிகளார் முருகனின் அத்தகைய வடிவத்திற்கு வன்மையான காரணம் கூறியுள்ளார்.

தமிழர் கடவுள் வணக்கமுறை கதிரவன் வழிபாட்டில் தோன்றியதாகக் கொண்டவர் அடிகளார்.

> "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
> பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு"[44]

என்னும் திருமுருகாற்றுப்படைத் துவக்க அடிகளை எடுத்துக்காட்டி ஞாயிற்றின் தோற்ற வணக்கத்தை விளக்கியுள்ளார். அவ்விளக்கத்தில் முருகக்கடவுளின் உருவம் பற்றிய உருவக வண்ணனையை எழுதினார்.

'முருகன் அருள் உருவினன்; அதிலும் அருள் ஒளியானவன், நுண்ணறிவில்லா மாந்தர்க்குத் தன் அருள் ஒளியை ஒளியிற் சிறந்த கதிரவன்போல் நின்று காட்டினான். அக்கதிரவனின் பொன்னொளித் தோற்றமே முருகனின் ஒளிவடிவம், அவன் விடியலில் தோன்றும் இளஞாயிறாகக் காட்சியளிக்கின்றான். அவன் இளமையன் அல்லனோ ? இதனால்தான் 'முருகு' என்பதற்கு 'இளமை' என்னும் பொருள் வந்தது. அத்தோற்றம் அழகுடையதாதலின் 'அழகு' என்னும் பொருளும் கூடிற்று. ஞாயிறும் தெய்வத் தன்மையின் குறியாகலின் 'தெய்வத்தன்மை' என்னும் பொருளும் செறிந்தது. எனவே, இளஞாயிற்றின் ஒளிவடிவே முருகனின் வடிவம். விடியல் வான் நீலவானத்தின் விரிந்த நீலத்தையும் கடலின் நீலத்தையும்

மயிலின் உருவகமாகக் கொண்டு அதன் மையத்தில் தோன்றுவதால் மயில் முருகனின் ஊர்தி எனப்பெற்றது. விடியலில் கதிரவன் தோன்றுவதற்கு முன்னர் அதன் அறிவிப்பாகச் சேவல் கூவுவதால் அச்சேவல் அவன்தன் கொடிச் சின்னமாயிற்று"[45] இவ்வாறெல்லாம் வர்ணிக்கின்றவர் முருகனின் ஆறு தலையமைப்பிற்கும் அவ்வாறே அமைதி சொன்னார்.

இங்கு பாவேந்தர் பாரதிதாசனார் நினைவிற்கு வருகின்றார். இவர் இராமாயணக் கதையில் வரும் இராவணனை, "என்தமிழர் மூதாதை என்றமிழர் பெருமான் இராவணன்காண்" என்று பாடியவர். அவரே இராவணனின் பத்துத் தலைக் கருத்தினை ஒரு பேச்சிற்காக ஏற்று அதற்கொரு விளக்கம்போல், "ஐயிரண்டு திசைமுகத்தும் தன்புகழை வைத்தோன்"[46] என்றும் பாடியுள்ளார். 'மூலைத்திக்குகளோடு கூடிய எட்டு திக்கொடு வானம், நிலம் என்னும் மேல், கீழ்களையும் திக்குகளாகக் கொண்டு பத்துத் திக்குகளிலும் தன் புகழாகிய முகத்தை வைத்தவன்' என்றார்.

அடிகளார் முருகனுக்குக் கூறிய ஆறும் இவ்வாறே அமைந்தது. 'நான்கு திக்குகளுடன் மேல், கீழ்கள் சேர ஆறு முகத்தும் நிறைந்திருப்பதால் அதனை ஆறு தலைகள்' என்று உருவகமாக்கினார். இஃது ஓர் உருவத்திற்கு மற்றொரு உருவத்தைக் காட்டும் உருவகம். அல்லது அருவகத்திற்குக் காட்டப்பெற்ற உருவகம் போலும்.

ஆனால், ஆறுமுகத்திற்குப் பன்னிரண்டு கைகள் கதிரவனின் பன்னிரு திங்கள் கதிர்கள் என்று நாம் கொள்ள வேண்டும் போலும். கொண்டாலும் முருகனது புகழ்பெற்ற தனி உரிமையுடையதாகிய வேற்படை நம்மால் ஆய்ந்து கொள்ள வேண்டியது என்று பொறுப்பை நம்மிடம் ஒப்படைத்திருப்பதாகக் கொள்ள வேண்டும்.

காலைக் கதிரொளியாக உருவகப்படுத்தும் அடிகளார் அது இளஞாயிறு என்பதற்கு "பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு"[47] என்று நக்கீரர் காலையைக் குறிப்பாக வைத்ததையும் சான்றாக்கினார்.

இவ்வாறு ஆறு தலை கொள்ளாமல் அருவமாகவே முருகனைக் கொண்டு உருவகத்தை இயற்கைக் காட்சியாக வைத்துப் பார்த்தவராதலால் பாளைக் கூட்டத்தில் கிண்டலுக்கு ஆளான முருகனைப் பற்றியதைத் தாழ்வாக்கிய உணர்வாக அடிகளார்க்குப் படவில்லை. இவ்வாறு நன்றிகூறலில் முருகனையும் கிண்டலில் வைத்த இளைஞரும் சைவப்பெரும்பற்றினரே. ஆனால், கம்பராமாயணத்தில் தோய்ந்து அதைப் போற்றியவர். அவர்தாம் பிற்காலத்தில்-நம் காலத்தில் சொல்லின் செல்வர் எனப் புகழ்பெற்ற திரு இரா.பி. சேதுப்பிள்ளை அவர்களாவர். இந்நிகழ்ச்சியைச் சொல்லின் செல்வரே என்னிடம் சொல்லியதை இதுபோது நினைவுகூர நேர்ந்தது.

முருகன் உருவகத்தைத் தொடர்ந்து பிற கடவுளர் இருவரையும் உருவகப்படுத்திய பாங்கும் இங்கு நினைவுகூரத்தக்கது. வைணவத்தை அடிகளார் முழு அளவில் ஏற்றுக்கொள்ளாது ஓரளவில் இசைவில் வைத்துள்ளார். அதனால் திருமால் வடிவத்தையும் செயலையும் இளஞாயிற்றின் தொடர்கதையாகவே காண்கின்றார்.

திருமால் மாவலி என்னும் மாமன்னனிடம் அவனை அழுத்த மூன்றடி மண்கேட்டுப் பெற்று ஓரடியால் மண்ணுலகையும், இரண்டாம் அடியால் விண்ணையும் அளந்துவிட்டு மூன்றாவது அடிக்கு இடமெங்கே எனக் கேட்டதாகவும், மாவலி என் தலைமேல் வை: என்றதாகவும், அவ்வாறே செய்து மாவலியை அழுத்தி அழித்ததாகவும் கதை உண்டு. அது பத்து தோற்றரவுகளில் வாமணன் தோற்றரவாக உள்ளது. பத்துத் தோற்றரவுகளும் பொய்க்கதை என்னும் அடிகளார் மூன்றடி அளந்ததைப் பகல்நேரப் பாகுபாட்டில் வைத்துச் சொல்கிறார்.

"அடியளந்தான் தாயதெல்லாம் ஒருங்கு"[48] என்னும் குறட்பாவும் அவர்தம் நினைவில் நின்றிருக்கும். அனைத்திற்கும் அவர் தரும் உருவகச் செய்தி இது :

> "காலையிலெழுந்த ஞாயிறு காலைப் பத்துமணி வரையில்
> வான்வெளியை ஒரு கூறு அளந்து, பத்து மணி முதல்
> இரண்டுமணி வரையில் அவ்வெளியின் நடுக்கூற்றினை அளந்து,
> இரண்டு மணி முதல் மாலை ஆறு மணி வரையில் அதன்
> மற்றொரு கூற்றினை அளந்து இயங்குவதாகிய இயக்கமே
> திருமால் மூவடியால் மூன்றலகு அளந்தார் என்னும் கதையின்
> உண்மைப் பொருளாகும்"[49]

'இந்த இயற்கைச் செயலே திருமால் மூவடி அளந்த செயல்' என்று பகுத்தறிவில் நின்று பேசுவதாகவே கொள்ள வேண்டும். சைவப் பகுத்தறிவு முழக்கத்தோடு இது வைணவப் பகுத்தறிவு முழக்கம்.

பகல் ஞாயிற்றுக் கதை தொடர்கிறது. அது அந்திப்போது ஞாயிற்றைக் காட்டிச் சிவபெருமானை உருவகத்தில் நிறுத்துகிறது.

> "காலையிலெழுந்து நடுப்பகலில் இயங்கி மாலையில் மேல்பால்
> வயங்கும் ஞாயிற்றில் நிற்பானான முதல்வனே
> சிவபெருமானென வைத்துப் பண்டைச் சான்றோரால்
> வழிபடப்பட்டவன்"[50]

என்று ஞாயிறே சிவன் என்று காட்டி இதனிடையே பகல்நேரக் கால அளவில் நிறுத்திய வைணவத் திருமாலைச் சிவனுக்குள் அடக்குதல் சைவ சமயத்துள் வைணவம் அடக்கம் என்பதாக உள்ளது. அந்தி ஞாயிற்றை, வானை வைத்துப் பின்வருமாறு சிவபெருமானை உருவகப்படுத்துகிறார்:

| | | |
|---|---|---|
| மாலை ஞாயிற்றின் செக்கச் சிவந்த செஞ்ஞாயிற்றின் நிறம் | : | சிவனின் செம்மை நிறம் |
| செஞ்ஞாயிற்றைச் சூழ்ந்த காவி நிற முகிற்குழாம் | : | சிவந்த சடைக்கற்றை |
| முகிற்குழாமிடையே தோன்றும் பிறைத் திங்களே | : | சிவன் முடியிற் பிறை |
| முகிற்குழாத்தில் தோய்ந்த நீராவி | : | கங்கை நீர்[51] |

இவ்வாறு சிவனை நம் கண்முன்னே காட்டி மகிழ்கிறார்.

இதற்கு,

"அருக்கன் (கதிரவன்) பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்கண் ஆவான் அரன்உரு அல்லனோ"[52]

என்னும் அப்பரடிகள் பாடலையும் சான்றாக்கியுள்ளார்.

வடமொழிப் பாடலாகிய, "சூர்யோ முக்ய சரீரத்து சிவஃச்ய பரமாத்மா" என்பதையும் சான்றாக்கியுள்ளார். மேலும் செங்கோன் தரைச்செலவு என்னும் பண்டை நூலின் முகப்பில் ஞாயிற்று வணக்கத்தை வைத்திருப்பதைக் காட்டுகின்றார். ஆன்றல் இளங்கோவடிகள் பாடிய "ஞாயிறு போற்றதும்; ஞாயிறு போற்றுதும்"[53] என்பதை அது சமண சமயம் என்று கருதாதுபோயினும் நாம் இணைத்துப் பார்த்துக் கொள்வோம் என்று விடுத்தார் போலும். அல்லது "ஞாயிறு போற்றதும்" என்பதற்கு முன்னர் 'திங்களைப் போற்றுதும்' என்றதை எண்ணிச் சொல்ல விடுத்தார் எனலாம். எவ்வாறாயினும் உலகத் தோற்றம் ஞாயிற்றின் மூலம் என்னும் அறிவியல் கோட்பாட்டில் இவ்வண்ணனைகள் ஒத்துநின்று சைவத்தில் பகுத்தறிவை முழங்குகின்றன.

சமுதாயச் சீர்திருத்தத்திற்கும் பகுத்தறிவுச் செயற்பாட்டிற்கும் முதற்பணி சாதி ஒழிப்புதான். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" முதலாகச் "சாதிகள் இல்லையடி பாப்பா" வரை சாதிப்பேய் ஓடியபாடில்லை. இடையில் சைவச்சான்றோர் மனந்திறந்து பாடியபோதெல்லாம் இதனைத் தொட்டுக் குட்டியும் பாடினர். "கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்" என்ற அப்பரடிகள் மேலும் அழுத்தமாகவும் பாடினார். "ஆவுரித்துத் தின்று உழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் யாம் வணங்கும் கடவுளார்" என்று புலைத் தொழில் செய்தவரைத் தீண்டத்தகாதவராக்கிய கொடுமையை எண்ணி அவரையும் சைவர் உயர்த்தும் என்றார். தேவார மூவர் மணிவாசகர், 15-ஆம் நூற்றாண்டில் தோன்றிய சித்தர்கள் குறிப்பாகவும் ஏறிப்பாகவும் கண்டித்தனர்; பாடினர்.

மேலே காணப்பட்ட சைவத்தார் சாதி ஒழிப்பு பற்றிப் பாடிய பாடல்கள் இக்காலத்தில் பரவலாக எல்லோராலும் பேசப்படுகின்றன எழுதப்படுகின்றன. இதில் என்ன மறைமலையடிகளார் பகுத்தறிவு இருக்கிறது என்ற எண்ணம் முளைப்பது இயற்கை. இவ்வாறு பரவியுள்ள கருத்துக்கள் பலவற்றை முதன்முதலில் கண்டு வெளியிட்டவர் அடிகளாரே. அதற்கு முன்னரும் இப்பாடல்கள் இருந்தன. தமிழறிஞர், சைவர், படித்தவர், ஆனால் எவ்வுணர்வாலோ உள்ளே கிள்ளிய அச்சத்தாலோ 'நமக்கேன்' என்று வெளிச்சொல்லாது விடுத்தனர். துணிந்து குரல்கொடுத்தவர், எழுத்தில் தீட்டியவர் அடிகளாரே. இவற்றை வெறும் வெளிப்பாடுகளாகத் தரவில்லை. ஆய்வுச் செறிவுடன் கண்டு வெளியிட்டார்.

ஆய்வு வெளிப்பாடுகள் பலப்பல என்றாலும் இங்கு சான்றுக்கு ஒன்றைக் குறிக்கலாம்.

சென்னையில் 'தமிழர் நாகரீகம்' என்றொரு பொழிவைத் தந்தார். அதனை இலங்கையிலும் பேசினார். இரு நகரத்தினரும் இதனை நூலாக்க வேண்டும் என்று தூண்டினர். விரித்து எழுதினார். எழுதியவர் முதலில் 'தமிழர் நாகரீகம்' என்னும் தலைப்பில் வெளியிட்டு அடுத்த பதிப்பை 'வேளாளர் நாகரீகம்' என்னும் தலைப்பு மாற்றத்தில் வெளியிட்டார். இஃதொரு அரிய மாற்றம்.

> "தமிழர் உழுதொழிலை முதன்மையாக வைத்தும், வணிகத்தை அடுத்த பணியாக வைத்தும் பணியாற்றினால் செழிப்பான வாழ்வைப் பெறுவர்" [54]

என்று எழுதிய உலக நாகரீகத் தொட்டிலின் முதல் உழவுக் குழந்தை தமிழ்க் குழந்தைதான் என்பது இவர் முடிவு. எனவே, 'தமிழர்' என்பார் வேனில் மண்ணில் தொழில் செய்த வேள் ஆளர் வேளாளரே. அது தொழிலால் வந்த பெயர். அவ்வேளாளர் பணியாக வாணிகம் செய்து வாணிக வேளாளராயினர். நிகண்டுகள் வாணிகர்க்கும் வேளாளர் என்னும் பெயரைக் காட்டுவதை நாம் அறியலாம். ஆட்சிப் பொறுப்பேற்றோர் மன்னன், அரசன், வேந்தன் எனப்பட்டனர். வேளாளருள் துறவு பூண்டோ பூணாமலோ நூல்களை யாத்தவர் அந்தணர் எனப்பட்டனர். எனவே, அனைவரும் வேளாளரே. இவர்கட்குள் சாதியில்லை. சாதி வேற்றுமையும் இல்லை. செய்தொழில் வேற்றுமையால் சிறப்புகள் சேர்ந்தன.

ஆனால் வடவர் நூல்களே பார்ப்பனர், அரசர் வணிகர் வேளாளர் என்பவற்றைச் சாதிகளாகப் பிரித்து உயர்வு தாழ்வு கற்பித்தன. நூல்களில் எழுதவும் சொற்களைச் செருகவும் செய்தனர் என்று எடுத்துக்காட்டினார் அடிகளார்.

சேக்கிழார் தம் திருத்தொண்டர் புராணத்தில் 13 அடியார்களை வேளாளர் என்னும் சொல்லால் உயர்த்திப் பாடினார். ஆனால் வாயிலார் புராணத்தில், "தொண்மை நீடிய சூத்திரத் தொல்குலம்"[55] என்றும், இளையான்குடிமாற நாயனார் புராணத்தில், "வாய்மையில் நீடு சூத்திரதற்குலம்"[56] என்றும் வேளாளரைச் "சூத்திரர்: என்னும் சொல்லால் வைத்திருப்பதை மறுத்து 'வேளாளர்' என்னும் சொல் இருந்த இடங்களில் 'சூத்திரர்' என்னும் சொல்லைச் செருகிவிட்டனர்" என்று இத்தொடர்கள் அமைந்த முறையைச் சான்றுகளுடன் நிலைநாட்டியுள்ளார்.

எழுத்தில் பேச்சில் மட்டுமன்றிச் செயலிலும் அடிகளார் சாதி உயர்வு தாழ்வு பார்த்தவரல்லர். அவர் தோற்றமே கலப்புக் குலங்களால்தான். தம் இல்லத்திலும் சாதி பார்க்காது திருமணம் செய்வித்தார். கைம்பெண் திருமணம், மகளிர் மறுமணங்களை வரவேற்றார்.

அடிகள் காந்தியண்ணல் சபர்மதியில் ஆசிரமத்தை நிகழ்த்தியபோது திரு தாதாபாய், அவர் மனைவி திருமதி தாலிபென், மகள் இலட்சுமி ஆகியோரைக் கொண்ட தீண்டத்தகாத குடும்பம் ஆசிரமத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. உள்ளேயும் வெளியேயும் எதிர்ப்பு. பணஉதவிகள் நின்றன. மறு திங்களுக்குச் செலவிற்குப் பணமே இல்லை என்ற நிலை. அந்நிலையிலும் அக்குடும்பத்தை வைத்துக்கொண்டே தம் சாதி ஒழிப்புத் தொண்டை உறுதியாகக் கொண்டார் அண்ணலார்.

அண்ணல் போன்றே அடிகளாரும் தம் இல்லில் புலவர் முனுசாமி, திரு பாலகுருசிவம், தருமலிங்கம் என்பாரின் குடும்பம் முதலியோரைத் தம் இல்லத்தில் வைத்துப் போற்றித் தம் சாதி ஒழிப்பை நடைமுறைப்படுத்திக் காட்டியவர் அடிகளார்.

இவர் பேச்சையும் எழுத்தையும் செயற்பாட்டையும் ஒன்றுகூட்டி நோக்கினால் பேராசிரியர் முனைவர் மு. வரதராசனார் பாடிய, "சாதி பேயைச் சாடிய வீரன்" என்பதும்,

> "சைவ சமயம் சாதியைக் கடந்ததென்
> றையந் தீர அறிவுறுத் திட்டோன்"

என்பதும் உண்மைப்பொருளின் எழுத்துருவங்கள் எனலாம்.

இவற்றை உணர்ந்த கவியோகி சுத்தானந்த பாரதியார்,

> "மறைமலை யென்னில் சாதி
> மறைந்தொரு குலமே தோன்றும்" [57]

என்று பாடியது அடிகளாரைப் பற்றிய மாணிக்கக் கல்வெட்டாகின்றது.

மறைமலையடிகளார் தம் வாழ்வைத் தமிழின ஊற்றத்தில் ஊன்றினார்; தனித்தமிழ் முத்திரையில் வளர்த்தார்; சைவப் பகுத்தறிவு முழக்கத்தில் பதிவாக்கினார். இவற்றால் தமிழரிடமும் தமிழகத்தும் தமிழ்கூறும் நல்லுலகத்தும் பெற்ற தகுதியைத் திரு.வி.க. அவர்களின் தொடர் ஒன்று கொண்டு நிறைவேறலாம்:

> "தென்னாடு அடிகளால் விழிப்புற்றது என்று
> மண்ணும் முழங்கும்;
> மரமும் முழங்கும்". [58]

# 2. நாகையால் ஒரு மலை

**அ. நா-கை**

நாகர்பட்டினம் என்று வழங்கப்பெறும் நாகப்பட்டினம் மறைமலையடிகளார்க்குச் சிலையமைத்துச் சிறந்தது. மறைமலையடிகளார் நாகையில் சிலையாக அமைந்து திகழ்கிறார். ஏன் நாகையில் சிலையாக அமர்ந்தார்? தமிழ்கூறும் நல்லுலகிற்கு அடிகளாரை அவர் பிறப்பால் வழங்கியதால் அந்நகர் மக்கள் சிலையாக அவர் தம்மிடம் நிலையாக அமர்ந்திருக்கச் செய்தனர். பிறந்த ஒரு காரணத்திற்காகச் சிலையா? அவ்வாறானால் அங்கு பிறந்தோர்க் கெல்லாம் சிலை எடுப்பதா? அப்படிச் செய்யவில்லை. சிலையெடுப்பிற்குக் காரணங்கள் உள்ளன. அக்காரணங்களை நிலையாகத் தாங்கி நிற்கும் அடித்தளக் கருங்கற் பீடம் சொல்கிறது; பாடிச் சொல்கிறது.

சிலைப்பீடத்தின் வடபுறத்துப் பதிந்துள்ள வெண்மெருகுக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ள பாடல் இது:

*"நாகையில் பிறப்பை வைத்தார்;*
*நா, கை யில் தமிழை வைத்தார்;*
*ஓகையில் துறவை வைத்தார்;*
*ஒளியினில் இறைமை வைத்தார்;*
*வாகையில் வாழ்வை வைத்தார்;*
*வகைவகை நூல்கள் வைத்தார்;*
*ஆகையால் சிலையை வைத்தோம்;*
*அவர்நெறி செயலில் வைப்பீர்".*

இப்புகழ்பாடலை எழுதியவன் பெயர் பாடலின் கீழே பொறிக்கப் பட்டுள்ளது. அன்று அடிகளார் புகழ் பாடியவன் இன்றும் உங்கள் முன்னே அவரது புகழ் பேசிக் கொண்டிருக்கிறான்.

நாகர்பட்டினத்தின் சுருக்கச் சொல் நாகை. அது மறைமலையடிகளார் திறன்களின் மாணிக்கச் சுருக்கமுமாகும். அதைத்தான் மேற்பாடலின் இரண்டாம் அடி "நா. கை யில் தமிழை வைத்தார்" என்கிறது. அடிகளார் திறன்கள் சொற்பொழிவுப் பேச்சாலும், நூல்களின் எழுத்தாலும் பளிச்சிட்டன. நாவால் பேசினார்; பொழிந்தார்; முழங்கினார்; கையால் எழுதினார்; விளக்கினார்;

பதிந்தார். பேச்சின் திறத்தாலும் எழுத்தின் திறத்தாலும் விளக்கம் பெற்றவரே அடிகளார். நா பேசியது; கை எழுதியது. பேசி, எழுதி அரும் தமிழ் மலையாக ஓங்கியது. எனவே, 'நா,கை' அவர்தம் மாணிக்கச் சுருக்கம் எனலாம்.

அச்சுருக்கத்தை விரித்து இன்று உங்கள் முன் வைக்கிறேன்.

**ஆ. நாவால் மலை**

நா கையில் நா தான் முதலில் நிற்கிறது. அடிகளார் திறனும் முதலில் நாவால்தான் வெளிப்பட்டது. ''யா நலத்து உள்ளதூஉம்'' என்றாகிய ''நாநலம் என்னும் நலனுடைமை'' அடிகளார்க்குத் தனியுடைமையாக அமைந்தது. பைந்தமிழை, வடமொழியை, ஆங்கிலத்தை உணர்ந்து கற்று அறிவைப் பெருக்கிக் கொண்டவர் அதனை உலகோர்க்கு வழங்கத் தொடங்கியது முதலில் சொற்பொழிவால்தான். அதுதான் உடன்பதியும் என்று கருதியவர், தாமே ''இந்து மதாபிமான சங்கம்'' என்று ஒன்றைத் தோற்றுவித்து அதில் கிழமைதோறும் அன்பர்களைக் கூட்டி சொற்பொழிவாற்றித் தம் கருத்துக்களை விளக்கினார். திரு. மதுரை நாயகம் அவர்கள் நாகை வெளிப்பாளையத்தில் சைவ சித்தாந்த சபையை நிறுவினார். அதில் அவ்வப்போது இளைஞரான வேதாசலத்தை வைத்துச் சைவ சமய, சித்தாந்தச் சொற்பொழிவுகள் ஆற்றவைத்தார். நாகை வாழ்க்கை மாறிச் சென்னை வாழ்க்கை அமைந்ததும் அங்கு தொடங்கி அடிகளார் முழக்கம் தமிழ் நாடெங்கணும் பரவியது. அவரை அழைத்துச் சைவமும், தமிழும் கேட்பதில் கற்றோர்க்கும், ஆர்வலர்க்கும் பேரார்வம் இருந்தது.

தமிழ் நாடளாவிய பொழிவுகள் வடபுலத்து நகர்களிலும், இலங்கையிலும் முழக்கமாயின. கீழைநாடுகளுக்கும், ஒரோமுறை மேலைநாட்டிற்கும் அழைத்தனர். எழுத்துப்பணி, உள்நாட்டுப் பொழிவுப் பணி இவற்றுடன் அவர் மேற்கொண்ட பதிப்புப் பணியுடன் அவர் வகுத்துக்கொண்ட வாழ்வியல் முறைகள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளத் தடையாயின.

பொழிவுகளில் பல நூல்களாக வந்தன. நூற்பணிக்கு இவர்தம் பொழிவு பெருந்துணையாக அமைந்தது. இவர்தம் வாழ்வுக்காலத்தில் சைவசமயச் சொற்பொழிவில் இவர் முடிசூடா மன்னராகவே விளங்கினார் எனலாம்.

நாகைச் சொற்பொழிவு நிகழ்ச்சி-அமைப்பு தவிர மற்றவையெல்லாம் பையப் பையச் சற்று இறுக்கமாகவும் அதே நேரத்தில் பொழிவுத் துறைக்குத் தனிப்பெருமை சேர்ப்பதாகவும் அமைந்தமை மிகக் குறிக்கத்தக்கது. அவர் 'தனித்தமிழ்த் தந்தை' என்று போற்றப் பெற்றது போன்று சொற்பொழிவுத் தந்தை என்றும் கருதப்பட்டார். பொழிவிற்கு அழைப்போர்க்கு இவர் தரும் முன் அறிவிப்புகள் ஏற்பாடுகளுக்கும் தமக்கும் பெரும் வரையறுப்பாகவே அமைந்தன. அவை படிப்படியாகக் குறிக்கத்தக்கன.

பொழிவாற்ற வேண்டி எழுதுவோர்க்கும் அணுகுவோர்க்கும் இவர் சில விதிப்புகளை வைத்தார். அக்கால இரண்டாம் வைப்புக் கட்டணத்துடன் தமக்கு உதவியாக வருவோர் ஒருவர் அல்லது இருவர்க்கும் பயணக் கட்டணம் முன்பணமாகத் தரவேண்டும். தங்குதற்கு வளமான இடம்; தம்முடன் வருவோர்க்குத் தங்கும் வாய்ப்புகள். உணவிற்கு ஏற்பாடு செய்ய பெரும் பட்டியல் ஒன்று. அதில் மூன்று வேளைக்கும் தனித்தனியாக உணவு வகைகளுடன் ஊட்டமான உணவுப் பட்டியல் உண்டு. சொற்பொழிவின் இடையில் பால் பருகுவதற்குத் தனிக்குறிப்பு. இவற்றிற்குமேல் பொழிவிற்காக 300 வெண்பொற்காசுகள். அடுத்தடுத்துக் கூட்டங்கள் அமைக்க விரும்பின் 200,200,150 வெண்பொற் காசுகள் வழங்கவேண்டும். இத்தொகை இக்கால மதிப்பில் 100 மடங்கு எனலாம். இதனால் தமிழ்ச் சொற்பொழிவாளரின் தகவை உயர்த்தினார்.

அடிகளாரை அழைத்துப் பயன்பெற வேண்டும் என்று கருதியோர் பலர் இக்கட்டுப்பாடுகளுக்கும் தொகைக்கும் ஈடுகட்ட இயலாதவராக மொனகினர். வெளிப்படையாகவே திருச்சியில் ஒரு நிகழ்ச்சி நேர்ந்தது.

திருச்சியில் சைவ சித்தாந்தம் பற்றி உரையாற்ற அடிகளார் அழைக்கப் பெற்றார். முறைப்படி யாவும் ஆற்றப்பட்டன; தொகையும் சேர்த்துத்தான். அடிகளார் நிறைவாகப் பேசி நிறைவேற்றினார். கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர் நன்றி கூறினார். நன்றியுரையில் அடிகளார் சொற்பொழிவால் மக்கள் பயனடைவதை நிறைவாகக் குறிப்பிட்டார். ஆனால், பொழிவிற்கு அடிகளார் குறிக்கும் தொகைபற்றிக் குறையாகக் குறிப்பிட்டார். இவ்வாறு மிகு தொகை கேட்பதால் அடிகளாரால் ஆழமாகப் பரவும் சைவமும் தமிழ்ச் சிறப்பும் பரவலாக நிகழ முடியாது போவதையும், மிகு தொகை வழங்க முடியாமல் பலர் அகல்வதையும் குறிப்பிட்டு இனியேனும் தமிழ் நலங்கருதியும், சைவச்சீர் கருதியும் அடிகளார் மிகு தொகை வேண்டாமலும் அதிகம் வாய்ப்பைக் குறிக்காமலும் இருக்க வேண்டும் என்று துணிவாகக் கூறினார். செவிமடுத்துக் கொண்டிருந்த அடிகளார் ஒரு புன்முறுவலோடு நிறுத்திக் கொண்டார். தனியாகவும் நன்றி கூறியவரிடம் ஒன்றும் கூறவில்லை. இவ்வாறு வேண்டி நன்றி கூறியவர் தற்போதும் முத்தமிழ்க் காவலராக வாழும் திரு.கி.ஆ.பெ.விசுவநாதனார்.

அடுத்து ஒரு முறை சென்னை சென்றிருந்த முத்தமிழ்க் காவலர் அடிகளாரை இல்லத்தில் கண்டு உரையாடி மகிழ்ந்து விடைபெற முந்தினார். அப்போது அடிகளார் முத்தமிழ்க் காவலரிடம், "அன்பரே, அண்மையில் திருச்சிக் கூட்டத்தில் நன்றி உரைக்கும்போது யாம் பொழிவிற்கு அதிகம் தொகை கேட்பதைக் குறையாகச் சொன்னீர். ஒன்றை நினைத்துப் பாரும். ஒரு பெண்

அவள் தேவரடியாராக இருந்தாலும், ஒரு பெருவங்கியம் ஊதுபவர் எவராக இருந்தாலும் 500,1000 என்ற கொடுத்து ஆடவும் ஊதவும் கேட்கும் மக்கள் தமிழ், சைவத்திற்கு ஒரு தொகை கொடுப்பதை எண்ணிக் கவல்கிறார்கள் என்றால், நான் ஆடப் பழகாமல் ஊதப் பழகாமல் இந்தப் பாழும் தமிழ் படித்த பாவத்திற்காக ஒரு தொகை பெறுவது கூடாதவனாகின்றேனா ? 'அந்தோ பாழுந் தமிழே! பாவச் சைவமே! என்பதன்றி வேறு என்ன சொல்வது' என்றார்.

கேட்ட முத்தமிழ்க் காவலர் தம்மையும் அறியாமல் அவற்றிற்கு விடையளித்தார். தாரை தாரையாக முத்தமிழ்க் காவலர் கண்களிலிருந்து சில மணித்துளிகள் வடிந்த "கண்ணீரே உரிய விடையும் ஆயிற்று; அடிகளார்பால் மன்னிப்பு கேட்பதாகவும் ஆயிற்று" என்று உரைப்பார் முத்தமிழ்க் காவலர்.

அடிகளாரின் இந்த முறை அவருக்கு மட்டுமன்று தமிழ்ச் சொற்பொழிவாளர் உலகிற்கே ஒரு தனியான மதிப்பை உயர்த்தி நிறுத்தியது எனலாம்.

மேடைப் 'பந்தா' என்பர். அதனை அடிகளார் மேடைப் பாங்காக ஆக்கினார். அடிகளார் இயல்பாகவே கொண்டிருந்த முறைகள் மேடைக்கு இலக்கணம் வகுக்கும் மேடைப்பாங்காயின. அத்துடன், தான் பெறும் தொகை கொண்டு தன் வாழ்க்கையை நிகழ்த்த வேண்டியிருந்தது என்பதற்று; தம் ஆய்விற்கு மும்மொழியில் வரும் நூல்களை வாங்குவதற்கே பெரும் பொருள் ஈடுகட்டப்பட்ட வேண்டிவந்தது. இவ்வாறு பொழிவில் தொகுத்த தொகைகளை நூல்களாகத் தொகுத்து அடிகளார் ஒப்புரவாற்றும் செல்வமாக அதனை ஆக்க அவர்தம் மணி மொழி நூலகத்தைப் பொதுமக்கள் இன்றும் பயன்படுத்தும் பொது நூலகமாக்கிய பெருந்தகவை என்றும் போற்ற வேண்டும். இப்பெருந்தகையாளர் சேர்த்த திரு. அறிவு மருந்தாகித் தப்பா மரமாக நிற்கின்றது மறைமலையடிகளார் நூலகம் என்னும் பெயரில்.

அடிகளார்பால் இயல்பாக அமைந்தவையும் இவர் புனைந்து கொண்டவையும் மேடையில் திகழத் துணையாயின. தோற்றத்தை மெருகிட்டுக் காட்டும் பொன்னிற உடம்பும், வட்ட முகமும் எழுந்து நின்றால் எடுப்பான தோற்றமும் அகவையின் நடுப்பருவத்தில் காவி அணிந்து முக்காடிட்டுக் கொண்ட தோற்றமும் மேடையில் இவரைக் காண்போர்க்கு ஒரு பணிவு உணர்வைத் தந்தன. அடுத்துப் பெருந் துணையாக ஒலித்தது இவரது இனிய குரல். ஓரளவு மிடுக்கா ஆனால், சற்று தணிந்த கீச்சுக்குரலில் இவர் பொழிவைத் தொடங்கியதும் அவையில் ஒரு கவர்ச்சிக்காற்று தவழத் தொடங்கும். இதனை நினைவுகூறும் கவியோகி சுத்தானந்த பாரதியார்,

"மறைமலை என்னில் இன்ப
மங்கல யாழி சைக்கும்'' [59]

என்று பாடினார். 'இன்பந்தரும்' என்றும் 'மங்கலம் எழும்' என்றும் 'யாழ் இசைக்கும்' என்றும் அடுக்கியமை முற்றிலும் உண்மையில் படப்பிடிப்பே. அவர் இன்பம் எழும் என்றதற்கேற்ப அடிகளார் பொழிவைக் கேட்ட மேடையிலேயே, பதிப்பு வேந்தர் உ.வே.சா. அவர்கள் சொற்பொழிவில் மூழ்கிவிட்டேன் என்று மட்டும் சொல்லாமல் "சொற்பொழிவு இன்பத்தில்" என்றார். அடுத்த தொடராக "அவர் இனிய பேச்சொலி என் இரண்டு செவிகளிலும் முழக்கம் செய்கின்றன" என்று கூற எண்ணியவர், "இரண்டு செவிகளிலும் முழக்கம்" என்றார். இவ்வாறே பலரும் அடிகளார் குரலினிமையை, ஒலியின்பத்தைக் குறித்தே பேசினர். பண்டைத் தமிழ்ச் சான்றோர் கழாரம்பர் என்பார் தாம் எழுதிய 'பேரிசை' என்னும் நூலில் தமிழின் பொருளைக் குறிப்பிட முனைந்தவர், "தமிழ் சிவம், இனிமை என்னும் தனிப்பொருளாம்" என்றார். உண்மையாகவே மறைமலையடிகளாரின் தமிழ் இதற்கு இலக்கியம் என்று அழுத்தமான குரலில் குறிக்கலாம். இவர் தமிழ் இனிமை; இவர் சைவம் இல்லை. இவர்தம் பேச்சினிமை, தமிழின் இசையில் தொடங்கி சைவக் கூவலாக ஒலித்தது. இக்குரலினிமைத் தமிழைக் கேட்பதே ஓர் அருமை வாய்ப்பு. அவ்வினிமைக் குரலும் இவர் தமிழ் பரவியமைக்கு ஒரு தளம். இதனை அறிந்து உணர்ந்த கவியோகி சுத்தானந்த பாரதியார்,

"மெல்லிசைக் குயிலைப் போலே
மிழற்றிடும் தமிழைக் கேட்டால்
நல்லிசை உலக மெல்லாம்
தமிழையே நயந்து கேட்கும்'' [60]

என்று பாடிய ஒவ்வொரு சொல்லும் மாறாத பொருள் தொடர்புடன் அடிகளாரை அடையாளங் காட்டுகின்றது. ஓர்ந்து, தேர்ந்து சொற்களைக் கவியோகி பெய்திருக்கிறார் என்று உறுதிபடக் கூறலாம்.

அவையின் மேடையில் அவர்தம் அமைதி தழுவிய மிடுக்கார்ந்த தோற்றத்தில் கண்ணூன்றிக் கவனத்தைப் பதித்திருப்பர் அவையோர். அந்நிலையில் இவர் குரல் ஒலிக்கத் தொடங்கியதும் ஒரு புதுமைக் கவர்ச்சி அலைபாயும். இனிமையான அக்குரல் சற்றுத் தணிவாக அமைந்ததால் அவையோர் கவனம் வைத்துக் கூர்ந்து செவிமடுக்க முந்துவர். இவ்வகையிலும் இவர் பொழிவிற்கு ஒரு பெருமை முன்னோட்டம் அமைந்தது. இவற்றைத் தொடர்ந்து இவர் அமைத்துக் கொண்ட பொழிவு முறைகள் இவரை மேடையில் ஆட்சி செய்ய வைத்தன.

பொழிவிற்கு அவர் குறிப்பிட்ட கொள்கைகள் மூன்று. அவை இவை:

1. சொற்செல்வம் உடைமை;
2. கருத்துக்களைக் காரண காரிய முறையில் வரிசைப்படுத்திக் கொள்ளல்;
3. அவையோர் உள்ளங் கொள்ளும் நெறியறிதல்.[61]

இம்மூன்றையும் இவர் செம்மையாகவே கடைப்பிடித்தார். இவை இவருக்கு மேடை ஆட்சியில் மணிமுடி சூட்டின.

எச்சொற்பொழிவாயினும் முன்னரே ஆழ நினைந்து நூல்களைப் புரட்டிக் கருத்துக்களைக் குறித்துக் கொள்ளுதல் இவர்தம் மரபுப் பழக்கம். அவற்றைப் பார்வையில் வைத்துக்கொண்டும் பேசுவார். மனத்தில் அடுக்கிப் பதிந்து கொண்டும் எடுத்தெடுத்து விளக்குவார். ஒரு மணி நேரத்திற்குக் குறையாமல் இரண்டரை மணிவரை இவர் பேச்சு அமையும். அரை மணியானதும் ஓர் இடைவெளி தருவார். எழுந்து புறத்தே சென்றும் வருவார். வந்து தொடங்குமபோது முதல் தொடக்கம்போன்று குரல் தந்து முன் சொன்னவற்றின் குறிப்புகளை அவைக்குத் தந்து கருத்துத் தொடர்புக்கு அவையினரை கொண்டு செல்வார். இவற்றிற்கும் இடையில் முன்ஏற்பாட்டின்படி பால் அருந்துவார். தொண்டையைக் கனைத்துக் கொள்ளமாட்டார். எதையோ விடுத்து நினைத்துப் பார்ப்பவர்போல் ஒரு நிலையை இவரிடம் காண முடிவதில்லை. 'மறந்துவிட்டேன்' என்று சொல்லும் மேடைச் சறுக்கலை இவரிடம் காணமுடியாது. மேடையில் ஏறும் இடையூறால் சலசலப்பு நேரினும் சமாளிக்க வேண்டிய ஊன்றுகோல் இல்லாமலே தொடர்ந்து பொழிவார்.

**பொழிவு முத்திரை**

அடிகளார் சொற்பொழிவின் தனி முத்திரை இவர் பொழிவின் நிறைவில் குத்துவதாகும். பொழிவில் விரித்துப் பேசியவற்றைத் தொகுத்துச் சொல்லும் முறை இவரால் தவறாது கொள்ளப்பெற்றது. அதிலும் இன்றியமையாக் குறிப்புகளைச் சிக்கனச் சொல்லாட்சியில் தருவார். இதனால் பொழிவைக் கேட்போர் கருத்துக்களைச் சிறு விரலடக்கப் பேழையில் அடக்கிக் கொண்டு செல்லும் பொதிவை ஏற்படுத்தியவர் ஆவார்.

திருவள்ளுவப் பெருந்தகை பதித்துள்ள சொல்வன்மை இலக்கணங்கள் அனைத்திற்கும் மேடையில் இலக்கியம் படைத்தவர் அடிகளார்.

அடிகளார் யாநலத்தும் இல்லாத நாநலம் என்னும் நலன் உடையவர்; சொல்லின்கண் சோர்வு இல்லாதவர்; கேட்டார்ப் பிணிக்கப் பேசிக் கேளாரும் வேட்ப மொழிந்தவர்; திறனறிந்து சொன்னவர்; வெல்லும் சொல்லினர்; பிறர்சொற் பயன் கொண்டவர்; சொலல் வல்லர்; சோர்வில்லாதவர்; அஞ்சாதவர்; உண்மையாகவே எவரும் அவரை இகலில் வென்றதில்லை;

நிரந்தினிது சொன்னவர்; சில சொல்லத் தேறியவர்; மலர்க்கொத்தாய் வாய் மலர்ந்து பொருள் நறுமணம் கமழச் செய்தவர். கற்றார்முன்கற்ற செலச்சொல்லியவர்; வகுத்தும் விரித்தும் தொகுத்தும் பொழிந்தவர்; அனையஞ்சா மாற்றம் கொடுத்தவர்; மொத்தத்தில் தமிழின் தொகையறிந்த தூய்மையவர்.

இவற்றில் உள்ள ஒவ்வொன்றிற்கும் இவர்தம் மேடை வாழ்விலிருந்து பலப்பல சான்றுகளைக் கூற ஏடு நீளும்.

தூய தமிழில் பேசினார்; சைவ நெறியில் பொழிந்தார்; மும்மொழியிலும் மேற்கோள்கள் அடுத்தடுத்தமைத்தார்; சொற்போரிடவும் தயங்காமல் முன்வந்தார்.

கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைமையுரையில் பண்டிதமணியவர்கள் மன்றத்திலிருந்தும் அடிகளார் மேடையிலிருந்தும் தடைவிடையாக மோதிக் கொண்ட நிகழ்ச்சி இவர்தம் சொற்போர் முறைக்குப் பெருவெற்றி எனலாம். வள்ளலார் இராமலிங்கர் அருட்பாவை மறுத்து 'அது மருட்பா' என்று போருக்கு வந்த தமிழறிஞர் கதிரைவேற்பிள்ளையுடன் காஞ்சியிலும் சென்னையிலும் அடிகளார் வழங்கிய சொற்போர் அக்காலத்தில் நாடறிந்த சொற்களப்போர். அதன் வெற்றியைக் கொடியாக்கிப் பிடித்தவர் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள். அதற்குமுன் தமிழறிஞர் கதிரைவேற் பிள்ளையுடன் ஒத்துநின்று வள்ளலாரைக் குறை கூறிய திரு.வி.க. அவர்கள் இச்சொற்போருக்குப் பின்னர் வள்ளலாரைப் போற்றத் தொடங்கினார். அருட்பா பற்றித் தனி நூலொன்றை எழுதி வெளியிட்டு வெற்றிக் கொடியில் மறைமலையடிகளாரைப் பொறித்தார் என்று நாம் பொறிக்கலாம்.

**வைரக் கல்வெட்டு**

அடிகளாரின் அளவையியல் திறனமைந்த பொழிவிற்கு வைர எழுத்துக் கல்வெட்டாக அடிகளாரின் இந்தி எதிர்ப்புப் பொழிவு அமைந்தது குறிப்பிடத் தக்கது. சென்னையில் நிகழ்ந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டிற்குத் தலைமையேற்றுப் பெரியார் ஈ.வேரா., தமிழ்த்தென்றல் திரு.வி.க., அறிஞர் பெருந்தகை அண்ணா, முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம், பாவேந்தர் பாரதிதாசனார் முதலானோர் புடை சூழ முழங்கிய முழக்கச் சொற்பொழிவு இந்தி கட்டாயம் எனும் பகைவர்க்குத் தோல்வியைத் தந்து தமிழர்க்குப் பெருவெற்றி தந்தது.

அடிகளாரின் சொற்பொழிவு வரலாற்றில் இந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டுப் பொழிவிற்குத் தனித்த இடமும் ஒரு பெரும் புரட்சி முத்திரையும் உண்டு. அஃது என்னவென்றால், 'சொற்பொழிவு என்றால் ஏற்பாட்டு அறிவிப்புகளும்,

வரையறைகளும் குறிப்பிட்ட தொகையும் இடம்பெற்று வந்த அடிகளார் பொழிவு வரலாற்றில் இம்மாநாட்டுப் பேச்சிற்கு அழைப்பில்லாமல், ஏற்பாட்டுக் கண்டிப்புகள் இல்லாமல், குறிப்பாகத் தொகை கேட்டு வாங்காமல் சென்று முழங்கியமை சொற்பொழிவு வரலாற்றில் மாறுபட்ட முத்திரை மட்டுமன்று அடிகளாரின் தமிழுணர்வும், தமிழின ஊற்றமும் செறிந்த வெளிப்பாடும் ஆகும்.

அடிகளார்க்குச் சொற்பொழிவில் உந்துதல் நேர்ந்தது மற்றொருவர் சொற்பொழிவால்தான். சென்னைச் சூளையில் வாழ்ந்த சைவத்திரு சோமசுந்தர நாயகர் சைவ சித்தாந்தத்தில் வல்லவர்; தேர்ந்த திறனாளர். சொற்பொழிவாற்றுவதில் புயல் எனப்படும் "வைதிக சித்தாந்த சண்டமாருதம்" என்னும் பட்டம் பெற்றவர். இராமநாதபுரம் மாண்பமை பாஃச்கர சேதுபதி அவர்கள் கூட்டிய அனைத்துமத மாநாட்டில் சைவ சமயம் பற்றிப் பேசி வென்றவர். அம் மன்னரால் பட்டமும் 'தோடா' என்னும் வெற்றிச் சின்னமாகிய பொன்காப்பு இரு கைகளுக்கும் அணிவிக்கப்பெற்றவர்.

அவர் நாகையில் சைவ சித்தாந்த சபைக்கும், கோவிலுக்கும் பேச வருவார். அவர் சொற்பொழிவே அடிகளாரைச் சொற்பொழிவு உலகத்திற்கு அழைத்தது. அதுமட்டுமன்றி அதற்கு முன் தாம் விரும்பிக் கற்ற வேதங்களில் மனம் ஈர்ப்புண்டிருந்த இளைஞர் வேதாசலம் அவ்வேதம், வேதாந்தம், வேதம் காட்டும் மாயாவாதம் பற்றிய கருத்துக்களையே வற்புறுத்திப் பேசி வந்தார். சைவத்திரு நாயகரின் சொற்பொழிவால்தான் இவர் மனம் மாறிச் சைவ சித்தாந்தத்தில் ஊன்றினார். நாயகர் போன்று சொற்பொழிவாற்ற வேண்டும் என்னும் முனைப்பும் கொண்டார். சில கூட்டங்களில் அவர்தம் முறைகளையே கடைப்பிடித்துப் பேசியவர் பின்னர் தமக்கெனத் தன் முறைகளை வகுத்துக் கொண்டார்.

சொற்பொழிவில் ஈர்ப்புண்டு சொற்பொழிவாளரான அடிகளார் சொற்பொழிவாளர்களைப் போற்றவும் செய்தார். உண்மைத் திறமான சொற்பொழிவு வழங்குவாரைப் பாராட்டியதும் உண்டு. அளவிற்கதிகமாகப் பாராட்டாத இவர் ஒருமுறை அவ்வாறும் பாராட்டினார். கடலூரில் ஞானியாரடிகள் மடத்தில் அவ்வடிகளாரால் நிகழ்த்தப்பெற்ற சைவ சமய மாநாட்டில் இவர் தலைமையில் பலர் பேசினர். தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் திருஞானசம்பந்தர் பற்றி விரிவாகவும் பொலிவாகவும் பொழிந்தார். முடிவுரையில் அடிகளார் திரு.வி.க. அவர்களைத் "திருஞானசம்பந்தர் பற்றி இத்துணை திறமாகப் பேசிய இவரை யாம் ஒரு தெய்வமாகவே கொள்கின்றோம்"[62] என்று மனந்திறந்து பாராட்டினார். இப்பாராட்டு அடிகளார் சிறந்த சொற்பொழிவைச் சுவைப்பார்-மதிப்பார் என்பது மட்டுமன்று "வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த" திரு.வி.க. அவர்களைத் தெய்வத்துள் வைத்தலும் தகும்.

அடிகளார் தம் சொற்பொழிவை மற்றவர் ஏற்பாடு செய்து பேசத் துவக்கிய இடம் நாகை வெளிப்பாளையத்துச் சைவ சித்தாந்த சபை அன்றோ ? தொடர்ந்து இவர் பல்லிடங்களிலும் மாநாடுகளிலும் ஆண்டு விழாக்களிலும் உரையாற்றினார். விழாவினர் மிகச் சிறப்புடன் வரவேற்றுப் பெருமை தந்தனர். ஆயினும் தாம் இளைஞராகப் பேசத் துவங்கிய நாகையில் அச்சைவ சித்தாந்த சபை பெருமைப்படுத்தியது இவர் சொற்பொழிவு வரலாற்றில் ஒரு மங்கலமான பதிவு எனலாம்.

நாகை மக்கள் அச்சபையின் ஆண்டுவிழாவிற்கு அழைத்து அச்சபை அமைந்த தெரு முனையிலிருந்து பந்தரிட்டு, பெருவங்கியம் முழங்க வரவேற்று, நடந்து செல்ல பட்டால் நடைபாவாடை விரித்து நடத்திச்சென்று அளித்த பெருஞ்சிறப்பு மடியில் ஏந்திய தாயே முடிசூட்டி மகிழும் பெருஞ்சிறப்பாக அமைந்தது. 'உள்ளூர் மேளம் உயர்த்தப்படாது' என்றொரு குறை சொல்வார்கள். அதற்கு மாறாகப் பிறந்த ஊரிலே அடிகளார் குறிப்பிடத்தக்க பெருஞ்சிறப்பு பெற்றமை தமிழுக்கும் சைவத்திற்கும் தனிச்சிறப்பை மலர்த்திய தகவிற்கு தந்த பெருமதிப்பாகும்.

மேடையில் பெருஞ்சிறப்பிலேயே வளர்ந்த அடிகளார் மேடையில் சில வேளைகளில் சில குறைபாடுகளைக் கொண்டு அவற்றில் கருத்து மாறுபாடு காரணமாக நேர்ந்தவற்றை மனமுவந்து ஏற்றுச் சில நேரங்களில் அவற்றைப் போற்றத்தக்க மறுமொழிகள் தந்து வென்றார். அமைதியாகச் சான்றுகள் காட்டி மறுப்பதும் விளக்குவதும் இவர்தம் மேடைப் பண்பு. மிகச்சில குறிப்பிடத்தக்க இடை நிகழ்ச்சிகள் நேரும்போது சற்று உணர்ச்சி வயப்பட்டுக் குரலைச் சற்றே உயர்த்தி மறுப்பதும் உண்டு. சினந்தோ கடிந்தோ பேசியதில்லை.

கருத்துக்களை மறுத்து அல்லது விளக்கங்கேட்டு எதிர்க்குரல்களை எதிர்கொண்டிருக்கிறார். ஆனால், இவரைப் பற்றித் தனித்த முறையில் குறை பேசிய ஓரிரு நிகழ்ச்சிகளில் இவர் நடந்துகொண்ட முறை இவரது பெருந்தகவுக் குணத்தை வெளிப்படுத்தியதாகும். ஒன்றைக் குறிக்கலாம்.

**மலிவான நகைச்சுவை**

தஞ்சாவூர் கரந்தைத் தமிழ்ச் சங்கத்து ஆண்டுவிழாத் தலைமையேற்ற போது ஒரு புலவர் பேசினார். அவர் ஏதோ சற்று வெறுப்புணர்ச்சி கொண்டவர் போலும். அவர் அடிகளாரது ஒப்பனை அமைப்பைக் கிண்டல் செய்வதுபோன்று பேசினார். துறவியாகப் பெயர் சூட்டிக்கொண்டு காவி ஆடையணிந்து காட்சி தரும் மறைமலையார் தம் குடுமியைத் தற்கால ஆங்கில முறையில் பின்வெட்டு முன்முடியாக அதாவது 'கிராப்' பாக வைத்துக் கொண்டிருப்பது ஏன் ? இது பொருந்தாது'' என்று மேடை நாகரீகமில்லாது வெளிப்படையாகவே கண்டிப்பதுபோல் பேசினார். அடிகளார் அவரை ஓரக்கண்ணால் பார்த்துவிட்டுப்

புன்முறுவல் பூத்தவாறே அமர்ந்திருந்தார் என்று அவர் மகனார் எழுதியுள்ளார். மேலும் அடிகளார் முடிவுரை சொல்லும் போது மன்றத்திலுள்ளவர்கள் அடிகளார் இதுபற்றி என்ன சொல்லப் போகிறார்; எப்படி நடந்துகொள்ளப் போகிறார்' என்று எண்ணியிருந்தபோது பேச்சில் தொடர்பில் பேச வேண்டியவற்றையே விலக்கிச் சென்ற அடிகளார் அப்புலவர் பேச்சில் சொன்னவற்றில் சிலவற்றை ஏற்றும் பேசி, கண்டித்த 'கிராப்'பற்றி புன்முறுவலுடன் "புலவரின் மயிர் ஆராய்ச்சி மிக நன்று" என்று நயத்தோடு முடித்தார்.அவையோர்க்கு இது சுவையாகவும் இவர் பெருந்தகவை உணர்த்துவதாகவும் இருந்தது. இஃதொரு மலிவான நகைச்சுவை என்றாலும்- அதில் சிறிது கிண்டல் இருந்தாலும் சினம் கொள்ளாமல் அதனைப் பெரிதாகக் கொள்ளாமல் தொட்டது சிறப்பாகவே அமைந்தது என்று இவர் மகனார் புலவர் மறை திருநாவுக்கரசு குறிப்பிட்டார்.

தமிழில் பொழிவுத்திறன் பெற்றிருந்தமை போன்றே ஆங்கிலத்திலும் சிறப்பான ஆங்கிலச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். சென்னை பெசண்டு கழகத்தில் "சாங்கியமும் சித்தாந்தமும்" என்பது பற்றி இரண்டு மணியளவில் உயர்ந்த ஆங்கில நடையில் உரையாற்றினார். இக்கழகம் தேர்ந்த ஆங்கில அறிவும், ஆன்மிக உணர்வும் கொண்டவர்கள் கூடும் அவை. இப்பேச்சு மிகவும் போற்றப்பட்டதாம். மேலும் சில மன்றங்களிலும் ஆங்கிலப்பேச்சு அமைந்துள்ளது. வடபுல பயணத்தின்போது கல்கத்தா சைவ சித்தாந்த சபையிலும் மற்றும் சில நகர்களிலும் ஆங்கிலச் சொற்பொழிவு ஆற்றிப் புகழுரை பெற்று வந்தார்.

மேடைக்குரிய அனைத்துத் துறைகளிலும் தம் முத்திரையைப் பதிப்பித்தார் அடிகளார். இவர்தம் பொழிவுத் திறத்தையெல்லாம் ஒன்றுகூட்டி ஒருங்கிணைத்தால்,

> அறிவு என்னும் ஊற்றுக்கண்ணும், சொற் பொழிவு என்னும் அருவியும்,
>
> நறுங்கருத்துத் தேக்கம் என்னும் சுனை, மடமைப் பிணிபோக்கும் மூலிகைகளும்,
>
> தமிழ் மணமும் சைவப்பெருமையும் என்னும் அகிலும் சந்தனமும்,
>
> கருத்துறுதி என்னும் தேக்கம், நயங்கள் சுவைகள் என்னும் தேனும் பலாவும்,
>
> குரலென்னும் குயிலும், பளிச்சென்று கருத்தை எடுத்து நீட்டும் தந்தமுள்ள யானைகளும்,
>
> அகழ்ந்தெடுத்த ஆய்வு முடிவுகள் என்னும் மாணிக்க வைரங்களும்,

நெஞ்சுறுதி என்னும் பாறையும், புகழ் என்னும் மலைமுகடும்,

பாராட்டிப் போர்த்திய பொன்னாடை என்னும் முகிற்குழாமும்,

போற்றியும் வாழ்த்தியும் சொரிந்த மலர் மாரி என்னும் மழைப் பொழிவும் ஒன்றுகூடிக் காட்சி தரும் தோற்றம் ஒரு மலையாகவே திகழ்ந்தது.

எனவே அடிகளார் தம் பெயருக்கேற்ப ஒரு மலையே. ஆனால் இவர் கருத்தாலும் புகழாலும் மறையாத மலை; தமிழ் மறைமொழிகளை வெளிப்படுத்தியதால் மறைமலை. இவற்றை உணர்ந்தது போன்று அந்நாள் சட்டப் பேரவைத் தலைவர் திரு. சே.சிவசண்முகம் அவர்கள் இவரை,

"இமயமலை பொதியமலை இவற்றையெல்லாம் விட
பெரியமலை நம் மறைமலை''[63]

என்று பாராட்டியுள்ளார்.

"மனித்த இனம் தலைநிமிரச் செய்த மாண்பு
மறைமலையார் சொற்பொழிவு மலையென் பேனே''

என்றும்,

"மற்றொருவர் இப்பிறப்பிலுண்டோ பேச?
மறைமலையார் சொற்பொழிவு மலையென்பேனே''[64]

என்னும் அடுக்கியடுக்கிப் புகழ்ந்தார் கவிஞர் வாணிதாசனார்.

மேற்சொன்ன மலை உருவகத்தை உருவாக்க அடிகளார் தம் நாவே காரணம். நாநலத்தால் உருவான மலை மறைமலை. வாய் என்னும் அறைக்கும் பற்களாம் கோட்டைக்குள் ஊறும் உமிழ் என்னும் ஊற்று சூழ இதழ்கள் என்னும் கதவுகளுக்குள் அடங்கிய நா தான் உலகங் காணும் பெருமலையாய் ஆக்கிற்று. ஆம் மறைமலை அடிகளார் நாவால் ஒரு மலை. அஃதே காயாலும் - கை சூழங்கி எழுத்தாலும் ஒரு மலை என்பதும் அறியத்தக்கது.

**இ. கையால் மலை**

'கை' என்னும் சொல் உறுப்பைக் குறிக்கும். அது நேர்பொருள் அன்று. 'செய்' என்பதே கை ஆயிற்று. திராவிட மொழிகளில் இன்னும் 'செய்' கையைக் குறிக்கிறது. செய்வதால்தான் கையிற்கு இப்பெயர் வந்தது. கால் நடக்கிறது; கண் பார்க்கிறது; காது கேட்கிறது. இவ்வாறு ஒவ்வோர் உறுப்பும் ஒவ்வொன்றைத் தன் தன் செயலாகச் செய்யினும் 'செய்தல்' என்னும் தொழில் கைக்குரியது. எச்செயலும் செயற்படக் கைதான் முன்னின்று உதவுகிறது. அதனால்தான் அதற்குக் 'கை' என்னும் பெயர் அமைந்தது . 'செய்கை' என்னும் செயற்பாட்டுச் சொல்லிலும் 'கை' அமைந்து அங்கு தொழிற்பெயர் இறுதி நிலையாகச் செயலையே வலியுறுத்தி நிற்கிறது.

மாந்தனின் தொடக்க காலத்தில் செய்கைதான் பேச்சுமொழிக் குறியாக இருந்தது. கையை அசைத்தே கருத்தை வெளிப்படுத்தினர். அச்செய்கைமொழிதான் பின்னர் 'சைகை மொழி' எனப்பட்டது.

'கை' என்னும் சொல்லுக்கே செய்தல் என்னும் பொருள் மீண்டது. இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் 'கையறு நிலை' என்பது ஒன்று.

> "கழிந்தோர் தேஎத் தழிபடர் உறீஇ
> ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்" [65]

என்னும் தொல்காப்பிய நூற்பா சொல்லும் கையறு நிலைக்குச் 'செயலற்ற நிலை' என்று பொருள் எழுதினர். ஏதும் திடீரென்று துன்பம் அல்லது இடையூறு வந்தால் கைகளைப் பிசைந்து கொண்டு கலங்கி நிற்பதைப் பார்க்கின்றோம்.

கைக்குச் 'செயல்' என்னும் பொருள் மட்டுமின்றி 'ஒழுக்கம்' என்னும் பொருளும் உண்டு. 'கையொன்றறிகல்லாய்'[66] என்னும் கலித்தொகைச் சொல்லுக்குச் 'செயலறியாதவனே' என்றும் ஒழுக்கம் அறியாதவன் என்றும் பொருள். 'கைகோள் வகையே' [67] என்னும் தொல்காப்பியச் சொல்லுக்குப் பேராசிரியர் 'கைகோள் என்பது ஒழுக்கங் கோடல்' என்று பொருள் விரித்தார். இதனை வைத்தே நம்பியகப் பொருள் ஆசிரியர், "களவு கற்பெனவிரு கைகோள் வழங்கும்"[68] என்னும் நூற்பா படைத்தார். திருவள்ளுவரும்.

> 'பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
> பேதை வினைமேற் கொளின்'[69]

என்னும் குறளில் 'கையறியா' என்றார். இதற்கு மணக்குடவர் 'ஒழுக்கமறியாத' என்றெழுத காளிங்கரும் அதனையே கொண்டு மொழிந்தார். பரிமேலழகர் 'செய்யும் முறையறியாத' என்னும் செயல் என்னும் பொருளைக் கொண்டு எழுதினார்.

> 'இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
> கையாறாக் கொள்ளாதாம் மேல்' [70]

என்னும் குறட்பாலில் உள்ள 'கையாறா' என்பதற்கு 'இடும்பை' என்று பரிமேலழகர் குறித்து, மேலும், "இதற்கு ஒழுக்க நெறி என்று உரைப்பாரும் உளர்"[71] என்று குறிக்கக் காளிங்கர் 'ஒழுக்க நெறி' என்றே எழுதினார்.

எனவே, 'கை' என்பதற்குச் செயலுடன் ஒழுக்கம் என்னும் பொருள் உண்டு.

கை பற்றி இத்துணை விவரமாகக் குறிக்கும் நோக்கம் கையால் எழுதும் செயல் ஓர் ஒழுக்கமும் ஆகும் என்பதைக் காட்டவே. எழுதும் செயல் 'எழுதல்' எனப்படும். அதற்கு 'எழுதுகை' என்னும் சொல்லமைப்பும் உண்டு. 'எழுதுகை'

என்பதற்கு 'எழுதும் செயல்' என்பதுடன் 'எழுதும் ஒழுக்கம்' என்பதும் ஆழ்பொருள். இப்பொருள் எழுத்தில் நல்லியல்பைக் குறிப்பாக அறிவிக்கின்றது.

நாவால் மலையான அடிகள்ர்ர் கையாலும் மலையாவதற்கு எழுத்துப் பணியை ஓர் ஒழுக்கமாகக் கொண்டார். தாம் எழுதும் இயல்பு பற்றி அவரே குறிக்கின்றார்.

> "யாம் எழுதும் நூல் ஒவ்வொன்றும் பன்னாளும் பலமுறையும்
> ஆய்ந்தாய்ந்து எழுதப்படுவது. யாம் எழுதுவது எம் உள்ளத்திற்கு
> இனிமை தரும் வரையில் எமதறிவிற்குப் பொருத்தமாகக்
> காணப்படும் வரையில் அவற்றைப் பல்முறையும் நினைந்து
> நினைந்து விரையாமல் மெல்லென எழுதுதலே எமக்கு
> வேரூன்றிய இயற்கையாகிவிட்டது'' [72]

அடிகளார் கடைப்பிடித்த எழுத்து நெறியின் விளக்கம் இது.

> பன்னாளும் பலமுறை ஆய்வார்;
> ஆய்ந்தாய்ந்து எழுதுவார்;
> உள்ளத்திற்கு இனிமைதரும் வரை நினைந்து பார்ப்பார்;
> அறிவிற்குப் பொருத்தமாகும்வரை நினைந்து நினைந்து
> பார்ப்பார்;
> விரைந்து எழுதமாட்டார்;
> மெல்லென எழுதுவார்.

இவையெல்லாம் இவருக்கு இயற்கை; வேரூன்றிய இயற்கை. மீண்டும் இக்கருத்துக்களைப் பிரித்துப் பிரித்துக் காட்டியதன் நோக்கம் எழுத்தில் எத்துணை கவனமும் ஒழுங்கும் கொண்டு இயங்கியுள்ளார் என்பதைப் பளிச்சிட்டுக் காட்டவே. எழுதுவதற்கு முன் கருத்துக்களை ஆய்ந்தாய்ந்து மீண்டும் நினைந்து நினைந்து உணர்விற்கும் அறிவிற்கும் பொருந்தக் கண்டு நிறைவேற்றுகின்றார் என்றால் படிப்போரின் ஏற்பையும் எண்ணிப் பார்த்துள்ளார். இவ்வாறு எழுதுவது இக்காலத்திற்கு எவ்வகையிலும் பொருந்தும் என்று சொல்ல இயலாது. விரைவும், பக்க நிறைப்பும், பொழுது போக்கு நோக்கமும் கொண்ட எழுத்துக்கு இவை பொருந்தா. இவ்வாறு அடுக்கிய தகவுகள் அடிகளார் தமக்கு இயல்பான செயலாகிவிட்டது என்கிறார். இயற்கை என்பதிலும் ஒரு கை இருக்கிறது. அதனால் இயற்கைக்கு 'இயல்பான செயல்' என்றும் பொருள். இயல்பான ஒழுக்கம் என்றும் பொருள். எனவே, அடிகளார்க்கு எழுத்துப்பணி ஒரு செயலாக மட்டும் இல்லை; ஒழுக்கமாகவும் இருந்திருக்கிறது. இவ்வொழுக்கம் தம் அடித்தளத்தில் இறுகிய பிடிப்பாகவும், ஊற்றாகும் கருத்துக்களை வாங்கித் தரும் வேராகவும் அமைந்திருக்கிறது எனலாம்.

இவ்வகை இலக்கணத்துடன் அடிகளார் எழுத்துலக இலக்கியமாக நூல்களைப் படைத்துள்ளார்.

இவர் கையெழுத்தின் உருவம் மணிமணியானதா; முத்துமுத்தானதா' என்று வியந்து காணும் அளவிற்கு அழகானது. முதல் பக்கத்தில் முதல் வரியில் அமைந்த அழகிலேயே இறுதிப்பக்கத்து இறுதி வரியிலும் எழுத்துக்கள் அழகிழக்காமல் அமைந்திருக்கும். மேற்சொன்ன கவனத்தில் எழுதப்பெறுவதால் அடித்தும் திருத்தியும் எழுதப்படவில்லை. செய்திகளுக்கேற்பப் பத்திகள் பிரித்தும் நிறுத்துக்குறிகள் இட்டும் எழுதுவார். நீண்ட தொடர்கள் பொருள் பொருத்தம் மாறாமல் ஆற்றொழுக்காக நம்மை அழைத்துச் செல்லும்.

இவர் தம் உரைநடையில் அருஞ்சொற்கள் இடம்பெற்றன. 'அன்னோ' (ஐயோ), படுகர் (பள்ளம்), தனிமம் (படுக்கை) முதலிய மிகச்சில சொற்கள் இடம் பெற்றுள்ளன. இச்சொற்களையும் அணுகித் தேடி எடுத்துக் காட்டியுள்ளேன் எனில் இவை மிகமிக அருகியவை என்றுணரலாம். பொருட்டோற்றங்களில்' போன்ற அரிய புணர்மொழிகள் எழுதப்பட்டவையும் மிகச் சிலவே. கடைப்பிடிப்பாயாக என்பதைக் 'கடைப்பிடிக்க' என்று சுருக்கம் கருதி எழுதியுள்ளார். 'அவையிற்றை' (அவற்றை) என்றெழுதுவதும் பின்னர் விடுபட்டது.

'யாது' என்னும் மூலச்சொல் போன்றவற்றை இவர் எழுதியது அச் சொல்லாட்சி மறையக்கூடாது என்பதற்காக.

முற்கால உரையாசிரியர் தம் உரைகளைத் தம் மாணவருக்குப் 'பாடம் சொல்லும் பாங்கில் எழுதினர். இடையிடையே மாணவர் ஐயம் வினாவுவதும், ஆசிரியர் விடை விளக்கம் தருவதும் போன்ற உத்தி கையாளப்பெற்றது. அது போன்றே அடிகளாரும் 'அற்றன்று' என்றும் 'எனின் நன்று' என்றும் எழுதியதுண்டு. இவையெல்லாம் இவர் நாகப்பட்டினத்தில் வாழ்ந்தபோது தொன்மை இலக்கியங்களிலும், உரைகளிலும் ஊன்றியிருந்த நிலையில், காலம் செல்லச் செல்ல இவை மறைந்தன எனலாம்.

இவர்தம் சொற்றொடர்கள் நீளமானவை. ஆனால் ஆற்றொழுக்கானவை. சில தொடர்கள் 60, 70 சொற்களையும் கொண்டிருக்கும். பதிப்பில் அமையும் பத்திகள் 3, 4 பக்க அளவில் அமைந்ததும் உண்டு. இவையெல்லாம் எடுத்துக்கொண்ட பொருள் தொடர்பால் அமைந்தவை.

இவற்றை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு 'மறைமலையடிகளார் தமிழ்' கடுமையானது என்றால் அவர் தந்துள்ள புத்துணர்வுக் கருத்துக்களை ஏற்க மறப்பவர்கள் ஏற்றிய பழிச்சொல்.

**சொல்லாட்சி**

ஆனால் இவர்தம் சொல்லாட்சியில் புத்தமைப்புகள் இருந்தன. நீர் தேக்கப்பெற்று மதகுவழி அதன் வாயிலிருந்து வெளிவந்து கால்போல் நீண்டு

ஓடும் நீரோட்டத்தை 'வாய்க்கால்' என்போம். மலைமீது சமதளத்தில் இவ்வாறு ஓடிவரும் நீரோட்டத்தை 'ஓடுகால்' என்னும் சொல்லுருவாக்கி எழுதினார். 'நம்பிக்கை' என்னும் சொல் 'நம்பும் செயல்' அல்லது 'நம்பும் ஒழுக்கம்' என்னும் பொருள் தருவது. ஆனால், அதன் புணர்ச்சி ஒவ்வாதது. இது கருதிய அடிகளார் 'நம்பகம்' என்னும் சொல்லை உருவாக்கி எழுதினார். "மலைமுகடு, மலைக்குவடு", "பொற்றை மலை" என்றெல்லாம் எழுதுபவரே "மொழுக்கலான கருங்கற் பாறை" என்று "மொழுக்கன்" என்னும் வழக்குச் சொல்லையும் கையாண்டார்.

தம் தமிழ்நடை பற்றி அடிகளார் தாமே சீர்தூக்கிப் பார்த்துள்ளார். அதில் சற்றுக் கடுமை இருப்பதை உணர்ந்துள்ளார். எளிமைப்படுத்த வேண்டும் என்ற உள்ளெண்ணத்தில் மனம் பற்றியிருக்கிறார். இதனை அவரே,

> "ஏகினான் என்பதைப் போயினான் என்றும், வம்மின் என்பதை வாருங்கள் என்றும் எழுதக் கற்றுக் கொண்டேன். கற்றவர் கல்லாதவர் ஆகியவருக்கும் புரிய வேண்டும் என்பதற்காகவே அப்படி எழுதினேன்" என்று மனந்திறந்து எழுதக் கற்றுக் கொண்டேன்" [73]

என்று குறித்தார்.

ஆனாலும், இவர் நடைக்குக் 'கடினம்' என்றொரு பெயர் சூட்டப்பெற்றதை வைத்து அவர்க்கு மாற்றாராயினார், பின்னர் அடிகளார் மாறியவற்றை விடுத்துப் பழங்கதையே பேசினர்.

புலமைச் சான்றோரும், தமிழறிஞர்களும்; தமிழ்மொழி தகவை நாடுவோரும், தமிழ் மரபைக் காக்க விழைந்தோரும் அடிகளார் தமிழ் நடையைப் போற்றினர்; விரும்பிப் படித்தனர்; தாமும் கையாண்டனர்; கையாளச் செய்தனர். இவர் தம் உரைநடைத் திறத்தில் மனம் ஊன்றிய பரிதிமாற்கலைஞர், "உரை நடை கைவந்த வல்லாளர்"[74] என்று புகழ்ந்து எழுதினார். இதிலும் வல்லாளர் என்றதற்கு வன்மை உடையவர் என்று பொருள் கொண்டுவிடாது திறமையுடையவர் என்னும் உட்பொருளைக் கருத வேண்டும். அடிகளாரின் ஆசிரியர் சைவத்திரு. சோமசுந்தர நாயகர் அவர்கள்,

> "உன் தனித்தமிழைப் படிக்கப் படிக்க என் செவிகளுக்கு இன்பமாயிருக்கிறது. தனித்தமிழில் எழுதுவதை விடாதே. நீ தனித்தமிழில் எழுதுவது எனக்கு விழிப்பையும், கிளர்ச்சியையும் உண்டுபண்ணுகிறது" [75]

என்று பாராட்டி ஊக்கினார். வடமொழிச் சொற்களை மிகக் கலந்தே எழுதிய நாயகரவர்கள் தனித்தமிழ் நடையில் கவர்ச்சி கொண்டது அடிகளாரின் தமிழ் நலங்கருதியதையே குறிக்கும். திறஞ்சார்ந்த ஆசிரிரும்

சொற்பொழிவாளருமான ஒரு சான்றோர், தமக்கு "விழிப்பை உண்டுபண்ணுகிறது" என்றும் "கிளர்ச்சியை உண்டுபண்ணுகிறது" என்றும் குறிக்கும் அளவிற்கு அடிகளார் மொழிநடை சிறப்புற்றது. இதனால்தான் பேராசிரியர் அ.சிதம்பர நாதனார், "நாட்டின் 'மறைமலையார் நடை' என ஒன்று தோன்றிப் பரவியுள்ளது. எனவே அடிகள் 'தனித்தமிழ் நடையின் தந்தை' எனற்பாலர்[76] என்று பாராட்டித் "தனித்தமிழ்த் தந்தை" என்று நாடு வழங்கவும் வழிவகுத்தார்.

இவர்தம் தனித்தமிழ் உரைநடை முந்தையோர் கைக்கொண்ட உரைநடையிலிருந்து வேறுபட்டது. தமிழ் உரை நடை, வடமொழி உரை நடை, ஆங்கில உரைநடை இவற்றின் தனிப்போக்குகளை அவைகளைப் படிக்குங்கால் கண்டுணர்ந்து தமிழ் மரபிற்கேற்பத் தாம் தம் நடையை அமைத்துக் கொண்டார் எனலாம்.

தமிழிலும் வடமொழியிலும் ஆங்கிலத்திலும் அடிகளார் இளமை முதல் பயின்ற நூல்கள் எண்ணிறந்தன. தேர்ந்தெடுத்த நூல்களையே பயின்றார். தொடக்க காலத்தில் புத்தகக்கடையிலும் பெரியோரிடத்தும் நூல்களைப் பெற்றும் பயின்றார். தான் காலூன்றிய வாழ்வுக் காலத்தில் தாம் ஈட்டிய பொருளில் ஒரு பகுதியை நூல்கள் வாங்குவதற்குச் செலவிட்டார். ஆழ்ந்து நுணுகிப் பயின்றார். இவர்தம் நூலறிவை நேரில் உணர்ந்த மனோன்மணியம் சுந்தரனார், "இத்துணை இளம் வயதில் இவ்வளவு நூல்களை ஆழ்ந்து பயின்றுள்ளார் என்பது வியப்பிற்குரியது" என்று பாராட்டியுள்ளார்.

அவ்வாறு பயின்றவற்றின் ஆழங்களை உள்ளத்தில் முறையே அடுக்கி, அவ்வடுக்கிலிருந்து வேண்டுங்கால் எடுத்த திறம் இவரது நினைவாற்றலுக்குச் சான்று என்பர்.

அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், தமிழ்ப் புலவர்களின் வேலையாகப் பின்வருவதை எழுதினார்;

> "ஆவினிடத்தில் பாலிருக்கிறது என்றால் அதன் உடல் முழுதும் பாலைத் தேடிச் செல்வதில்லை. கறக்க வேண்டிய இடத்தில் முறைப்படி கறந்தால்தான் பால் கிடைக்கும். அதைப்போலத் தமிழ் இலக்கியங்கள், கோட்பாட்டு நூல்களிலிருந்தெல்லாம் கருத்துக்களை முறைப்படி கறந்து தரவேண்டியது தமிழ்ப் புலவர்களின் வேலையாகும்"[77]

இது மறைமலையடிகளாரை மனத்தில் இருத்தி வரையப்பட்டதே. இதற்கேற்பவே அடிகளார் எழுத்துருவங்கள் அமைந்திருந்தன. எழுதத் தொடங்கிய நாள் முதலே இப்பாங்கிலேயே எழுதினார்.

முதன்முதலில் சிறு கட்டுரையாகச் சைவ சித்தாந்தம் பற்றி எழுதி நண்பர் உதவியுடன் வெளியிட்டார். தொடர்ந்து தாம் பேசிய பொழிவுகளை எழுத்துருவாக்கி நாகை 'நீலலோசனி' இதழில் வெளிவரச் செய்தார். சிவத்திரு சோம சுந்தர நாயகர் கருத்திற்கு மாறுபட்டு மறுப்பெழுதிய கட்டுரை ஒன்றிற்கு மறுப்புக் கட்டுரை எழுதினார். 'நீலலோசனி' இதழில் வந்தவற்றைத் தனித்தனியாகச் சிறிது கட்டுரைகளையே சிறு பதிப்பாகவும் வெளிவரச் செய்தார். தொடர்ந்து ஆய்வு நூல்கள் எழுதினார். இவ்வாறாக நூற்பணி பெருகியது.

முதலில் 'நாகை வேதாசலம் பிள்ளை' என்னும் பெயரிலும், பின்னர் 'சுவாமி வேதாசலம்' என்னும் பெயரிலும் எழுதினார். 'சித்தாந்த தீபிகை' என்னும் இதழுக்கு 'முருகவேள்' என்னும் புனைபெயரிலும் எழுதினார். பின்னர், 'பல்லாவரம் பொதுநிலைக் கழகக் குருவும் சித்தாந்த தீபிகை ஆசிரியருமான மறைத்திருவாளர் சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகள் என்றும், பின்னர் பல்லாவரம் பொதுநிலைக்கழக ஆசிரியர் மறைத்திரு சுவாமி வேதாசலம் என்றும் மறைமலையடிகள் என்றும் நூல் முகப்பில் பெயரிட்டு எழுதினார்.

நண்பர்கள் வழிப் பதிப்பாகவும், தம் பதிப்பாகவும் தென்னிந்தியச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பதிப்புக்களாகவும் இவர்தம் நூல்கள் வெளிவந்தன. பல்லாவரத்தில் தம் இல்லத்திலேயே அச்சகம் அமைத்துத் தம் நேர்பார்வையில் பதிப்பித்தார். 8 பக்கங்கள் அளவில் சிறு வெளியீடுகளாகவும், 25 முதல் 100 பக்கங்கள் வரை குறும் பதிப்புக்களாகவும், 200, 300 பக்க அளவில் நிறை பக்க நூல்களாகவும், இரண்டு தொகுதிகளாக 944 பக்கங்கள் வரை பெருநூல்களாகவும் வளர்ந்தன.

பல நூல்கள் இரண்டாம் பதிப்பு முதல் 5 பதிப்புகள் வரை வெளிவந்தன. அக்கால விற்பனைக் களம் தமிழுக்குப் பெருகியதில்லையாதலால் பல இரண்டாம் பதிப்புகள் 250 படிகள், 300 படிகள் என்னும் அளவில் வெளிவந்தன. யாழ்பல்கலைக்கழகத்தில் 'வேளாளர் நாகரிகமும்', சென்னைப் பல்கலைக்கழகத்தில் 'அறிவுரைக் கொத்தும்' கல்லூரி இடைநிலை வகுப்பிற்குப் பாட நூல்களாயினமையால் சில ஆயிரம் படிகள் செலவாயின. இவை அடிகளார் நூலின் பதிப்பு வரலாறு.

இவ்வாறு இவர் பெயரால் வெளிவந்த நூல்கள் 65. இவற்றுள் தமிழ் நூல்கள் 61. ஆங்கில நூல்கள் 4. இவையன்றித் தமிழில் 'ஞானசாகரம்' என்னும் 'அறிவுக்கடல்' திங்கள் இதழையும், இரண்டு ஆங்கில அரைத் திங்கள் இதழ்களையும் வெளியிட்டார்.

தமிழ் நூல்களுக்கு ஆங்கிலத்தில் முன்னுரை எழுதும் முறையும் இருந்தது. சில ஆங்கில முன்னுரைகள் மிக நீண்டனவாகவும், ஒரு குறும்நூல் எனத்தகும் பாங்கிலும் அமைந்தன. 'சிந்தனைக் கட்டுரைகள்' என்னும் நூல் 150 பக்கங்கள் கொண்டது. இதில் 42 பக்கங்கள் ஆங்கில முன்னுரை.

மேலும் இரண்டு தமிழ் நூல்கள் எழுத எண்ணியிருப்பதாகவும், ஓர் ஆங்கில நூல்* எழுதப்போவதாகவும் சில முன்னுரைகளில் [78]குறித்தார். இப்படி அவர் நூல்கள் பற்றி ஒரு கணக்கீடு தருவது அடிகளாரின் வாழ்வியலில் நூலாக்கம் நல்ல பங்கு வகித்தது என்பதை வெளிப்படுத்தும்.

> "மண்கண்ட வெண்குடைக் கீழாக மேம்பட்ட மன்னருமென்
> பண்கண்ட வளவிற் பணியச் செய்வாய்"[79]

என்ற குமரகுருபரரின் தன்னம்பிக்கை வேண்டுகோள் போன்றும், "பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்"[80]என்று தம் உண்மை ஆர்வத்தைப் பாடிய பாரதி போன்றும் அதற்கு மேலுமாகத் தம் நூல்கள் பற்றிப் பெருமையான எண்ணங்கொண்ட தன்னம்பிக்கையாளராக வாழ்ந்தார்.

"பண்டைக்கால தமிழரும் ஆரியரும்" என்னும் தம் நூலில் ஆங்கில முன்னுரையில் "Even to the historians of the west, it is a new theme"[81] என்று எழுதித் தம் நூல் திறம் பற்றிய படைப்பு நம்பிக்கையைக் காட்டியுள்ளார். தாம் படைத்த நூல்களின் பயன்பாட்டை அவரே மிடுக்குடன்,

> "யான் தமிழில் எழுதும் ஒவ்வொரு சொல்லையும்,
> சொற்றொடரையும் நீங்கள் செம்மையாக உன்னித்து
> வந்தால் தமிழிற் பிழையின்றிப் பேசவும் எழுதவும் ஆற்றல்
> பெறுவீர்கள்"[82]

என்று எழுதியமை நூற்றுக்கு நூறு உண்மையாயிற்று.

மேலே குறித்த அடிகளார் தம் 64 நூல்களையும் நூலுருவாக்க நிலையில் வைத்துப் பார்த்தால்,

1. சொற்பொழிவு நூலுரு
2. கட்டுரை - தொகுப்பு நூலுரு
3. நூலாக்க நூலுரு
4. மொழிபெயர்ப்பு நூலுரு

---

* "I Hope to do it in my separte English work Tamulia India".

என்று நான்காகக் கொள்ளலாம். இவ்வொவ்வொன்றிலும் உள்ள நூல்களைக் கருத்தளவில் இயல்களாக வகைசெய்தால் பின்வரும் 16 இயல்களாகும்:

| | இயல் | | நூல்கள் | | இயல் | | நூல்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கோட்பாட்டியல் | - | 4 | 9. | குமுகாயவியல் | - | 9 |
| 2. | உரையியல் | - | 6 | 10. | புதினவியல் | - | 2 |
| 3. | பாடலியல் | - | 2 | 11. | வாழ்வியல் | - | 2 |
| 4. | அளவையியல் | - | 3 | 12. | மொழியியல் | - | 3 |
| 5. | சமயவியல் | - | 9 | 13. | அரசியல் | - | 2 |
| 6. | ஆய்வியல் | - | 6 | 14. | வரலாற்றியல் | - | 3 |
| 7. | நாடகவியல் | - | 2 | 15. | பொதுவியல் | - | 6 |
| 8. | உளவியல் | - | 4 | 16. | வரைவியல் | - | 2 |
| | | | | | | | 65 |

16 இயல்களையும் வரிசைப்படுத்தியிருப்பதும் ஒரு கருத்தைக் கொண்டது. அடிகளாரின் நூல்கள் பதிப்பான ஆண்டுவாரியில் இவ்வியல்களின் நூல்கள் உருவானமையைக் காட்டவே பதிப்புக் காலவரிசையில் இவ்வியல்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

இதுகொண்டு அடிகளார் எவ்வெக்காலத்து நூலாக்கத்தில் எவ்வெவ்வகை உணர்வில் இருந்தார் என்பதை உணரலாம். இஃது ஓராசிரியரின் உணர்வோட்டத்தின் அறிவோட்டத்தின் அறிகுறிமட்டுமன்று; வாழ்வோட்டத்தின் வெளிப்பாடும் ஆகும்.

இவர்தம் நூல்களில் ஒவ்வொன்றும் தனித்தனிச் சிறப்புள்ளது. ஒவ்வொன்றும் எழுத்துருவாக்கம் அன்று; கருத்துருவாக்கம். எந்த நூலிலும் எந்த ஒரு வரியையும் விட்டுப்படிக்கவோ, பக்கத்தைப் புரட்டிச்சொல்லவோ இயலாது; கருத்து விடுபட்டுப் போகும். இவ்வகையில் அடிகளார் தம் ஒவ்வொரு நூலும் தனித்தனியே நோட்டமிட்டுக் கருத்து நோட்டம் பேசப்பட வேண்டியது; எழுதப்பட வேண்டியது.

இவ்வறக்கட்டளையில் இப்பொழிவு, முதற் சொற்பொழிவு, மறைமலையடிகளார் பற்றியதாக அமைந்துள்ளது. தொடர்ந்து அடிகளார் பற்றிய பொழிவுகள் நிகழும். அவற்றிற்கெல்லாம் இது முன்னோட்டமாகவும் ஒரு தொகுப்பான பதிகமாகவும் அமைய வேண்டும் என்று கருதினேன்.

எனவே, ஒவ்வொரு நூலாக எடுத்துக் கருத்து நோட்டம் செய்யாமல் மேலே வகுத்துகொண்ட இயல்வகையில் அவ்வவ்வியலில் அடங்கும் நூல்களின் பொதுத் திறனாய்வாகச் செய்வது இப்பொழிவிற்குப் பொருந்தும். இவ்வகையில் 18 இயல் நூல்களின் 16 தனித்தனித் திறனாய்வாக இது அமையும்.

சிவஞான போதத்திற்கு உரைவிளக்கம் எழுதிய சிவப்பிரகாச நூலாசிரியர் கொற்றவன்குடி உமாபதிதேவ நாயனார் என்பார் தம் நூலுக்கு அவையடக்கமாக ஒரு பாடல் எழுதினார். அவர் எழுதியது அவையடக்கத்திற்குத்தான். ஆனால் அப்பாடல் பொதுவாக அனைத்து நூல்களுக்கும் திறனாய்வு இலக்கணம் போல் அமைந்துள்ளது.

'தொன்மை நூல்கள் என்பதால் எல்லாம் நல்ல நூல்கள் ஆகா. புதிய படைப்பு என்பதால் தீயனவாகா' என்னும் முன்னுரையுடன் தொடங்கும் அவர் திறனாய்வோரை மூன்று வகையினராகக் கண்டுள்ளார். ஒருவர் 'துணிந்த தன்மையினார்' அடுத்தவர் 'நடுவாம் தன்மையினார்' மூன்றாமவர் 'தமக்கென ஒன்றிலர்'.

'முதன்மையான துணிந்த தன்மையினார்' நூற்பொருளில் சிறு குறையிருப்பினும் மாணிக்கமணியிலும் களங்கம் இருப்பதை எண்ணிக் குறையைச் சொல்லாது விடுவர். 'நடுவாம் தன்மையினார்' நூற்பொருளில் உள்ள பழமைச் சிறப்புகளை ஆராய்ந்து ஏற்பர்; 'தமக்கென ஒன்றில்லாதவர்' பலர் புகழ்ந்தால் தாமும் புகழ்வர்; அந்நூலை வேண்டாதவர் இகழ்ந்தால் தாமும் இகழ்வர் என்றார். பாடல் இது:

"தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா; இன்று
தோன்றியநூல் எனும்எவையும் தீதாகா; துணிந்த
நன்மையினார் நலங்கொள்மணி பொதியுமதன் களங்கம்
நவையாகா தெனஉண்மை நயந்திடுவர்; நடுவாந்
தன்மையினார் பழமைஅழ காராய்ந்து தரிப்பர்;
தவறுநலம் பொருளின்கண் சார்வாய்ந் தறிதல்
இன்மையினார் பலர்புகழில் ஏத்துவர் ஏதிலவர்
இகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர்; தமக்கெனஒன் றிலரே"[83]

அடிகளார் நூல்களைச் சுருக்கமாகத் திறனாய்வு செய்யப்படும் நான் 'தமக்கென ஒன்றிலர்' இனத்தவனல்லேன். எனக்கென ஒன்று உள்ளவன். அது பகுத்தறிவுப் பார்வை. அதற்கென்று தட்டுக்கோடு பாயும் பகுத்தறிவில்லை. "ஒத்ததறிபவன்", 'நடுவாம் தன்மையினார்' போல "பழமை அழகை மட்டும் ஆராய்ந்து தரிப்பவனும் அல்லன். 'துணிந்த தன்மையினார்' போன்று அடிகளார் இறைக்கொள்கையில் கொண்ட வழிபாட்டுக் கருத்துக்களைச் சாராமல் அடிகளார் தம் எழுத்துத் திறத்தைத் திறனாய்வு செய்யவே புகுகின்றேன்.

**ஈ. திறனாய்வு**

**11. வாழ்வியல் (2 நூல்கள்)**

கோட்பாட்டியல் முதலாக வரைவியல் ஈறாக வரிசைப்படுத்திப் பட்டியலிட்டமை, அடிகளார் காலவளர்ச்சியில் வளர்ந்த நூலாக்கப் படிக்கட்டின்

அடிப்படையில் என்று முன்னர் குறிக்கப்பட்டது. அதன்படி கோட்டிபாட்டியல் நூல்கள் தாம் முதலில் திறனாய்வு செய்யப் பெற வேண்டும். ஆனால், இங்கு முதலில் வாழ்வியல் நூல்களை எடுத்துள்ளேன். பட்டியலில் 11-ஆம் இயலாக உள்ளதை உருவி எடுத்து முதன்மை கொடுத்துள்ளதற்குக் காரணம் அதன் முதன்மை கருதியதேயாகும். அடிகளார் எழுதிய வாழ்வியல் நூல்கள் இரண்டு. ஒன்று 'பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்'. இரண்டு, 'மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை'. இவை இரண்டுமே அடிகளார் படைத்த நூல்களில் முதன்மைத் தகுதி உடையவை. பலவகையில் இவற்றிற்கு முதன்மைத் தகுதி உண்டு. அடிகளார் நூல்கள் அனைத்துமே கருத்துச் செறிவும் பயனும் உள்ளவைதாம். அவற்றுள்ளும் இவையிரண்டும் படிப்போர்க்கு முதன்மையாக வேண்டப்படுபவை. மக்கட்கு வாழ்வைச் சீராக்கிக் கொள்வதுதான் முதன்மை. அதற்கு இவ்விரு நூல்களும் முதன்மைத் துணைகள். அடிகளது மிகு உழைப்பில் 24 ஆண்டுகள் முயன்று 1909 -இல் எழுதத் துவங்கி அவர்தம் இதழான அக்கால ஞானசாகரத்தில் தொடர்ந்தும் அவ்வப்போதும் வெளிவந்து 1933-இல் 'மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை' முழு நூலாகப் பதிப்பாயிற்று. பிற நூல்கள் இத்துணை உழைப்பைக் கொள்ளாத வகையில் இதற்கொரு முதன்மை அமைகின்றது. தமிழில் இத்தகைய வாழ்வியல் நூல் முதலாவது; முதன்மை கொண்டது. தமிழ் நூல்களின் ஆழமான வாழ்வியல் கருத்துக்களுடன் மேலைநாட்டு ஆய்வாளர் பலரது முடிவுகளை அதிகம் மேற்கோளாகக் கொண்ட வகையிலும் முதன்மை கொள்வது. எனவே வாழ்வியலை முதலில் எடுத்தது பொருத்தமாகின்றது.

இரண்டு நூல்களும் தனித்தனியே பதிப்பாகியிருப்பினும் ஒன்றிலொன்று இணைந்தவை.

'பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்' வெளிவந்த 13 ஆண்டுகளுக்குப் பின்னரே 'மக்கள் நூறாண்டு உயிர்வாழ்க்கை' நூல்வடிவில் பதிப்பாகியிருப்பினும் ஞானசாகரத்தில் முதன்முதலில் பின்னதன் கட்டுரைகளே முதலில் வெளிவந்தவை. நூலின் கருத்தமைப்பை நோக்கினாலும் பின்னதற்குப் பின்னரே முதன்மை வைத்து நோக்கத்தக்கது.

'நீண்ட நாள் உயிர் வாழ்க்கை' என்றொரு ஆங்கில நூல் உள்ளது. அதுதான் அடிகளார் 'மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை' நூலை எழுத உந்தியுள்ளது. அதனை எழுதிய காப்டன் காடர்ட்டைமண்ட் ஒன்றேகால் நூற்றாண்டு (122 ஆண்டுகள்) வாழ்ந்தவர். இதனை எழுதிய அடிகளார் முக்கால் நூற்றாண்டை அணுகித்தான் வாழ்ந்தார். இது குறையாகாது, அடிகளார்க்கு அமைந்த பணிகள், பயணங்கள், சூழல்கள், குடும்ப இடையூறுகள், இயற்கை நிகழ்வுகள் அவர் கருதி எழுதியுள்ளபடி வாழ்வைக் கொண்டு செலுத்த இயலாமல் போயிருக்கலாம். இது நூலின் நிறைவை எவ்வகையிலும் தீண்டாது.

இந்நூலில் அதிக அளவில் மேலை அறிஞர்களின் ஆய்வுக் கருத்துக்களை எடுத்துக் காட்டியுள்ளார். தமிழ் வடமொழிக் கருத்துக்கள் செறிந்துள்ளன. மேலையறிஞர்களின் உடலியல், மருந்தியல், உயிரியல், பாலியல் கருத்துக்கள் மிகப் பொருத்தமானவை. ஏற்கக்கூடியவை. இந்நூலில் உரிய இடத்தில் இடம் பெற்றுள்ளன. இவ்வடைப்பையெல்லாம் வைத்து நோக்கும்போது அடிகளார் ஒரு நூலை ஆக்கத் தொடங்குமுன் கருத்துக்களைக் குறிப்பெடுத்து வரிசைப்படுத்திக் கொண்டு எழுதியுள்ளார் என்று உணர முடிகிறது. சில வரிகளை எழுதப் பல நூல்களைப் பார்த்துள்ளார் என்று கொள்ளுமாறு பல வரிகள் பேசுகின்றன.

### நிலமிசை நீடுவாழ்வார்

மிக மிக இயல்பாகவும், ஆற்றொழுக்கான கருத்தோட்டத்துடனும், கடைப்பிடிப்போரின் நிலையுணர்ந்தும், நூற்கருத்து நடைமுறைப்பட்டுப் பயன்விளக்க வேண்டும் என்னும் ஆழ்ந்த நோக்குடனும் இந்நூல் செல்கின்றது.

இயற்கை அமைப்பில் தொடங்கி இயற்கையின் மூலமான ஞாயிற்றை விளக்கி அது பயன்தருவதையும், மக்கள் அதனை எவ்வாறு பயன் கொள்ள வேண்டும் என்பதையும் தெளிவுபட விளக்கும் தொடக்கமே நூலின் பயனைக் காட்டுகிறது. ஞாயிற்றின் ஒளியை எடுத்துக் கூறத் தொடங்கி ஒளியின் தன்மை, பயன், பயன்படுத்தும் முறை இவற்றை விரிப்பவர், அதன் ஒளி ஏழு நிறங்கொண்டதென்று காட்டி அவ்வேழு நிறமும் சிவப்பு நீலம் என்னும் இரண்டுள் அடக்கம் என்று காட்டி அதனைத் தம் சைவ சமய நோக்கிற்குப் பயன்படுத்தியிருப்பது அவர்தம் தனி ஆர்வத்தையும் காட்டுகிறது. சிவப்பு நிறந்தான் சிவனின் வெளிப்பாட்டு நிறம் என்றும், நீலந்தான் உமையம்மையின் வெளிப்பாட்டு நிறம் என்றும் காட்டி, எனவே, ஞாயிறு அம்மையப்பரின் வெளிப்பாடு என்று காட்டியது மிகு திறன் மட்டுமன்று இவர்தம் சைவப்படிவின் வெளிப்பாடுமாகும்.

தொடர்ந்து நீர், நிலம், உழவு, உணவு, உறக்கம், பொருந்தும் உணவு என முறையாக விளக்கி முதல் பகுதியை நிறைவேற்றுகிறார். உழைத்து, உண்டு, உறங்க வழிகாட்டியவர், ஆண்பெண் கூட்டுறவு வாழ்க்கைக்கு வெளிச்ச மூட்டுகிறார். ஆண் பெண் சேர்க்கையில் புகுத்தி, இன்பமும் கருவும் சொல்லி மக்கட்பேற்றைக் காணச் செய்து தாய் சேய் நிலைகூறி, குழந்தை வளர்ப்பைச் சொல்லி, கருவிலக்கிற்கு இயற்கை நெறி சொல்லி நோய் இல்லா நீண்ட வாழ்வாக நிறைவேற்றியுள்ளார்.

இவ்விளக்கங்களில் பாலியல் கருத்துக்களை அறிவியல் பாங்குடன் பிட்டும் காட்டுகிறார். ஆண்பெண் உறுப்புகளின் அமைப்பு, இயல்பு, உணர்வேற்றம், எல்லாம் ஆழ்ந்து பார்க்குமாறு காட்டி, ஆங்கில அறிவியல்

பாங்குடன் தமிழ்ப் பாடல் நுணுக்கங்களையும் சான்றாக்கியுள்ளார். இருட்டறைச் சேர்க்கையை ஏற்காது வெளிச்சம் கூறுவதுடன் பஞ்சுநூல்கூட இடையில் தடையாக நிற்கக்கூடாத பாங்கையும் சிறப்பித்துள்ளார். ஆனால், தேரையல் என்னும் மருத்துவ வாழ்வியல் கோட்பாட்டு வித்தகர் "நமனார்க்கிங்கேது கவை நாமிருக்கும் இடத்தே" என்று முடிவுகட்டும் பாடலில், வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகள் பலவற்றைக் காட்டியுள்ளார். அவற்றுள் ஒன்று "பகல் புணரோம்" என்பது. இதில் அடிகளார் மாறுபடுகிறார். புணர்ச்சி இன்பத்தின்-புதுமைத் துடிப்பின் வடிப்பு போலும் இது.

ஆனால், வாழ்வியலுக்கு ஊட்டமாகும் இந்நூற்போக்கில் குமுகாயச் சீர்திருத்தத்திற்கும் இருக்குமறை, உபநிடதங்கள், பிரமாணங்கள் முதலியவற்றிலிருந்து சான்றுகள் காட்டிச் சிறார் திருமணங்களுக்குச் சிறை வைக்கிறார்; மறுமணத்திற்கு மடை திறக்கிறார்; கைம்பெண் மணத்திற்குப் பைம்பொன் தாலி தருகிறார்.

பலபட நிறைவாகும் இந்நூலில் அவர் தம் கடைப்பிடி பல காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று நாள்தோறும் மலம் கழிப்பது. மலங்கழிவது இயல்பு; மலங்கழிப்பது ஒரு முயற்சி. இயல்புதான் உடலின் உள்ளியக்கத்திற்கு முறை. அடிகளார் இயல்பானதைத் தம் நாட்பழக்கத்தில் அடையாமல், குதவாய் நீரேற்ற (எனிமா) வைக் கொண்டார். இதனை அனைவரும் கைக்கொள்ள அறிவுறுத்துவது ஏற்கவேண்டாத ஒன்று.

நிறைவாகச் சொன்னால் இந்நூல் நிறைவான நூலாகிறது. இந்நூற் கருத்துக்கள் மிகமிகப் பெரும்பாலானவை கடைப்பிடிக்க வேண்டியவை; கடைப்பிடிக்க கூடியவை; கடைப்பிடிக்க எளிமையானவை, கவனந்தான் வேண்டும். இன்னும்,இன்றும் கொள்ளலாம்; என்றும் எவரும் கடைபிடிக்கலாம். எவரும் நூறாண்டும் வாழலாம்.

தமிழைப் பொறுத்த அளவில் இந்நூல் முதல் நூல்; முதன்மையான நூலுமாகும். தமிழுலகமும் பிற குமுகாயங்களும் நன்றி படைக்கத் தகுதியுள்ளவை அடிகளார் தம் வாழ்வியல் நூல்கள்.

**1. கோட்பாட்டியல் (4 நூல்கள்)**

நூற்கருத்திற்கும் சொல்லிற்கும் கொள்ளப்படும் கருத்து இருவகை எனலாம். ஒன்று அறிவுசார்ந்த உள்ளுணர்வு; மற்றொன்று உண்மைச்சார்ந்த-மெய் சார்ந்த உள்ளுணர்வு. இரண்டாவதை 'மெய்யுணர்வு' என்பர். இது உள் கருத்தின் உண்மையைக் கொள்ளும் முறை. கொள்ளும் முறையாகையால் 'மெய்க்கோட்பாடு' என்று இதனைக் குறிக்கலாம். சற்றுச் சுருக்கமாக இதனைக் 'கோட்பா்டு' என்கிறோம். ஆங்கிலத்தில் 'ஃபிலாசபி' எனப்படுகின்றது. வடசொல்லாக்கத் 'தத்துவம்' என்று உள்ளது. இவ்வகைபான கோட்பாட்டு

நூல்கள் மறைமலையடிகளாரால் எழுதப்பெற்றன. எழுத்துத் துறையில் முதல்முதலாக அவர் படைத்தது இக்கோட்பாட்டுக் கருத்துக்கள்தாம்.

வாழ்வியல் நூலாகிய "மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை" என்பது படைத்தலைவர் காடர்ட்டைமண்ட் எழுதிய'நீண்ட நாள் உயிர் வாழ்க்கை' என்னும் நூலைப் படித்த உந்துதலால் எழுதப்பெற்றது என்று கண்டோம். இது போன்றே அடிகளார் நூல் ஒவ்வொன்றும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியையோ, நூலையோ, உணர்வுத் தூண்டுதலையோ உந்துதலாகக் கொண்டே எழுந்தது. முதன்முதலில் எழுதும் உணர்வை எழுப்பியது நாகைக்கு வந்த சொற்பொழிவாளர் பேச்சும், பிறர் வெளியிட்ட சிறு வெளியீடுகளுமேயாகும். இவ்வுந்துல்களால் எழுத்துருவம் பெற்ற நூல்கள் மூன்று, "முனிமொழிப் பிரகாசிகை", "வேத சிவாகமப் பிரமாண்யம்", "வேதாந்த மத விசாரம்" என்னும் இவை. இவை முறையே 1898, 1899, 1900 ஆண்டுகளில் தனித்தனி வெளியீடுகளாக வந்து பின்னர் மூன்றும் ஒரு தொகுப்புநூலாக "சித்தாந்த ஞானபோதம்" என்னும் தலைப்பில் வந்தன. 'முனிமொழி பிரகாசிகை' என்பது 12 பக்கங்களே கொண்ட சிறு வெளியீடு. தமிழறிஞர் சபாபதி நாவலர் என்பார்,

> "தேவர் குறளுந் திருநான் மறைமொழியும்
> மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
> திருவா சகமும் திருமூலர் சொல்லும்
> ஒருவா சகமென் றுணர்"[84]

என்னும் அவ்வையார் பாடலுக்கு உரைவிளக்கம் எழுதினார். அதில் 'முனி மொழி' என்றதற்கு 'வியாச சூத்திரம்' என்று காட்டினார். இதனை மறுத்து அடிகளார் எழுதியதே 'முனிமொழிப் பிரகாசிகை'. 'முனிமொழி என்ற அவ்வை தொடருக்குப் பொருளை விளக்கமாக்குவது (பிரகாசிக்க வைப்பது) என்னும் பொருள்பட இத்தலைப்பு அமைந்தது. அடிகளார் 'முனிமொழி' என்றதற்கு முனிவர் மாணிக்க வாசகரின் திருவாசகமும் திருக்கோவையாரும் என்று பொருள் எழுதினார். 'வியாச சூத்திரம்' மாயாவாதம் கூறுவது. மாயாவாதியான சங்கரரால் பேருரை எழுதப்பெற்றது. சைவ சித்தாந்த நூல்களையே பட்டியலிட்டுப் பாடியுள்ள அவ்வையார் மாயாவாதக் கருத்துள்ள வியாச சூத்திரத்தைக் குறிப்பிடமாட்டார் என்று விளக்கியுள்ளார். இதற்குப் பல கோட்பாட்டுக் கருத்துக்களைத் தந்துள்ளார். மேற்பாட்டில் குறளும், மறைமொழியும், தமிழும் முனிமொழியும், திருவாசகமும், சொல்லும் என்பனவற்றில் ஈற்றில் உள்ளவற்றை எண்ணும்மைகளாகக் கொண்ட சபாபதி நாவலரவர்கள் ஆறும் ஒன்றுமாக ஏழு நூல்களாகக் கொண்டு உரை எழுதினார்.

அடிகளார் அவ்வாறு கொள்ளாமல், உம்மை அமைந்த முன்சொற்களைச் செய்யும் வாய்பாட்டுப் பெயரெச்சமாகக் கொண்டு, தேவர் (மொழியும்) குறளும்,

திருநான்மறை மொழியும் மூவர் தமிழும், முனி (மாணிக்கவாசகர்) மொழியும் திருவாசகமும், திருமூலர் சொல்லும் (திருமந்திரமும்) என்று பொருள் கண்டார். இதற்குப் பல சான்றுகள் காட்டிக் கோட்பாட்டு முறையில் நிறுவியுள்ளார்.

வேதசிவாகமப் பிரமாண்யம், வேதாந்த மத விசாரம் என்னும் கோட்பாட்டு நூல்களிலும் சைவக் கோட்பாட்டை விளக்குகின்றார்.

"வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்" என்றும் சிறி சகலாகமப் பண்டித அடிகளார் காட்டின அடித்தளத்தை ஏற்று இரண்டிலும் சைவநூல்தான் முதன்மையானது, சிறந்தது என்று பல்வகைச் சான்றுகளுடன் முறையே 150 பக்கங்களிலும், 14 பக்கங்களிலும் இரண்டு வெளியீடுகளைத் தந்தார்.

**சைவமே சித்தாந்தம்**

சைவ சமயம் ஒன்றே சித்தாந்தம்; வேறு சிவாகமங்கள் அதனைத் தொகுத்தும் விரித்தும் கூறுவனவே" என்று விளக்கம் தருகின்றார். 'சித்தாந்தம் என்றால் 'உண்மை ஞானம்' என்று பொருள்காட்டி அதன் கோட்பாடே மூலமானது என்று நிறுவுவதே அடிகளாரின் கோட்பாடு. அடிகளார் நாகை வாழ்வில் தமிழ், ஆங்கிலம், வடமொழி மூன்றிலும் புலமை பெற்றார். வேதத்தில் வடமொழி மறைகளில் இருக்கும் மறையின்பால் ஈடுபாடு கொண்டார். ஆயினும் சைவ சமயத்திற்கு அடுத்த நிலையிலேயே வடமறையை வைத்தார். அவர் விளக்கப்படி,

*சிவபெருமான் தந்தை; இத்தந்தையின்*
*மூத்த மனைவி சிவாகமம்*
*இளைய மனைவி வேதம்*
*மூத்த மனைவியின் மக்கள் சைவர்;*
*இளைய மனைவிக்கும் சைவரே மக்கள்*

இவ்வாறு தம் கோட்பாட்டைச் சைவக் கோட்பாட்டை முதன்மைப் படுத்தியே ஆய்ந்தார். வடமறையில் ஈடுபாடு கொண்டிருப்பினும் "வேதமே உயர்ந்தது" என்று கூறிச் தமிழ்ச் சைவத்தைக் குறைவாகப் பேசுவோர் முன்னே வடமறையிலுள்ள குறைகளை எடுத்து வைப்பதில் முனைப்பாகவே அடிகளார் செயல்பட்டார். இருப்பினும் உள்ளுணர்வில் வடமறையைப் போற்றினார். இக்கருத்தை அவர் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்;

> *"வேதத்தை யாம் வேண்டாமென்று பிரஸ்தாபிப்பதும், சிவாகம தூஷணஞ்செய்து வேதத்தைப் பூசிக்கு மெதிரிகளை மனநோகச் செய்யவேயன்றி வேதத்தில் வைத்த தூஷணமன்றாகையாலும், எமக்கு வேறபாக்கியத்தன்மை உண்டாகாதென்க"*[85]

இதனால் அவர் கொண்ட வடமறை ஈடுபாட்டை "வேதபாக்கியத் தன்மை உண்டாகாது" என்று குறித்ததால் உணரலாம். ஆனால், காலப்போக்கில் இக்கருத்தில் மாற்றங் கொண்டார். முடிவாக அவர் "வேதம் சாமானிய நூல்; சிவாகமம் விசேட நூல்" என்று குறித்தார்.

இவ்வாறு சைவ சித்தாந்தமே யாவற்றிற்கும் சிறந்த கோட்பாட்டுச் சமயம் என்று அவரின் கோட்பாட்டு நூல்களால் நிறுவியுள்ளார்.

'ஞானசேகர வெண்பா' என்றொரு நூலை அடிகளார் வெளியிட்டுள்ளார். 1898-இல் வெளிவந்த 14பக்க நூல் இது. இதுபற்றிய விவரம் தெரியவில்லை. இஃதும் கோட்பாடு கொண்டதே.

அடுத்து அவரின் எழுத்தோட்டம் செய்யுள்களுக்கு உரையெழுதுவதிலேயே தொடர்ந்தது. இவ்வாறு தொடர்ந்து வெவ்வேறு கருத்தோட்டத்தில் வளர்ந்ததைக் குறிக்கும் போதே ஒன்றை எழுதத் தொடங்கி முன் கொண்டதை விடுத்தார் என்று கொள்ளக் கூடாது. இடையிடையே முன்தொடங்கிய கருத்துக்களையும் எழுதினார். எனவே அவரின் 18 இயல் கருத்து எழுத்துக்களும் விரவி வந்தன.

2. **உரையியல் (6 நூல்கள்)**

செய்யுள் நூல்களைப் பயிலும்போதே அவர்க்குரிய ஐயங்களை நாகை இயற்றமிழாசிரியர் வே. நாராயணசாமி பிள்ளையவர்கள் போக்கினார்கள். அத்துடன் தமக்குத் தோன்றிய உரைகளைக் குறித்துக் கொண்டார். இக்குறிப்பு கொள்ளும் முறையால் 'சதமணிக்கோவை' என்னும் நூலுக்குக் குறிப்புரை எழுதி வெளியிடவேண்டும் என்னும் ஆர்வத்தால் முதன்முதலில் அந்நூலுக்குக் குறிப்புரை எழுதி வெளியிட்டார். இதுதான் அடிகளாரது முதல் உரைநூல். குறிப்புரை என்னும் உரை தந்த பாங்கு புதுமையானது. அதற்கும் மேற்கோள்கள், சான்றுகள் ஆங்காங்கு காட்டப்பெற்றமை சிறப்பு. ஆசிரியர் சோமசுந்தர நாயகர், அடிகளாரது புலமைத் திறமறிந்து சீர்காழிச் சிற்றம்பல நாடிகள் எழுதிய 'துகளறு போதம்' என்னும் அரிய சைவ சித்தாந்த நூலுக்கு உரை எழுதுமாறு பணித்தார். முறையான உரையாக அவ்வுரை அமைந்தது. உரை என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டான உரை எனலாம். "இது சிவஞான முனிவர் உரையோடு ஒப்பது" என்று ஆசிரியர் நாயகரவர்களே பாராட்டினார்கள். தொடர்ந்து 'பஞ்சாக்கர மாலை'க்கு எழுதினார்.

உரைகளில் புதுமையாக ஆராய்ச்சி உரை என்று பத்துப்பாட்டில் 'முல்லைப் பாட்டு, பட்டினப்பாலை, இரண்டிற்கும் எழுதியமை சிறப்பாகக் குறிக்கத்தக்கது. இளமைப் பருவமாகிய அகவை 22-இல் சென்னைக் கிறித்துவக் கல்லூரிப் பேராசிரியரானமை அடிகளார் வாழ்வில் ஒரு சிறப்பு.

அங்கு 'முல்லைப் பாட்டு' பாடமாக இருந்தது. அதை நடத்தும் போது நச்சினார்க்கினியர் உரையால் நேர்ந்த மயக்கங்கள் தாம் புத்துரை ஆராய்ச்சிப் பாங்கில் எழுதவேண்டும் என்னும் உந்துதலை ஏற்படுத்தியது. அவ்வாறே இதற்கும் அடுத்துப் 'பட்டினப்பாலை'க்கும் ஆராய்ச்சியுடன் கூடிய உரை வகுத்தார். பயின்ற கல்லூரி மாணவர்களே பொருள் திரட்டி இவற்றை வெளியிட வழங்கியமை ஒரு புதுமை.

இவ்வுரைப்பாங்கு குறிக்கத்தக்கது. பாட்டைக் கொடுத்துப் பொருள் தருவது என்னும் போக்கிலிருந்து மாறி முதலில் பாட்டின் இயல்பைக் கூறி நூலை அறிமுகப்படுத்திப் பின்னர் பாட்டைக் காட்டி, அடுத்துப் பாட்டில் அமைந்த பொருளை வகை வகையாகப் பாகுபடுத்திப் பொருட்பாகுபாடு என்று தலைப்பிட்டு விளக்கி, அதிலும் கருத்தடுக்குகளுக்கேற்ப வகைப்பாகுபாடு செய்து விளக்கந்தரப்பெற்றது. தொடர்ந்து, திணை விளக்கம், பாட்டின் வரலாறு, ஆக்கியோன் வரலாறு, பாட்டுடைத் தலைவன், பாட்டின் நலம் வியத்தல், பழைய வழக்க ஒழுக்க வரலாறு கூறல், பாவும் பாட்டின் நடையும் இவற்றிற்குப் பின், விளக்க உரைக் குறிப்புக்கள், இறுதியாக அருஞ்சொற் பொருள் அகரவரிசை என்று இவ்வாராய்ச்சியுரை நிறைவேறுகிறது.

நச்சினார்க்கினியர் சிறந்த உரையறிஞர் எனினும் நீண்ட செய்யுள்களுக்கு உரை எழுதும்போது ஆற்றொழுக்காக உரை தராமல் நூறாம்அடியிலிருந்து ஒன்பதாம் அடியில் உள்ள தொடருக்குச் சொல்லைக் கொணர்ந்து மாட்டி ஏற்றிப் பொருள் எழுதுவார். இது எங்கோ உள்ள சொல்லை எட்டிப்பிடித்து மாட்டி ஏற்றுவதால் 'மாட்டேறு' எனப் பெற்றது. இந்த வலிந்த முறையால் மாணவர்கட்கு மயக்கம் நேரலையும் நூலாசிரியரின் திறத்தில் குறை ஏற்படுவதையும் கண்ட அடிகளார் இம்முறையை விடுத்து எழுதினார்.

பாடலை அதனை எழுதிய ஆசிரியனது வாழ்வுடன் இணைத்துப் பொருள்காணும் முறை ஒன்றையும் கையாண்டார். பட்டினப்பாலையை அகப்பொருளும் புறப்பொருளும் இணைந்த இலக்கியமாகக் காட்டினார். பாலை அகம் என்றார்; பட்டினம் புறம் என்றார். பாலை என்னும் அகத்தில் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்கிறான். செல்பவன் பாலை நிலத்தின் வெம்மையைப் பேசுவது அகப்பொருள் துறை. அதற்கு உவமையாக,

> "திருமாவளவன் தெவ்வர்க்கோச்சிய
> வேலினும் வெய்ய கானம்"[86]

என்று கரிகாலன் போர்வேலைக் கூறியது புறம்பொருள் துறை. இதுபோன்றே, தம் காதலியின் தோள் இனிமையாம் அகப்பொருளை,

> "அவன் கோலினும் இனிய தடமென் தோளே"[87]

என்று கரிகாலன் செங்கோல் நலத்தைக் கூறியது புறப்பொருள். இவ்வாறெல்லாம் எடுத்துக்காட்டுபவர் மற்றொரு புதுமையும் படைத்துள்ளார். புறப்பொருளில் தலைவன் பெயர் குறிப்பிடப்பெறும். அகப்பொருளில் தலைவன் தலைவி பெயர்கள் கூறப்பெறுவதில்லை. அடிகளார் உருத்திரங்கண்ணனாரது பட்டினப்பாலையில் கலையூற்றாய் ஊறும் உணர்வுகளைக் காண்கிறார். அவற்றை வெளிப்படுத்தும் உருத்திரங்கண்ணனார் ஈடுபாட்டை உணர்கிறார். இரண்டையும் இழையோடச் செய்து உருத்திரங்கண்ணனாரே அகப்பொருள் தலைவனாக அமைந்து தம் காதல் உணர்வை வெளிப்படுத்துவது போன்று பட்டினப்பாலையில் பேசும் அகப்பொருள் தலைவன் உருத்திரங்கண்ணனாரென்று' படைத்து மொழிந்து காட்டியுள்ள திறம் நுயக்கத்தக்கது. அகப்பொருள் புதுமை ஒன்றைப் படைத்து மொழிந்து காட்டியுள்ள திறம், நயக்கத்தக்கது. அகப்பொருள் புதுமை ஒன்றைப் படைத்தது வியக்கத்தக்கது.

உரைவளத்தைக் காண ஓர் எடுத்துக்காட்டு கூறல் சாலும். வானத்தில் பாடிப் பறக்கும் ஒன்று வானம்பாடி எனப்படும். அது பாடி மழை நீர்த்துளியைப் பருகும் என்பர். இதனை உருத்திரங்கண்ணனார். "தற்பாடிய தளியுணவின்புள்"[88] என்கிறார். பறவை வானத்தில் பாடிப் பறப்பதால் வானம்பாடி அன்று. வானத்தைப் பாடிப் பறக்குமாம். பாடிய புலவன் பரிசில் பெறுவது போன்று வானம் நீர்த்துளியை வழங்குமாம். சிலநேரம் பாட்டைக் கேட்டுப் பரிசில் வழங்காத மன்னரும் தென்படுவர். அதுபோன்றே தன்னைப்பாடிய வானம்பாடிக்கு வானம் அதன் உணவாகிய நீர்த்துளியைத் தராத அளவிற்கு அதாவது ஒரு துளிநீரையும் பெய்யாது வானம் வறண்டு போனாலும் காவிரி வளம் சுரக்கும் என்று பாடியுள்ளார். இதனைச் சொற்பொருளில் விளக்கிய நச்சினார்க்கினியர் தளி உணவு என்பதற்குத் துளி உணவு என்றே எழுதினார். ஆனால் 'தளி' என்பதற்குத் 'துளி' என்னும் பொருள் எவ்வாறு வந்தது என்று காட்டவில்லை. அடிகளார், இத்தளி என்பது கருங்கார் முதலில் தள்ளும் முதல் நீர்க்குப்பெயர் என்பதை, "தளி, தலைப்பெய் மழைத்துளி என்பர் பிங்கலந்தையார்"[89] என்று காட்டி முதல் மழைத்துளியும் கிடைக்காத காலம் என்பதைக் குறிப்பாகக் காட்டினார். முதலில் கருங்காரால் தள்ளப்பட்டு வெளிவருவது 'தளி'. அடுத்துத் துள்ளிவருவது 'துளி' என்னும் குறிப்புப் பொருள் போலும்.

அடிகளார் தம் உரைப்படைப்பு வரலாற்றில் பல்லாண்டு இடைவெளிக்குப் பின்னர் 'திருவாசக விரிவுரை' தொடங்கியது. அவர்தம் மருகராகவிருந்த திருவரங்கனார் சென்னையில் 'செந்தமிழ்க் களஞ்சியம்' என்னும் திங்களிதழை நடத்தினார். அவர் வேண்டுகோளின் உந்துலால் தாம் வழிபடுகடவுள்போல் போற்றிவந்த மாணிக்கவாசகரின் திருவாசகத்திற்கு உரை

எழுதப் புகுந்தார், 1920-இல் தொடங்கி ஓராண்டு உரை இதழில் வெளிவந்தது. பின்னர் நேர்ந்த பிணக்கால் உரை நின்றது. திருவாசகத்தில் முதல் நான்கு பகுதிகளாகிய, சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப் பகுதி, போற்றித் திருவகவல் என்னும் நெடிய அகவல்களுக்கும் உரை வகுத்தார். நெறி வழங்கும் இவ்வுரை பற்றி ஒன்றை எழுதுவதே அதன் நிறை பெருமையைக் காட்டுவதாகும்.

திருவாகத்திற்குப் பண்டிதமணி கதிரேசனார் உரை எழுதியுள்ளார்கள். அவர்கள் திருச்சதகம் முதலே உரை வகுத்துள்ளார்கள். அதற்கு அவர்கள் கூறிய காரணம்:

> "நான் திருவாசகத்தில் முதல் நான்கு அகவல்களுக்கு உரை எழுதவில்லை; திருச்சதகத்திற்கே எழுதினேன். காரணம் மறைமலையடிகளார் அந்நான்கிற்கும் உரை எழுதிய பின்னர் அதற்கீடான உரை வருதல் அரிது என்பதை உணர்ந்தேன். அடிகளைப் போல் அரிய உரை யாராலும் எழுத முடியாது"[90]

இத்துணைச் சிறப்புடைய உரை நூல் வடிவாக 1948-இல் வெளிவந்தது. உரைக்கு மறுப்பும் எழுந்தது. அஃதும் மறுக்கப் பெற்றது.

அடிகளார் சென்னையில் நிலைத்த வாழ்க்கையைத் துவங்குதற்கு முன்னர் திரு. நல்லுசாமி பிள்ளை அவர்கள் விருப்பின் பேரில் அவர்தம் சிற்றூரில் தங்கினார். பிள்ளையவர்கள் நடத்திய இதழாகிய 'சித்தாந்த தீபிகை'க்கு முதலில் ஆசிரியராயிருந்த போது அதில் திருமந்திரத்தில் மூன்று இயல்கள், சிவஞான சித்தியாரில் 14 செய்யுட்கள், தாயுமானவரின் பரிபூரணாநந்த போதம், பொருள் விளக்கம் முதலியவற்றிற்கும் விளக்க உரை எழுதினார். இவை நூல்களாகாமல் போயின.

உரையுலகில் அடிகளார் பத்துப்பாட்டு தொடங்கித் தாயுமானவர் வரை பல்வகை நூல்களுக்கும் சைவசித்தாந்தக் கோட்பாட்டில் நீங்காமல் நின்று உரைகளில் கலங்கரை விளக்கங்களைத் தந்துள்ளார்.

உரைகாணும் நோக்கில் செய்யுள்களில் தோய்ந்த அடிகளார் செய்யுளைத் தாமே படைக்கும் உந்துதலையும் பெற்றார்.

### 3. பாடலியல் (20 நூல்கள்)

பாட்டு என்றால் எத்தகையது ? எவ்வாறு அமைய வேண்டும் ? என்னென்ன நிறைந்திருக்க வேண்டும் ? அடிகளாரே இவற்றிற்கெல்லாம் விளக்கந் தந்துள்ளார்:

"வாட்டம் இல் சிறப்பில் பாட்டெனப் படுவது" என்று தொடங்கி அவர் காட்டியுள்ள பாட்டின் எழிற்கோலம் இவை:

*கரும்பின் கணுவை உடைத்தெழுந்த சாறு வேண்டும்;*
*அதைப்பாகு ஆக்கிக்கட்டியாக்க வேண்டும்;*
*அக்கட்டியின் உருவாக்கம் ஒரு பசும்பொன் கிண்ணத்தில் நிகழ்த்தப்பட வேண்டும்;*
*அக்கிண்ணத்தின் விளிம்புவரை நிறையுமாறு நிகழ வேண்டும்;*
*நெருப்புப் பிழம்பு போன்று ஒளிதகதகக்கும் பொன்னால் அக்கிண்ணம் செய்யப்பட்டிருக்க வேண்டுமாம்;*
*இதுபோன்ற பாட்டில்*
*நயமான சொற்கள் சுருக்கமாகச் சுவைக்க வேண்டும்;*
*நினைத்தாலே கருத்தை நெஞ்சில் வைரமாகப் பதிக்க வேண்டும்;*
*இயற்கை கொஞ்ச வேண்டும்;*
*அறிவு கூத்திட வேண்டும்;*
*முழுமுதற் கருத்துக்கள் பேச வேண்டும்.*

இவற்றை,

*"வாட்டமில் சிறப்பில் பாட்டெனப் படுவது*
*கரும்புகண் ணுடைத்த விரும்புபிழி இறுக*
*மூழையில் துழைஇத் தாழா தட்டோன்*
*எரியகைந் தன்ன எழிற்பொற் பாண்டில்*
*விளிம்புற நிறைத்தாங்கு முதுவாய்ப் புலவோன்*
*பாவிடைச் சுருங்கிய பயங்கெழு சொல்லில்*
*கருதுதொறும் ஆழ்ந்த காழ்ந்த பொருள் பொதிப்ப*
*என்புநெக் குருகும் இசையுடன் தழீஇ*
*இயற்கையின் வழாமல் அறிவொருங் குறுத்தி*
*இன்புணர் வெடுப்பின் அன்னே உருவாம்*
*முழுமுதற் பொருளொடு கெழுவிடப் பயக்கும்*
*ஆனாத் தலைமைப் பான்மைய துடைத்தே"*[91]

இவ்வாறு படித்துள்ளார். இப்பாட்டின் நடை, அக்காலப் புலமை நடை; சங்க இலக்கியம் போன்றது. இதற்குத்தான் 'மறைமலையடிகள் பாட்டுநடை' என்று பெயர். இக்காலத்திற்குக் கடுமைதான். ஆனால், பாட்டை, அதன் அழகை வடிவாக்கியுள்ளமை சுவையானது.

ஏறத்தாழ இப்போக்கிலேயே அடிகளார் பாடல்கள் அமைந்த, காலப்போக்கில் சற்று எளிமை கொண்டன.

அவருக்கு நான்மறை, பாவேந்தர் குறிப்பிட்ட "மறைநூல் என்பது தமிழ் நான்மறை நூல்"தான். அவரின் செய்யுள் படிப்பு திருவாசகத்திலும்

தேவாரத்திலும் தொடங்கியது. அவை போன்றே அவர் முதலில் வடித்த பாடல்களும் அமைந்தன.

இலங்கை மன்னாரில் உள்ள சித்திவிநாயகர் மீது ஒரு பதிகம் பாடினார். அது ஞானசம்பந்தர் பாடல் போன்றமைந்தது. ஞானசம்பந்தர் தம் பதிகங்களில் பதினோராவது கடை காப்புப் பாடலில் தம் பெயரை அமைத்து,

> *"காழியுள் ஞான சம்பந்தன் அளிதருபாடல் பத்தும் வல்லார்கள்*
> *அமரலோகத் திருப்பாரே"* [92]

என்று பாடுவது போன்று அடிகளாரும்,

> *"தமிழார் ஊரிற் சான்றவன் வேதா சலன்சொன்ன*
> *அமிழ்தார் பத்தும் கற்பவர் நற்பால் அடைவாரே"*[93]

என்று பாடினார். அப்பர் பாடல் போன்று திருத்தாண்டகம், திருக்குறுந்தொகை, மணிவாசகரின் திருச்சதகவிருத்தங்களின் நிழல்கள் அடிகளார் பாடல்களில் நிழலிடுகின்றன. அனைத்து வகை யாப்பிலும் பாடல்கள் வடித்துள்ள அடிகளார்,

> *"இன்றிருக்கும் ஓரறிஞன் நேற்றிருந்த தன்றியே*
> *பின்னைநா ளுமிருத்தல் பேசு"*[94]

என்பது போன்ற குறட்பா பத்தும் வாழ்க்கைக் குறள் என்னும் தலைப்பில் தந்துள்ளார்.

பல்வகை யாப்பில் பாடியமை போன்றே பல்வகைக் கருத்துக்களிலும் பாடல்கள் பாடினார். அவர்தம் பாடல்கள் இறைவணக்கப் பாடல்கள், மொழி பற்றிய பாடல்கள், இயற்கை பற்றியவை, இரங்கல் பாடல்கள், வாழ்வியல் பாடல்கள், நாட்டியல் பாடல்கள், மொழிபெயர்ப்புப் பாடல்கள் என்றெல்லாம் அமைகின்றன.

தமிழ்மொழி வாழ்ந்ததாக,

> *"வடமொழி யென்னும் மடங்கெழு தோழியொடு*
> *முடம்படுத் தொருங்கு விடுப்பக் குடம்புரை*
> *கொங்கைப் பொறைகெழு கொழுந்தமிழ் மங்கை"*[95]

என்ற பாடியவர் இந்தியத் தாயை,

> *"உலகிற்கோர் விளக்கனையாய் எம்முயிர்க்கோர் உயிரனையாய்*
> *பலவாறு நின்புகழைப் பாரித்தேன் சிற்றறிவால்*
> *சொலவருமோ தொலையாத வளமுடையாய் தொன்றுதொட்ட*
> *நலமெல்லாம் பிறர்கவர இந்நாளில் நாணினையே"*[96]

என்று பாடினார். அதில் தலைப்பாகத் தமிழை இந்தியாவிற்கு அடை மொழியாக்கித் "தமிழிந்தியத் தாய்" என்று பெயரிட்டமை அவர் தம் பரந்த உள்ளத்தைப் புலப்படுத்துகின்றது.

'செந்தூரப் பூ'வைப் பற்றிய இயற்கை வண்ணனையும் பாடற்பொருளாகியுள்ளது. இரங்கற் பாடல்களில் அவர்தம் ஆசிரியர் சோமசுந்தர நாயகர் பற்றி அவலத்துடன் இரங்கிப் பாடிய 'சோமசுந்தரக் காஞ்சி' தொல்காப்பிய மரபில் அமைந்த குறிப்பிடத்தக்க இலக்கியமாயிற்று. அதற்கு மறுப்பாக ஆனந்தக் குற்றங்கூறிப் பெரும்புலவர் சோழவந்தான் அரசஞ்சண்முகனார் போன்றோர் கருத்தெழுப்பியதையும், அவற்றிற்கு விடையாக, "சோமசுந்தரக் காஞ்சியாக்கம்" என்னும் உரை நடைக் கட்டுரை எழுந்ததையும் குறிக்காமல் விடமுடியாது. இவையெல்லாம் 'மறைமலையடிகளார் பாமணிக் கோவை' என்று ஒரு நூலாகப் பின்னர் வெளியிடப்பட்டுள்ளது,

இதற்கு மேலும் குறிப்பிடத்தக்கவை அவர் தம் மொழிபெயர்ப்புப் பாடல்கள். காளிதாசரின் சாகுந்தலத்தை வடமொழியிலிருந்து மொழிபெயர்த்த அடிகளார் அதில் 56 வடமொழிப் பாடல்களைத் தமிழில் சுவைகுன்றாது தமிழ் மரபிற்கேற்ப மொழிபெயர்த்துள்ளார்.

ஆங்கிலத்திலிருந்து 'பம்மல்' என்னும் இதழில் வெளிவந்த தலைப்புப் பாடல்களை மொழிபெயர்த்து வெளியிட்டார்.

ஆங்கிலக் கவிஞன் கிரே எழுதிய 'ஸம்பக்கஃச் ' என்னும் தலைப்புடைய இயற்கைப் பாடலை 'வேனிற் பருவம்' என்று பத்து விருத்தங்களாக மொழிபெயர்த்து அதற்கொரு முன்னுரையும் எழுதி வெளியிட்டார். அதில் தமிழ் மரபிற்கேற்ப மொழிபெயர்த்துள்ளதைக் குறித்துள்ளார்.

இவை யாவும் தனிப்பாடல்கள் என்றே குறிக்கப்பெற வேண்டும்.

ஒரு தனி நூலாகச் செய்யுளில் அவர் யாத்தது "திருவொற்றி முருகன் மும்மணிக் கோவை"யாகும். அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறைகளில் பத்துப் பத்துப் பாடல்களில் அமைந்த மூன்று மணிக்கோவை இந்நூல். இதிலமைந்த அகவல்பாக்கள் 250 அடிவரை நெடும்பாட்டாக அமைந்து பத்துப் பாட்டின் போக்கமைப்பை நினைவுறுத்துகின்றன.

இந்நூலை யாத்திட அவருக்கு ஏற்பட்ட உந்துதலும் ஒரு புதுமையானது. அடிகளார்க்கு இளமையில் கடுநோய் ஒன்று கண்டது. அது தீர்ந்தமை கருதி இக்கோவை எழுந்தது. தம்மை வருத்தும் நோய்தீரக் கடவுளைப் பாடி நோய் நீங்கினோர் கதைகள் பல உள்ளன. ஆனால், அடிகளார் தம்மை வாட்டிய நோய் நீங்கிய ஒன்றரை ஆண்டுகளில் பின் இந்நூலை எழுதினார். இது புதுமை. இதனை 'நன்றி நவிலல் கோவை' எனலாம்.

அடிகளார் தம் பாடல் நயத்திற்கு இருவகையை எடுத்துக்காட்டலாம். உவமைக்கு ஒன்று :

கடற்கரை நிலவளமும், வயற்புற நிலவளமும் கலந்து தோன்றும் ஒரு காட்சி வண்ணனை. கடற்கரை வெண்பொடி மணலில் வயற்புறத் தாமரை மலரில் பொன்னிறத் தூள்கள் காற்றில் அடித்துக் கொணரப்பெற்று விழுந்தன. வெண்மை மணலில் பொன்னிறத் தூள் கூட்டாகக் கிடந்ததை, "கோழிமுட்டை பொற்படுத்தாங்கு"[98] என்று கோழிமுட்டை உடைந்து வெள்ளைக் கருவின் பறலின் மேல் மஞ்சட்கருவும் கோழிமுட்டை உடைப்பைக் கூறியது வியக்கவும் தக்கது.

இக்கால உலகியல் நடப்பையும் அரசியல் இயக்கத்தில் திகழ்வதையும் படம்பிடிப்பது போன்ற ஒரு பாடல் குறிக்கத்தக்கது :

இக்கால அரசியல் இயக்கங்களில் ஒருவருக்கு நண்பராக 'நம்மவர்' என்றிருந்தவர் பின்னர் உரிய காரணம் ஏதும் இன்றி எதிரியாகிவிடுவர். காரணமின்றி எதிரியாவதால இவர் 'ஏதிலர்' எனப்படுவர். இதனையும் பார்க்கின்றோம். இவ்வறக்கட்டளையை அமைத்த கலைஞர் கண்ட ஏதிலர் பலர். மற்றொரு வகை: நாட்டு நலம் கருதாத நயமில்லாதவர்கள் அரசியல் தமராகக் கூடிக்கொள்வதைக் காண்கிறோம். எனவே, 'அரசியலில் நிலையான நண்பரும் இல்லை, நிலைத்த பகைவரும் இல்லை' என்று பேசப்படுவதையும் கேட்கின்றோம். எனவே, வேண்டிய நண்பர் வேண்டாத பகைவர் என்று ஒன்றும் பேசுவதற்கில்லை. இது வீண்பேச்சு. இப்பேச்சுக்களை விட்டு ஒற்றியூர் முருகனை வணங்கும் குறிக்கோளைக் கடைப்பிடிப்பாயாக என்று தன் நெஞ்சிற்குக் கூறுவதாக அடிகளார் பின்வருமாறு எழுதியுள்ளார் :

*"நமரா யிருந்துபின் ஏதில ராவர் நயமிலருந்*
*நமராவ ரென்னிற் றமர்பிற ரென்று தகவுசொல்லி*
*அமராடி றிறல் வரிமுகன் டாபலை யாழியொற்றிக்*
*குமரனென் றோதிக் குடந்தங்கொண் டேத்தக் குறிக்கோணெஞ்சே"*[99]

அடிகளார் சொல்லாட்சிகளில் மிக அரிய சொற்களும் இடம்பெறும். இப்பாட்டில் 'குடந்தம்' என்றொரு அரிய சொல்லைப் பெய்துள்ளார். கைகளைக் குவித்துச் சற்றே முதுகு வளைந்து வணங்குதலுக்கு 'குடந்தம்' என்பது சொல். "குடந்தம், கூப்பி மெய்கோட்டி நிற்றல்"[100] என்று பொருள் கூறுகிறது திவாகரம். முதுகு அதிகம் வளைந்து விட்டால் அது கூழைக் கும்பிடு ஆகிவிடும். சற்றே குனிந்து வணங்குதலைக் 'குடந்தம்' குறிக்கும். இவ்வாறு முருகனை வணங்க வேண்டும் என்கின்றார்.

*"முன்னோர் மொழி பொருளே யன்றி அவர் மொழியும்*
*பொன்னே போல் போற்றுவம்"*[101]

என்பது நல்லாசிரியர் மரபு. அடிகளார் இதில் விலகவில்லை. சான்றோர் பலர் படைத்த தொடர்களை அவ்வாறே எடுத்தாண்டும், கருத்தை வாங்கி ஆண்டும் பாடல்களைப் படைத்துள்ளார். சான்றுக்கு ஒன்று :

மழுங்கிய கருவிகளைக் கூர்மையாக்கச் 'சாணைக்கல்' என்றொன்று பயன்படுத்தப்படுவதை அறிவோம். அக்கல் ஒருவகை இறுகும் பிசின் என்னும் பயின் சேர்த்து உருவாக்கப்படுவது. சாணை பிடிப்பவன் அக்காலத்தில் 'காரோடன்' எனப்பெற்றான். இவனது கல்லைப் பிரியாத அன்பின் பிணைப்பிற்கு உவமை கூறினர்.

> "சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
> கற்போல் பிரியலம்" [102]

என்று சங்கப்புலவர் மாமூலனாரும்,

> "சிறுகாரோடன் பயினொடு சேர்த்திய
> கற்போல் நாவினேன்" [103]

என்று அகப்புலவர் பரணரும் ஒருமிக்கப்பாடினர். இக்கருத்தை எடுத்தாளும் அடிகளார்,

"பயினொடு சேர்த்திய கற்போற் றுணையைப் பயிர்ந்தகுரல் குயில்"[104] என்று குயிற்பேடையின் அன்பிற்குப் பாடி மகிழ்ந்தார்.

சிறப்பாகக் குறித்தால் அடிகளார் தம் பாடல்களின் படைப்பால் ஞானசம்பந்தர் பாடிய 'கவிதைப் புலவ'ராகவும்[105] திகழ்கிறார்.

**4. அளவையில் (3 நூல்கள்)**

> "ஆற்றின் அளவறிந்து கற்க; அவையஞ்சா
> மாற்றம் கொடுத்தற் பொருட்டு"[106]

என்ற வள்ளுவம் அளவைநூல் படிப்பு பற்றிக் குறிப்பதைப் பரிமேலழகர் பின்வருமாறு விளக்கினார் :

> "சொல்லிலக்கண நெறியானே அளவை நூலை அமைச்சர் உட்பட்டுக் கற்க"
> "அளவைநூல் சொல்நூல் கற்றே கற்றல் வேண்டுதலின்"[107]

இவ்விளக்கத்திற்கேற்பப் புலவரான அடிகளார் அளவை நூல்களைக் கற்றறிந்தார்.

தவறான கருத்துக்கள், மாறுபட்ட - முரண்பட்ட கருத்துக்கள் எழுந்தால் அவற்றை மறுக்கும் அளவறிந்து கருத்தால் மோதும் கருத்துப்போரே அளவையியல். ஆங்கிலத்தில் இதனை Logic என்றும் வடமொழியில் 'தருக்கம்' என்றும் குறிப்பர். அடிகளாரின் இந்த அளவை அறிவு பயன்படும் ஓர் உந்துதல் நேர்ந்தது. நாகையின் சைவசித்தாந்த சபையில் சைவப்புலவர் சோமசுந்தர நாயகர் ஆற்றிய சைவ சித்தாந்தக் கருத்துக்களை மறுத்து ஒரு வடமொழி மாயாவதி 'ஸ்ஜ்ஜன பத்ரிகா' என்னும் இதழில் எழுதினார். அதனை மறுத்து

நாகையில் வெளிவந்த நீலலோசனி முருகவேள் என்னும் புனைபெயரில் எழுதினார் அடிகளார். அம்மறுப்பு அளவை நூல் வழியில் தற்சார்பு நெறி, தர்க்கநெறி என்னும் வகைகளில் நிறைவாக அமைந்து வென்றது.

'அகர முதல' என்னும் முதற்குறட்பாவிற்கு மாயாவாத நெறியில் விளக்கம் எழுதப்பட்டதை மறுத்து 'முதற்குறள் வாத நிராகரணம்'; என்றொரு அளவையில் கட்டுரை எழுதினார். அதில் சைவ சித்தாந்தக் கருத்தை நிலைநாட்டினார்.

இவையெல்லாம் அடிகளார்தம் 21-வது அகவையில் நேர்ந்தவை. "மெய்கண்ட சில தூசன நிக்கிரகம்" என்னும் கட்டுரையும் அளவையியல் நெறிகொண்டது.

அவ்வையாரின் 'தேவர் குறளும்' என்னும் வெண்பாவிற்குச் சபாபதி நாவலர் எழுதிய விளக்கத்தை மறுத்து அடிகளார் 'மலிமொழிப் பிரகாசிகை' என்று எழுதியதைக் கண்டோம். அக்கட்டுரை நூலும் அளவையியல் நெறியில் அமைந்ததே.

நம் சித்தாந்த ஆசிரியர் சோமசுந்தர நாயகர் புகழுடம்படைந்தபோது அடிகளார் அவலத்துடன் 'சோமசுந்தரக் காஞ்சி' எழுதினாரன்றோ ? அதில் 'ஆனந்தக் குற்றம்' கூறி ஒரு வன்மையான மறுப்பு எழுந்தது. அதற்கு மறுப்பாக ஒரு நிறைவான கருத்துப்போர் நூலாகச் 'சோமசுந்தரக் காஞ்சியாக்கம்' என்னும் முழு அளவிலான அளவையியல் நூலை வழங்கி அளவையியலில் தனிப்பதிவைப் பொறித்தனர் அடிகளார்.

'மெய்கண்ட சிவதூசன நிக்ரகம்' என்பதொரு கட்டுரை அளவையியல் நூல். அடிகளார் தம் இக்கருத்துப்போரின் வன்மையையும் வெற்றியையும் பாராட்டிப் பாவேந்தர்.

> "பொருண்மை விளக்கும் ஆற்றலால்
> வெல்ல முடியாத நல்லாசிரியன்"[108]

என்று பாடியுள்ளார். அடிகளார் தம் அளவையியல் நூல்கள் மூன்று.

### 5. சமயவியல் (9 நூல்கள்)

அடிகளார்க்குச் சைவ சமயம் உணர்வின் அணுக்களிலெல்லாம் செறிந்தது. அவ்வுணர்வுப் போக்கிலேயே செல்லாமல் அறிவார்ந்தவழி இயங்கியது. அதிலும் பகுத்தறிவார்ந்த நெறியில் இயங்கியது. அதனால் தான் அடிகளார் சைவம் 'ஐம்புலன்களின் உணர்வு முழக்கம்' என்று முன்னர்க் குறிக்கப்பட்டது.

அவர்தம் பேச்சில் எழுத்தில் ஏன் உரையாடலிலும் சிவ எண்ணமே மிளிர்த்தது, அவர்தம் எழுத்தைத் தொட்ட இடமெல்லாம் சைவமே பட்டொளி

வீசியது. 'சமயம்' என்பதற்கும் 'சிவம்' என்பதற்கும் அவர் தந்த விளக்க உரை நோக்கத்தக்கது.

> 'சிவம்' என்றால் "அழியாப்பொருளாய் எல்லா உயிர்கள் மாட்டும் தொன்றுதொட்டே உள்ளது";[109]
>
> 'சமயம் என்பதற்குக் "காலம், நேரம், அவசரம்" என்னும் பொருள்களை வைத்து 'நேரம்' என்னும் பொருளிலேயே சமயத்தை அறிவித்தார். இது அவர் விளக்கத் தொடர்:

"சிவம் எப்பொருளும் கடந்த பெரும்பொருளை ஆராய்ந்த நேரமே சைவ சமயம் என்று உணரற்பாற்று"[110] இதில் 'ஆராய்ந்த நேரம்' என்று குறித்தார். நேரத்தைச் சமயம் என்றது மட்டுமன்று, 'ஆராய்ந்த' என்னும் சொல்லைப் பெய்து 'கடவுளைப் பற்றியெல்லாம் ஆராயக்கூடாது; அது பாவம் என்போரை மறுப்பது மட்டுமன்று பகுத்தறிவுப் பார்வையிலும் காணலாம் என்று புதுமை காட்டியதுமாகும். அவர் அறிவார்ந்த உணர்வில் சைவம் ஒன்றே சமயம்.

இந்தியாவில் அதிலும் தென்னாட்டில் ஆரியம், பௌத்தம், சமணம், மாயாவாதம், வைணவம் என்னும் எல்லாம் வந்து புகுந்தன என்றார். இவற்றையெல்லாம் இந்து மதங்கள் என்று சொல்வதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. 'இந்து சமயம் என்பது சைவம் ஒன்றே' என்பதே அவர்தம் உறுதியான கருத்து. இதனை 'இந்து சமய உண்மை' என்னும் கட்டுரையில் ஆணிப்பாய்வாக நிறுவியுள்ளார்.

'சைவம் தமிழ் மண்ணிலேதான் தோன்றியது; தமிழ் நெறிகளில் சமைந்ததுதான் சைவம்' என்பதில் அவர் ஊன்றி நின்றார். அறிஞர் சி.யு. போப் பெருமகனார் சைவப்பற்றி ஆய்ந்து, அதன் முடிவாக ஒரு கருத்தை எழுதினார்:

> "சைவ சித்தாந்தம் தென்னிந்தியாவில் மிகப்பரவலாக உள்ளது; மிகச் செல்வாக்காக உள்ளது. இந்தியச் சமயங்களில் உயிரோட்டமுள்ள பெருமதிப்பிற்குரிய சமயம் சைவமே என்பதில் ஐயமில்லை"

என்றவர்,

> "தென்னிந்தியாவில் தனிப்பெருஞ் சைவம் தமிழ்ச் சைவம். இது வரலாற்றுக் காலத்திற்கு முந்தியது. ஆரியர் வருகைக்கு முற்காலத்திலேயே சைவம் தமிழர் உள்ளங்களில் பிடிப்புள்ள நிலையில் ஆட்சிகொண்டது"[111]

என்றார். இக்கருத்தில் ஆழமாக மனம்பற்றினார் அடிகளார்.

சைவம் தமிழ் மண்ணில் பிறந்தது என்பதற்கு அழுத்தமான சான்றாகத் தொல்காப்பியம் காட்டும் 'கொடிநிலை, கந்தழி, வள்ளி'[112] என்னும் மூன்றையும் கொண்டு நச்சினார்க்கினியர் விளக்கும் கருத்திற்கு இசைந்து நின்று

அதற்குமேலும் விளக்கங்கண்டு சைவ சமயம் இயற்கைச் சார்புடையது. இயற்கையின் விளைச்சல் கதிர் என்கின்றார்.

அகத்திணை என்னும் ஒழுக்கம் தமிழர் தனிப்பண்பு. அதில் காதல் வாழ்வு அடித்தளம். இந்த இயற்கைப் பாங்கில் வளர்ந்து விளங்குவதே சைவ சமயம் என்கின்றார். தமிழியற்கைக் கடவுளைக் குறித்து,

"கொடிநிலை என்னும் கீழ்த்திசைக்கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர்",
"கந்தழி என்னும் ஒரு பற்றுமற்று அருவாய்த் தானே நிற்கும் தத்துவங் கடந்த பொருள்",
"வள்ளி என்னும் தண்கதிர் மண்டலம்"[113]

என்றெல்லாம் நச்சினார்க்கினியர் தந்துள்ள விளக்கத்தை ஏற்று ஞாயிறாக, அருவாக, நன்மதியமாகக் காணும் இயற்கையை ஆராயும் சமயமே சைவம் என்கின்றார் அடிகளார். இம்மூன்றையும்,

"மாணிக்கவாசகர் உண்மையான் உணர்ந்தனர்"

என்று சான்று காட்டுகின்றார். "பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்" என்ற தனியொரு நூலும் "தமிழர் மதம்" என்ற சான்றுநூலும் இவற்றின் விளக்குகள்.

வடநான்மறையில் மனம்பற்றியவராயினும் 'நான்மறை' என்பது தமிழில் உள்ளதே என்பதை 'கல்லாலின் கீழிருந்து நால்வர்க்கு உரைத்ததே நான்மறை என்கின்றார். தமிழில் வேதம் உண்டு என்பதை வடமொழி காமிகாகமம் "சிவபெருமானுக்கு வழிபாடு ஆற்றுங்கால் தமிழ் வேதங்களை ஓதுதல் வேண்டும்"[114] என்று சொல்லுவதை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார்.

"வேதம் சாமானிய நூல்;
சிவாகமம் விசேட நூல்"

என்பது அடிகளார் கோட்பாடு.

சித்தாந்தம் என்பது சைவ சித்தாந்தந்தான் என்றும் சமரச சன்மார்க்கம் என்பதும் சைவ சமய நெறிதான் என்பதை ஒரு தனி விளக்கமாகவே தந்துள்ளார். 'சமரசம் என்பதற்கு அடிப்படை தீவினைப் பயன்களை அறிவினால் அகற்றுவதே' என்று காட்டி அதுதான் உண்மைச் சைவம் என்றுள்ளார்.

இதன் தொடர்பிலேயே "அறிவெல்லாம் உருவத்தைப் பற்றியே அழியாது நிற்கும்" என்னும் ஒரு கோட்பாடு படைத்து உருவ வழிபாடு பற்றிய கருத்தை வடிக்கிறார்.

வடவர் கொள்ளும் உருவ வழிபாடு கை கால், தலை, உடம்பு கொண்ட உடலுருவ வழிபாடு; அஃதாவது அவர் சொல்லும் விக்கிரக வழிபாடு. அது

ஏற்கத்தக்கதன்று என்று விலக்கி அருவுருவ வழிபாட்டை வற்புறுத்துகின்றார். அருவுருவமாவது இலிங்க வடிவம்.

தீயை வைத்துத் தீயுருவில் சிவனை வழிபட்ட தமிழர், அவ்வுருவில் கல்லமைத்து வழிபட்டனர். அவ்வுருவே 'இலிங்கம்' என்னும் அருவுருவம். தீப்பிழம்பின் வடிவமே 'இலிங்கம்' என்று விளக்குகின்றார்.

ஆனால், நாம் வழிபடும் அம்பலவாணர் திருவுருவத்திற்கு விளக்கந் தருகின்றார். இது சற்று ஏற இறங்கக் காணற்குரியதாகின்றது. தம் பழக்கப் பாங்கிற்கு ஓர் அமைதி சேர்க்கிறார் என்றே என்போன்றோர் கொள்ள வேண்டியுள்ளது. இதுபோன்றே அம்மையப்பர், உருவத்திற்கும் உள்ள கதைகளையெல்லாம் பொய்யென்று தள்ளிவிடுபவர் கதிரவனையே மூலமாக வைத்து, அது தரும் நிறம் ஏழு; ஏழு நிறங்களில் மூல நிறங்கள் இரண்டு; அவை தீப்பிழம்பின் சிவப்பும் தீக்கருவின் நீலமும் ஆகும். இவ்விரண்டின் உருவகமாக அஃதாவது, 'சிவப்பு, சிவன்; நீலம் உமை என்னும் அம்மை' என்று காட்டுவதும் ஒருவகை அமைதி காண்பதேயாகும்.

இருப்பினும் இவ்வுருவங்களுக்குக் கட்டப்பெற்ற கதைகள் எல்லாம் பொய்க்குட்டைகள் என்றே ஒதுக்குகின்றார். இருப்பினும் இவற்றைப் படைத்த பலரில் சிலர் அறிவுச் சான்றோராகவும் திகழ்ந்ததை உணர்ந்து,

> "இப்புராணக் குப்பைக் குவியல்களிற் பழம்புராண உண்மைக்
> கருத்துகளாகிய விழுமிய மணிகள் சிற்சில புதைந்து
> கிடக்கின்றன'[115]

என்று இசைந்து போகிறார். இஃதும் அடிகளார் சான்றோர்க்குத் தந்த பெருமதிப்பு என்றே கொள்ள வேண்டும்.

மேலும் முருகன்பால் நீங்காப்பற்றைத் தொடக்க காலமுதல் கொண்டுள்ளார். முதலில் எழுதத் துவங்கியபோதே கொண்ட புனைபெயர் 'முருகவேள்' நோய் தீர்ந்த நன்றியில் பாடியது 'திருவொற்றி முருகன் மும்மணிக் கோவை'; தாம் நிறுவிய அச்சகத்திற்கு இட்ட பெயர் 'திருமுருகன் அச்சகம். முருகன் உருவிற்கு எழுஞாயிறாம் உருவகம் கூறியிருப்பினும் முருக வழிபாட்டை ஏற்றே நிற்கிறார். ஆனாலும், 'கந்தபுராணம் புளுகுப்புராணம்' என்றும் சாடியுள்ளார்.

> "பாருங்கள் அன்பர்களே! இப்புதுக் கந்தபுராணப் புளுகுகள்
> முழுமுதற் கடவுளான சிவத்தின் நிலைக்கு எவ்வாறு
> மாறுபட்டனவாயிருக்கின்றன"[116]

என்பது சாடலில் ஒன்று.

முடிவாக, சமயக் கொள்கையில் அவர் படைத்த எட்டு நூல்களின் பெயர்களே அதன் சாறு நிறைந்த கிண்ணங்களாகத் தோற்றமளிக்கின்றன.

'பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்' என்பதும் 'தமிழர் மதம்' என்பதும் 'Saiva Sidhanta as a philosophy of practial knowledge' என்னும் ஆங்கில நூலும் சமயம் என்பது சைவமே; அது தமிழர் சமயம் என்கின்றன. சைவ சித்தாந்த ஞானபோதம் சைவத் தனித்தன்மையை நிலைநாட்டுகின்றது,

'கடவுளுக்கு அருளுருவம் உண்டு'* என்று சைவத்தின் இலிங்க உரு கூறி, 'திருக்கோயில் வழிபாட்டை விளக்கி, அதே மூச்சில் "சிறு தேவதைகட்கு உயிர்ப்பலி இடலாமா"* என்று வினவி அதனை வன்மையாக மறுத்து, கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் வைசமாகா"* என்று இயற்கை உருவகக் கொள்கை காட்டி, புராணப் பொய்கதைகளைச் சற்று மேற்பூச்சுடன் மறுத்துச் 'சைவப் பாதுகாப்பு' கூறித் தம் சமயவியலை நிறைவேற்றியுள்ளார்.

**6. ஆய்வியல் (6 நூல்கள்)**

கடவுளை ஆராய்வதே கடுங்குற்றம் என்றிருந்த கண்மூடிக் கருத்தை உடைத்து ஆராய்ந்தவர் அடிகளார். தொட்டவற்றையெல்லாம் துருவி ஆராய்ந்தார். 'மதிநுட்பம் நூலோடு உடைய' இவர்க்கு அதிநுட்பங்கள் கைவந்த வெற்றிகளாயின. முதற்பெரும் ஆய்வு தமிழினப் பெருமையை நிலைநாட்டியதாயிற்று.

'பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும்', என்னும் ஆய்வு பல உண்மைகளை வெளிக்கொணர்ந்தது. 'உலகின் முதல் தோற்ற மூத்த மொழி தமிழ்' என்பதைச் சான்றுகளுடன் நிறுவும் அடிகளார் மும்மொழிப் புலமையை நுண்ணிய நோக்குடன் செலுத்தியுள்ளார். தமிழரின் வட்டெழுத்தே, உலக முதல் எழுத்து என்று காட்டி வடமொழி எழுத்தில்லாதிருந்ததை நிறுவித் தமிழ் எழுத்துக்களைக் கண்டே வடமொழி எழுத்துக்களைப் படைத்துக் கொண்டதை நிறுவியுள்ளார். 'காக்கைக்குத் தன்குஞ்சு பொன் குஞ்சு' என்பதற்குச் சற்றும் இடமில்லாமல் ஆய்ந்தார். அவர் தம் ஆய்விற்கு மூல நூல்களாக,

> "அரிய பெரிய முழுமாணிக்க மணிதான் தொல்காப்பியம்,
> திருக்குறள், இருக்கு வேதம், திரிபிடகம்"[117]

என்று கனா கண்டமையே அவர்தம் நடுநிலைக்கு சான்றாகும். வடவர் மறையில் கூறப்படும் 'ஃச்மிருதி' நினைக்கப்படுவது; 'சுருதி' கேட்கப்படுவது. 'எழுதப்படுவது' என்று ஒன்றும் இல்லை. இதுகொண்டே வடமொழி எழுத்தின்மையைச் சுட்டி "நூல்களைப் பாதுகாக்கத் திருத்தமாக அவற்றை ஓத வேண்டும்" என்று வற்பு றுத்தும் பிராதிசதங்கியக் கருத்தைக் காட்டி எழுத வகையின்றி ஓதியே காக்க வேண்டும் என்னும் குறிப்பால் வடமொழி எழுத்தின்மையை நிறுவினார். இதற்கு ஆங்கில அறிஞர்களது ஆய்வு முடிவுகளையும் துணையாக்கினார்.

---

* இக்குறியிடப்பெற்றவை தனித்தனி வெளியீடுகளாகவும் வந்துள்ளன.

ஆய்விற்கு அவ்வம்மொழியில் உள்ள சொற்களே கால அறிவிப்புச் சான்றுகளாகும் என்னும் கொள்கையைக் கொண்டவர் அடிகளார். அதன்படி சொற்களை விளக்கிக் கால எல்லைகளை வகுத்தார்.

வடமொழியில் வியாசபாரதம் ஒரு கால எல்லை காட்டும் நூல். அதில் தொடர்புள்ள சேர மன்னன் உதியஞ்சேரல் இரு படைக்கும் உணவளித்தவன் என்பது தமிழ் இலக்கியங்களிலும் பேசப்படுவதாகும். இப்புராதனக்காலத்திற்கு முந்தியது தமிழில் 'பண்டைக்காலம்' என்றும் வடமொழியில் 'வேதகாலம்' என்றும் கொள்ளப்படும் என்று கண்டு கூறினார்.

வடமொழி இலக்கண ஆசிரியராகிய பாணினியின் அட்டாத்தியாயி என்னும் நூலுக்கு அகல உரை தந்த பதஞ்சலியின் காலம் கி.மு. 150 என்று வடமொழி வல்லுநர்கள் வகுத்துள்ளனர். அதனையும் துணையாகக் கொண்டு பாணினியின் காலம் கி.மு. 900 என்று நிறுவினார். பாணினிக்கு 400 ஆண்டுகளுக்கு முந்தியவர் தொல்காப்பியர் என்று தம்முள் எல்லை வகுத்து, குமரி நிலம் பற்றிய நிலை இலங்கைப் பௌத்த வமிசாவழி குறிப்பைக் காட்டி விவிலிய நோவா காலமும் காப்புத் தொல்காப்பியன் காலம் கி.மு. 2400 என்று துணிந்து கூறினார்.

அடிகளார் ஆய்வில் 'மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்' என்னும் நூல் 1075 பக்கங்களைக் கொண்ட நிறைவான நூல்.

நாம் வழிபடு கடவுளுக்கு நேராக வைத்துப் போற்றும் மாணிக்கவாசகர் காலத்தை ஆராய்ந்து முடிவுகட்டும் இந்நூல் ஆய்வு நெறிகளை அறிவிக்கும் நூலுமாகும்.

மணிவாசகர் கால ஆராய்ச்சிக்கு அடித்தளமானது 'நரியைப் பரியாக்கிய' நிகழ்ச்சிதான். இதனை வைத்துப் பலவாறாக எழுதி மாணிக்கவாசகர் காலத்தை கி.பி.11-12 ஆம் நூற்றாண்டு என ஆய்ந்து எழுதியவர் பலர். அவருள் குறிப்பாக பி.த. சீனிவாச ஐயங்கார், கோபிநாத ராவ், போப் துரைமகனார், லிங்க துரைமகனார் முதலியோர் எழுதியவற்றை வன்மையாக மறுத்து எழுந்ததே இந்நூல்.

'நரியைப் பரியாக்கிய' சிவபெருமான் அருள் நிகழ்ச்சி மணிவாசகர்க்காக நிகழ்ந்தது. இதனைச் சுந்தரமூர்த்தி நாயனாரின் 'திருத்தொண்டர் தொகை' குறிக்காமைக்குக் காரணமாக முன்னிருந்த நக்கீரர், பரணர், அவ்வையார் முதலியோரைப் பாடாது விட்டது போன்றே விட்டு 'பொய்யடிமை இல்லாப் புலவர்' வரிசையில் மணிவாசகரையும் வைத்தார் என்று நாட்டினார்.

மற்றும் யானைமுகக் கடவுளை நம் திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரு நூல்களிலும் பாடாமை ஒரு சான்றாகியுள்ளது. அப்படி பாடிய,

"நரியைக் குதிரை செய்வானும்"
"குடமுழ நந்தீசனை வாசகனாக் கொண்டார்"
"நரியினார் பரியா மகிழ்கின்றதார்?"[118]

என்னும் தொடர்களும், "மணியார் வைகைத் திருக்கோட்டில் நின்றதோர் திறம்" என்று மணிவாசகர்க்காகச் சிவபெருமான் வைகைக் கரையடைக்க அதன் கரையில் மண்கொட்டிய செயற்குறிப்பும் அடிகளார்க்கு வன்மையான சான்றுகளாயின. இவற்றிற்கெல்லாம் வேறு பொருள் கூறியோரைத் தக்க வன்மையான சான்றுகளுடன் மறுத்துள்ளார்.

மணிவாசகர் அமைச்சராயிருந்த அவையின் மன்னன் வரகுண பாண்டியன் கி.பி. மூன்றாம் நூற்றாண்டினன் என்று நிறுவியுள்ளார். இதற்கு விளக்கம் கூறுபவர்.

"உள்ளது கூறும் பாரதக் கதை
இல்லது கூறும் இராமன் கதை"[119]

என்று இராமாயணம் கற்பனைக் கதை என்பதைத் தெளிவுபட விளக்கியுள்ளார். இராமாயணக் கதை புத்தசாதகக் கதையைப் பின்பற்றி எழுந்ததென்றும், அதிலும் ஒரு கதையில் 'இராமன் தெற்கே வந்து இராவணனுடன் போரிட்டது கூறப்படவில்லை' என்றும் எடுத்துக்காட்டியுள்ளார்.

முதல் மறையாகிய இருக்கு மறையில் ஓர் இயற்கை அன்னையின் உருவகம் உண்டு. அதில் மழையின் தலைவனாகிய இந்திரன் இராமன் என்னும் சொல்லாகவும், உழும்போது உண்டாகும் சால்வழி சீதையாகவும் வண்ணனையாகக் கூறப்பட்டுள்ளதை எடுத்துக் காட்டுகின்றார்.

மேலும் புத்தக்கதை ஒன்றில் தயரதனுக்கு இரண்டு மகனும் ஒரு மகளுமாக மூவர் மக்கள். இராமன், இலக்குவன், சீதை என்னும் மூவர் அவர். மூவரும் காட்டிற்குச் சென்றனர். அண்ணன் தங்கையாகக் காடு சென்றனர். மீளும் போது கணவன் மனைவியாக மீண்டனர் என்று காணமுடிகின்றது. இக்காலத்தில் இராமர் பிறந்த இடம் அயோத்தியில் உள்ளது. எந்த வரலாற்று ஆசிரியரும் ஒத்துக்கொள்ளாத ஒன்றிற்கு வரிந்து கட்டி பாபர் மசூதி இடிக்கப்பட்டதை நோக்கும்போது அருவெறுப்பான நகைப்பே தோன்றுகின்றது. மதவெறியால் நேர்ந்த புனைகதையால் விளைந்த கொலைக் கொடுமைகளையும் காண நேர்ந்தது.

மிக நெடிய ஆய்வால் மணிவாசகர் காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு என்று நிறுவியுள்ளார்.

"சாகுந்தல நாடக ஆராய்ச்சி" எண்ணம் அடிகளார்க்கு எழுந்தது எப்படி ? சென்னை நிகழ்ச்சி ஒன்றில் ஒரு பார்ப்பன* படிப்பறிஞர் காளிதாசன் காப்பியம் பற்றி ஆங்கிலப் பேச்சைக் கேட்கச் சென்றவர்க்கு ஆழமான தாக்கமொன்று நேர்ந்தது. அவரே "அப்பேச்சு என்னுள் சுளீரென்று ஓர் ஆர்வ வேட்கையை அனன்றெழச் செய்தது" என்று எழுதியுள்ளார். அத்தாக்கத்தால் சேக்சுபீயரையும் காளிதாசரையும் ஒப்பீடு செய்து எழுத வேண்டும் என்று எண்ணங் கொண்டார். அதன் விளைவுதான் காளிதாசரின் சாகுந்தலத்தை அப்படியே மொழிபெயர்க்க வைத்து, அதற்கொரு ஆராய்ச்சியையும் செய்ய வைத்தது. அவர் குறிப்பிட்டதுபோன்று சேக்சுபியருக்குக் கருத்துத் திறவுகோல்களாக எழுந்த உல்ரிகி முதல் பிராட்லி தொடர்ந்து பிராஸ்டெசு வரை அமைந்தமை போன்று காளிதாசருக்கு அடிகளார் திறவுகோலரானார்.

அவ்வாய்வு ஒரு நெறியான ஆய்வு 'நாடக இயல்பை'ப் பொதுவாக ஆய்ந்து, 'நாடக வரலாறு' கூறுகையில் தமிழில் உள்ள கூத்துக்கும் நாடகத்திற்கும் வேறுபாடு காட்டி,

> "நாடகமும் கூத்துமெல்லாம் முதன்முதலில் கண்டறிந்து நூல்கள் எழுதினோர் பண்டைத் தமிழாசிரியர்களேயாதல் நன்கு பெறப்படுகின்றது"[120]

என்று முடிவு காட்டி, 'நாடக அமைப்'பிற்குத் தொல்காப்பியம் முதல் பல்வகைத் தமிழ் நூல்களின் இலக்கணம் காட்டி அவற்றிலெல்லாம் காளிதாசர் சாகுந்தலம் எவ்வாறு ஈடுகொடுத்துச் சிறந்து மிளிர்கிறது என்பதையும் வெளிப்படுத்தியுள்ளார்.

காளிதாசரின் 'நாடகக் கதையமைப்பை' வியந்து அது தமிழர் அகப்பொருள் வழியது என்றுகாட்டி, அவர் நாடக மாந்தர் இயற்கையை எவ்வாறு பளிச்சென்று சுருக்கமாகக் காட்டியுள்ளார் என்பதை எடுத்துக் காட்டுகிறார். இடுக்கு கிடைக்கும்போதெல்லாம் கம்பரைச் சாடும் அடிகளார் இங்கும் கைகாட்டுகிறார். சகுந்தலையை வண்ணிக்கும் துசியந்தன் அவள் உடல் மெருகையும் திறத்தையும், "புதிது அவிழ்ந்த மல்லிகை மலர்போல்" என்ற சிறு தொடரில் வைத்திருப்பதை வியப்பவர் சீதையை இராமன் 34 செய்யுட்கள் தந்தும் அவள் உடல்திறத்தை ஐயத்திலேயே வைத்துள்ளதை ஏளனம் செய்கிறார்.

தொடர்ந்து 'கதை நிகழும் காலமும் இடமும்' விளக்கி 'காளிதாசர் வரலாறு' காட்டப் புகுகிறார். காளிதாசர், தமிழ்நாட்டிலிருந்த வடபுலத்தில் குடியேறிய இடைக்குலத் தமிழர் என்கின்றார். அவர் சைவர், "இரண்டாம் சந்திரகுப்தனான விக்கிரமாதித்தன் காலத்தவர் போச மன்னன் காலத்தார் அல்லர்" என்று சான்றுகளுடன் அவர் காலம் கி.பி. 5 - ஆம் நூற்றாண்டில் முற்பகுதி என்று நிறுவுகிறார். அகச்சான்றுகள் பலவற்றில் அவர் யானைமுகக் கடவுளைக் குறிக்காததைக் காட்டுகிறார். 'காளிதாசரது நல்லிசைப் புலமையை

வியந்தும் நயந்தும் பாராட்டுகிறார். 'காளிதாசர் காலத்துப் பழக்க வழக்கங்களை' அடுக்குகிறார்.

நிறைவாக அக்காப்பியத்தில் நேர்ந்துள்ள குறைபாடுகளையும் பட்டியலிடுகிறார். மகளிரின் குணத்தன்மைகளில் அதிக கவனங் கொள்ளாமை ஒரு குறை. இயற்கைக்கு முரணாக மரங்கள் சகுந்தலையின் ஒப்பனைக்குப் பட்டாடையும், மணியணிகளும் வழங்கின என்பதும் குறை. வரலாற்றிற்குப் புறம்பாகத் துசியந்தன் தேவஉலகத்து இந்திரனுக்குப் போர்த் துணையானான் என்பதும் குறையே என்று குறித்துள்ளார்.

நாடக நூலைப் பற்றி இவ்வாய்வு அடிகளார் கருத்தறிவித்தது போன்று "காளிதாசர் எவ்வகையிலும் ஒப்பாரும் மிக்காருமற்ற ஆங்கில நாடக ஆசிரியர் சேக்சுபியருக்குக் குறைந்தவரல்லர்; சமமானவர்" என்பதை தோலுரித்துக் காட்டியுள்ளது.

அடுத்துச் 'சிவஞானபோத ஆராய்ச்சி' சைவச் சான்றோர் 'மெய் கண்டார் தமிழ் மரபுணர்ந்த பேராசான்: என்பதையும், மெய்யுணர்வு தோய்ந்தவர் என்பதையும், சைவம் அவர்க்குக் கடமைப்பட்டது என்பதையும் சான்றுகளுடன் காட்டுகிறது. மூலமான 12 நூற்பாக்களே மெய்கண்டார் யாத்தது; பிறவெல்லாம் மற்றையோர் சேர்ப்பு என்றும் அப் பன்னிரண்டும் சைவம், மூலச் சமயம் என்பதன் அணையாவிளக்குகள் என்றும் நாட்டியுள்ளார். இவ்வாய்வு சைவத்திற்கு ஒரு நிலவொளி; சித்தாந்தத்திற்கு ஒரு கதிரொளி.

நிறைவாக அவர் செய்த திருக்குறள் ஆராய்ச்சி இடம்பெறுகிறது. முன்னர் அளவையியல் பங்கில் 'முதற்குறள் வாத நிராக்ரணம்' என்றது ஓர் ஆய்வுப் புகுமுகம் ஆகும். இங்கு திருக்குறள் தமிழ் மரபின் கருவூலம் என்று நாட்டுகின்றார். திருவள்ளுவர் யாத்த திருக்குறள் உலகில் வேறெங்கும் காண முடியாத; எதிர்காலத்திலும் காண இயலாத உலகப் பெருநூல் என்று நிறுவியுள்ளார். பரிமேலழகர் உரை பலவற்றைத் தமிழ் மரபைவிட்டு அகன்றது என்று காட்டியுள்ளார். தென்புலத்தார் யார் ? என்று வினாவெழுப்பி அதற்கு பரிமேலழகர் கூறியுள்ள, "தென்புலத்தார் பிதிரர்: பிதிரராவார் படைப்புக் காலந்தொட்டு அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி அவர்க்கிடம் தென்றிசையாதலின் தென்புலத்தார் என்றார்"[121] என்னும் கருத்தை மறுத்து ஆய்ந்துள்ளார். இதற்கு,

> "தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
> பொன்போல் புதல்வரைப் பெறர் தீரும்"[122]

என்னும் புறப்பாட்டையும் அதற்குப் பழைய உரையாகிய "தென்றிசைக்கண் வாழ்வோராகிய நுங்குடியிற் பிறந்தோர்" என்பதையும் காட்டி 'தமிழினத்தாரின் மூதாதையர்' என்று முடிவு எழுதினார்.

'திருவள்ளுவர் சைவர்' என்றும், 'அவர் சித்தாந்தம் சைவ சித்தாந்தம்' என்றும் அவர் காட்டும் அனைத்தும் 'தனித்தன்மை வாய்ந்த பண்புகள்' என்றும், அவை 'தமிழர்க்கே உரியனவாயினும் உலகோர் கடைப்பிடிக்கத்தக்கது' என்றும்; 'உலகப் பெருநூல் திருக்குறள்' என்றும் நிறுவியுள்ளார்.

இவ்வாய்வுகளின் பயனாய்த்தான், "கிறித்து பிறப்பதற்கு முப்பது ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் பிறந்தார். ஆண்டைத் தவிர அவர் பிறந்த நாளும் திங்களும் அதற்கு சான்றும் கிடைக்கவில்லை" என்று திருவள்ளுவர் காலத்தை வரையறுத்து அறிவித்தார். இம்முடிபு இன்று அரசாலும் ஏற்கப்பெற்று நடைமுறையில் உள்ளது மகிழ்விற்குரியது.

அடிகளார் ஆய்வுநெறி கூர்த்தது; குலையாதது; தெளிவும் தேற்றமும் கொண்டது; நெளிவும் நீற்றலும் கொண்டதன்று. பகுத்தறிவு வழி கொண்டது; பட்டுப்போகும் புராணவழி கொண்டதன்று. இவற்றால் அவர் கண்டு நாட்டியுள்ள முடிவுகள் இவை :

1. உலக முதல்மொழி தமிழே.
2. தொல்காப்பியர் காலம் கி.மு. 2400.
3. எழுத்தில்லாத வடமொழி தமிழ் எழுத்துக்களைக் கண்டே எழுத்துக்களை வகுத்துக்கொண்டது.
4. வட உபநிடதம், பிரமாண்யம் முதலிய பல நூல்கள் வடமொழி பயின்ற தமிழாசிரியரால் எழுதப்பட்டவை.
5. தமிழ் நூல்களைப் படித்து அவற்றின் கருத்துக்களை இரவல்களாகப் பெற்றுப் பல வடமொழி நூல்கள் எழுதப்பெற்றன.
6. தமிழர் சைவமே முதற் சமயம்; முழுச் சமயம்.
7. மணிவாசகர் காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு.
8. நாடக நூல்கள் முதன்முதலில் தமிழாசிரியர்களால் படைக்கப்பட்டன.
9. வேதம் சாதாரணமானது; சைவம் விசேடமானது.
10. திருவள்ளுவர் ஆண்டு கிறித்து பிறப்பதற்கு 30 ஆண்டுகளின் முன்னது.

இப்பத்துக் கட்டளை முடிவுகளால் தமிழரும் அவர் வழி உலகோரும் அறிவுப் பயனும் வாழ்வுச் சிறப்பும் கொள்ளலாம்.

அடிகளார் தம் ஆய்வில்-ஆய்வு முடிவில் வைர உறுதி கொண்டவர். புதிது படைக்கிறேன் என்னும் புலமைப் பெருமிதம் கொண்டவர். தமிழர் ஆரியர் ஒப்பீடு செய்தவர் "இவ்வாய்வு கீழ்த்திசை வரலாற்றுக்குப் புதுமையானது"[12] என்றார்.

அசைக்கமுடியாத முடிவுகளை வைத்தவர் என்பதை அவரது சொற்களே கல்லெழுத்தாக்குகின்றன:

> "18 ஆண்டுகளுக்கு முன் வரைந்துள்ள கருத்துக்கள் மேன்மேல் ஆராய்ச்சிகளால் உரம்பெற்று வருகின்றனவேயல்லாமல் அவை சிறிதும் மாறுபடவில்லை".[124]

## 7. நாடகவியல் (2 நூல்கள்)

> "உலகவியற்கை மக்களியற்கையோடு மாறுகொள்ளாவாறு நாடகநூல்யாக்கும் வகைகளை விரித்து விளக்கிய தொல்காப்பியம், இறையனாரகப் பொருளுரை முதலான பண்டைத் தமிழ் நூல்களின் ஆசிரியர்களும் அவர் வழி பிழையாது போந்து கலித்தொகை, அகநானூறு, திருச்சிற்றம்பலக் கோவையார் முதலான நாடகத் தமிழ்நூல் யாத்த நல்லிசைப் புலவர்களும்"[125]

என்று நாடகத்தமிழ் நூல்கள் பற்றி ஆய்ந்தறிவித்தவர் அடிகளார்.

நாடகம் உண்மைக்கூறுகளை உரையாடல், உணர்ச்சி வடிப்பு, உணர்வார்ந்த செயல்கள், ஒன்பது சுவைகள் முதலியவற்றின் மூலம் வெளிப்பாடாக்குவதே. ஒப்பனை இன்றியமையாதது என்றாலும் ஒப்பனையின்றி நாடகம் சிறப்பதும் உண்டு. ஒப்பனையுடன் நடித்து மாதவி ஆடிய வரிக்கூத்தும், மாற்று ஒப்பனையின்றி இயல்பான நாளிட்டு ஒப்பனையுடன் உரையாடிய அகப்பொருள் உறுப்பினர்களின் நிகழ்ச்சிகளும் நாடகப்பாங்குகளே. கலித்தொகையின் ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு ஓருறுப்பு நாடகமன்றோ? திருக்குறள் காமத்துப்பாலின் ஒவ்வொரு அதிகாரமும் ஒவ்வொரு சிற்றரங்க நாடகமே.

அடிகளார் நாடக இலக்கியங்களில் மனம் ஊன்றியவர். அவர்தம் 20 ஆவது அகவையில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அழைப்பில் திருவனந்தைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம், வடமொழி, தமிழ் ஆகிய மும்மொழிகளிலமைந்த நாடக நூல்கள் கற்றுத் தேர்ந்த அடிகளார் முன்னர் கண்ட சென்னைச் சொற்பொழிவின் நிகழ்ச்சியால் உந்தப்பெற்றுக் காளிதாசரின் 'சாகுந்தலத்தை' வடமொழியிலிருந்து மொழிபெயர்த்து யாத்தார். மூல அமைப்பின் சுவையும், ஆசிரியர் வடிப்பு நெறியும் மாறாமல் இந்நாடக நூலை எழுதினார். இடையிடேயே காளிதாசரின் வடமொழிச் செய்யுள்களைத் தமிழ் யாப்பில் அமைத்துப் பாட்டிடையிட்ட உரையாடல் நாடகமாக உருவாக்கினார்.

இதன் சிறப்பை அறிந்த தவத்திரு சங்கராச்சாரிய அடிகளார் இதனைப் பாராட்டி மாணவர்க்கும் பரிசு நல்கும் அறக்கட்டளை ஒன்றை நிறுவினார் என்பதை ஆழமாக நினைந்து இந்நூலின் சிறப்பைக் கணிக்க வேண்டும்.

மாயாவாதி என்று அடிகளாரால் கண்டிக்கப்பெற்ற பீடத்துச் சங்கராச்சாரியார் பாராட்டு என்றால் ஆழமாகத்தானே நோட்டப்பட வேண்டும் ?

இந்நாடக நூல் தமிழுக்கு நல்ல அன்பளிப்பு.

இரண்டாவதாகவும் நிறைவாகவும் அடிகளார் எழுதிய நாடகம் 'அம்பிகாபதி அமராவதி' நாடக நூலாகும். இதற்கும் ஓர் உந்துதல் உண்டு. அடிகளார் தம் 22.12.1938 நாட்குறிப்பில் இதுபற்றி எழுதியுள்ளார். கோவிந்தராச முதலியார் என்பவர் தாம் எழுதிய 'அம்பிகாபதி' நாடகத்தினைப் பார்வையிட்ட அடிகளார் அது, சுவையின்றிக் கலைத்தன்மையின்றி ஆர்வமூட்டலின்றி அமைந்திருந்ததைச் சுட்டி எழுதி "அம்பிகாபதி பற்றி புதிய நாடகம் நானே எழுத எண்ணியுள்ளேன்" என்று பதிந்ததற்கேற்ப இந்நாடக நூல் உருவாயிற்று.

இக்கதை வரலாற்று நிகழ்ச்சியின் ஒரு கூறு. கம்பர் மகன் அம்பிகாபதிக்கும் சோழன் மகள் அமராவதிக்கும் நேர்ந்த காதல் ஆழமும், அதனால் அம்பிகாபதி அரசன் ஆணையால் வெட்டுப்பட்டுக் கொலையுண்ட துன்பமும் கதைப்பொருள்.

> "சற்றே பருத்த தனமே" என்று தொடங்கித் "தலையலங்காரம் புறப்பட்டதே"[126]

என்று முடியும் அம்பிகாபதியின் பாடலும்,

> "பட்டுப்பட் டாயினும் தேறுவை என்று பார்த்திருந்தேன்
> வெட்டுப்பட்டாய் மகனே முன்னாளின் விதிப்படியே"[127]

என்றும்,

> "வில்லம்பு பட்டதா என்மார்பில் பார்வேந்தே, நின்குலத்தைச் சுட்டதாடா என்வாயில் சொல்"[128]

என்றும் பாடிய கம்பரின் தனிப்பாடல்களும் சான்றாகுகின்றன. இவற்றின் அடித்தளத்தில் அமைந்தது நாடகக் கதை. இப்பாடல்கள் அம்பிகாபதியாலோ கம்பராலோ எழுதப்பட்டனவா என்று கருதுதற்கு இடமுண்டென்றாலும் அடிகளார் இக்கதையில் மனம் பற்றினார். கம்பர் தம் இராமாயணத்தை அரங்கேற்றும் நிகழ்ச்சியைத் தடுக்கப் புலவர் ஒட்டக்கூத்தரைப் பயன்படுத்தியுள்ளார் அடிகள். இது அடிகளாரின் வையவக் கதை எழுதி கம்பன்மேல் காட்டும் எதிர்ப்பின் வெள்ளோட்டங்களில் ஒன்று என்று கொள்ளலாம். ஆனால் வன்மைப் புலவனாகிய ஒட்டக்கூத்தன் இக்கதையின் வில்லனாக்கப்பட்டுள்ளதால் அடிகளாரால் இராமாயண அரங்கேற்றத்தைத் தடுக்கும் வில்லன் ஒட்டக்கூத்தர். அதனால் காதலையும் கொலைக்குள்ளாக்கும் குற்றமும் நேர்ந்தது.

ஆனாலும் இந்நாடக நூல் ஒரு குறிப்பிடத்தக்க தமிழ்ப் படைப்பு. தமிழுக்கு அடிகளார் தந்த பரிசு.

இன்பியலுக்கு ஒரு சகுந்தலை நாடகம்
துன்பியலுக்கு ஓர் அம்பிகாவதி அமராவதி.

ஆனாலும் 'பதி'யும் 'வதி'யுமாக அமைந்த ஆண், பெண் பெயர்கள் அடிகளாரைத் தனித்தமிழ்க் கோட்பாட்டிலிருந்து சற்று நகர்த்தி வைக்கின்றன. வரலாற்று வழங்குபெயர் என்று கொண்டார் போலும்.

## 8. உளவியல் (4 நூல்கள்)

உளவியல் என்று இங்கே குறிக்கப்பெறுவது மேலைநாட்டில் வளர்க்கப்பட்டு வரும் 'மெஃச்மரிசம், இப்னாட்டிசம்' என்னும் கலைகளேயாகும். அறிவை மயக்கி உள்ளத்தை வயமாக்கும் கலையாகையால் 'உளவியலில்' இஃது அடங்கும். நம் முந்தையர் இக்கலையில் கைவந்துள்ளனர். 'எட்டு மாசித்திகள், கூடுவிட்டுக் கூடுபாய்தல், ஞானத்திட்டி, வசியஞ் செய்தல், என்றெல்லாம் வழங்கப்பெற்றது இக்கலை. இடைக்காலத்தில் தமிழ்ச் சித்தர்கள் இக்கலையால் செயற்பட்டு வியத்தகு நிகழ்ச்சிகளை ஏற்படுத்தினர் என்பர். அடிகளாரும் இக்கலை பயின்று தம் மகனுக்கு இளைப்பிருமல் நோய் கண்டபோது 'அறிதுயில்' செய்து இந்த நோயைக் குறைத்தார் என்பர்.

'மரணத்தின் பின் மனிதர் நிலை', 'யோக நித்திரை அல்லது அறிதுயில், 'மனிதவசியம் அல்லது மனக்கவர்ச்சி', 'தொலைவிலுணர்தல்' என்னும் நான்கு நூல்கள் இக்கலைகளின் படைப்பு. திருக்குறள், திருமந்திரம், திருக்கோவையார் முதலிய தமிழ் நூல்களிலிருந்து இவற்றிற்குச் சான்று விளக்கமும் தந்திருப்பது அடிகளாரின் நுண்ணறிவின் வெளிப்பாடாகிறது. இக்கலை நூல்களைக் 'கல்வி நூல்' என்றுள்ளார்.

காதலர் உளக்கவர்ச்சி இதனால் விளைகிறது என்றும், மரஞ்செடி கொடிகள் யானை முதலிய விலங்குகள்பால் இவ்வுணர்ச்சிகள் தென்படுகின்றன என்றும் சுட்டி விளக்கியுள்ளார். முன்பிறவியில் நிகழ்ந்தவற்றையும், உடன் கால நினைவுகள் தொலைவிடங்களில் உள்ளார்க்கும் நமக்கும் ஒரே நேரத்தில் நிகழ்கின்றன என்பதையும் பொருத்திக் காட்டுகின்றார். ஆங்கில நூல்களிலிருந்தும் உலக நிகழ்ச்சிகள் பலவற்றிலிருந்தும் சான்றாகப் பலவற்றைப் பொருத்தியுள்ளார். இவையெல்லாம் இக்காலத்தும் நம் பயிற்சியால் கைவரப்பெறலாம் என்று அறிவுறுத்துகின்றார்.

ஐம்புலங்களுக்கு எட்டாத உருவத் தோற்றம் 'தொலைவிலுணர்தலால் நிகழும்.

'அறிதுயி'லால் பல மறைபொருள்களை வெளிக்கொணரலாம்.

வசியம் என்னும் 'மனக்கவர்ச்சி'யால் பல்வகைக் குற்றவாளிகளைத் திருத்தலாம்.

'மரணத்தின் பின் மனிதர் நிலை'யால் இறந்தோர் உயிர்களுடன் உரையாடலாம். இவை இந்நூல்களின் உள்ளீடுகள்.

இந்நூல்கள் நான்கும் தமிழுக்குப் புதிய வரவுகள்.

**9. குமுகாயவியல் (8 நூல்கள்)**

> "ஞானம் பொய்க்க நசிக்குமாம் சாதி;
> சாத்திரம் கண்டாய் சாதியின் உயிர்த்தலம்;
> சாத்திரம் இன்றேற் சாதி இல்லை;
> பொய்மைச் சாத்திரம் புகுந்திடில் மக்கள்
> பொய்யே யாகிப் புழுவென மடிவர்"[129]

இது பாரதியின் அறிவிப்பு; எச்சரிக்கையுமாகும். இப்பாதையிலேயே அடிகளார் குமுகாய எண்ணங்கள் நடந்தன. அடிகளார், "சாதிப் பேயை சாடும் வீரர்". சைவப் பிடிப்புள்ளவரானாலும் சைவத்தில் புகுத்தப்பெற்ற உயர்வு தாழ்வு வேறுபாடுகளைச் சாடத் தவறாதவர். 'சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்' என்னும் நூல் இவ்வுண்மையையும் பகுத்தறிவையும் குழைத்துச் சமைக்கப்பட்டது.

'தொல்காப்பியர் காலத்தில் சாதி இல்லை, உயர்வு தாழ்வு இல்லை; தொல்காப்பியத்தில் குறிக்கப்பெறும் சாதி தொழில் பற்றியது என்று நிறுவியுள்ளார். ஒத்ததறியும் பண்புள்ள அடிகளார் வடமொழி நூல்களுடன் இயைந்து சென்று அவற்றிலிருந்து நற்கருத்துக்களைச் சான்றாகக் கொள்கின்றார். வடமுதல் மறையாம் இருக்கு மறையின் அதன் பத்தாம் மண்டிலம் வரை சாதி பற்றிய 'குறிப்பே இல்லை' என்றும், சாதி உயர்வில் குறியீடாகக் கொள்ளப்பெறும் 'பூணூலணிவதும் பின்னர் கட்டிய சதபதப் பிரமாண்யத்தில்தான் உள்ளது' என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். திருக்குறள் காட்டும் உயர்வு தாழ்வு வேறுபாடற்ற தமிழ் வாழ்வை ஆழமாக விளக்கியுள்ளார். மக்களைச் சமமாக நோக்கிய சைவத்தில் சாதிக் கருத்து வடமொழிப் புராணக் கருத்துக்களால் தமிழில் புகுத்தப்பெற்றதைக் கண்டிக்கிறார். அதன் பின்னரும் சேக்கிழார் போன்றோர் சைவத்தில் சாதி வேறுபாட்டை நீக்கிக் காட்டவே இலக்கியம் வடித்ததை விளக்கியுள்ளார். சோமாசி நாயனார் புராணத்தில் அவர் செய்யும் வேள்விக்குச் சிவன் சண்டாளப் பறையனாக வந்ததைக் காட்டுகின்றார். சைவரில் 'சாதித் திமிர் கொண்டவரால் மக்கள் குமுகாயம் தடம் புரண்டது' என்கிறார்.

குமுகாயச் சீர்திருத்தத்தில் பெருநாட்டங் கொண்டவர் அடிகளார். அதனை முன்னர் அவர்தம் 'தமிழின ஊற்ற'ப் பகுதியில் கண்டோம். ஆண்பெண் சமானியத்தைத் தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களும், திருக்குறள் திருக்கோவையார் முதலிய இலக்கியங்களும் காட்டுவதை விளக்குகின்றார். "தானே அவளே தமியர் காண" என்னும் களவியலில் ஆண்பெண் சமம் பளிச்சிடுவதைக் காட்டியுள்ளார். 'காகத்தின் இரு கண்போல'என்ற மணிவாசகர் தலைவன் தலைவி காதலின் சமபங்கைக் காட்டியுள்ளமை குறிக்கத்தக்கது.

சிறுவர் மணம், கைம்பெண் மணம், மகளிர்க்கு மறுமணம்-இவற்றை ஏற்று விளக்கும் அடிகளார் இவை குமுகாயத்தை வளமாக்கும் என்பது பாராட்டற்குரியது.

'தமிழன் தான்உலகிற்கு உழவுத் தொழிலை அறிமுகஞ் செய்தவன்; அவன் கொண்ட தனித்தன்மைகள் தாம் உலக நாகரிகத்தின் பிறப்பிடம்; அவற்றை விளக்கும்'தமிழ் புலவோர் உலக நாகரிகத்தின் தாயார்' என்பதை அவர்தம் 'வேளாளர் நாகரிகத்தில்' பரக்கக் காண்கிறோம்.

'முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர்' என்னும் நூல் தமிழர் தம் பண்பார்ந்த வாழ்வியலை உலகோர்க்குத் தருவதைப் போற்றிப் பிற்காலத் தமிழ்ப் புலவோர் வேண்டாதன செய்தவற்றைக் கண்டிக்கிறார். 'தமிழ் நாட்டவரும் மேல்நாட்டவரும்' என்னும் ஒப்பீட்டு நூல் ஆங்கிலேயர் தமிழரிடமிருந்து பெறவேண்டிய குமுகாயப் பாங்குகளையும், தமிழர் ஐரோப்பியரிடமிருந்து பெற வேண்டிய குமுகாய அறிவியல் முன்னேற்றங்களையும் வடித்துள்ளார்.

'பெற்றோர் கடமை' களையும், 'குடிமக்கள் கடமை' களையும் கூர்ந்து கண்டெழுதி மக்கள் குமுகாயம் கொள்ளவேண்டியவற்றையும் தள்ளவேண்டியவற்றையும் அறிவித்துள்ளார். 'முற்காலப் பிற்காலத் தமிழ்புலவோர்' என்னும் நூலின் ஆங்கில வடிப்பாக' Ancient and Modern Tamil Poets' என்பதைத் தந்து உலகோர் அறிய நல்ல குமுகாய அமைப்பை நிறுவியுள்ளார்.

பாரதிப் பெருமகன் புராணங்கள் பற்றி வடித்துள்ள கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

"கடலினைத் தாவிய குரங்கும்-வெங்
    கனலிற் பிறந்ததோர் செவ்விதழ்ப் பெண்ணும்
வடமலை தாழ்ந்தத னாலே-தெற்கில்
    வந்து சமன்செய்யும் குட்டை முனியும்

நதியினுள்ளே முழுகிப்போய்-அந்த
    நாகர் உலகிலோர் பாம்பின் மகளை
விதி முறையாலே மணம் செய்த-திறல்
    வீமனும் கற்பனை என்பது கண்டோம்.

ஒன்றுமற் றொன்றைப் பழிக்கும்- ஒன்றில்
  உண்மையென் றதைமற் றொன்றுபொய் யென்னும்
புராணங்கள் செய்தார்-அதில்
  நல்ல கவிதை பலபல தந்தார்;

கவிதை மிக நல்ல தேனும்-அக்
  கதைகள் பொய்யென்று தெளிவுறக் கண்டோம்;
புவிதனில் வாழ்நெறி காட்டி-நம்மை
  போதிக்கும் கட்டுக் கதைகள் அவைதாம்"[130]

பாரதிக்கு இப்புதுமைக் கருத்து, அவர் தம் பட்டறிவால் பிற்காலத்தில் தோன்றியது. ஆனால், அடிகளார் தொடக்கக் காலத்திலேயே இப்புரட்சிக் கருத்தில் ஊன்றியவர்.

குமுகாய நலத்திற்கு அடிகளார் இப்புதுமையைப் பின்பற்றித் தந்துள்ள நூற்கருத்துக்கள் தமிழ் குமுகாயத்திற்கு மட்டுமின்றி மதப்பூசலை விளைவித்து அரசுக்கட்டிலைப் பிடிக்க முந்துவோர் அழிசெயலுக்கும் மருந்தாகும்.

'சீர்திருத்தக் குறிப்புகள்' என்னும் சிறு வெளியீடு குமுகாயச் சீர்திருத்தங்களைக் குறிக்கிறது. இதுபோன்றே "Tamilian and Aryan form of Marriage' என்னும் ஆங்கில நூல் தமிழர் ஆரியர் மணமுறையை விளக்கித் தமிழ்மரபின் தூய்மையையும் நெறியையும் ஒளிரச் செய்கிறது. அடிகளார் குமுகாயக் கருத்துக்களால் ஒரு புதுமைப் புலவர்; புரட்சிப் புலவர்.

**10. புதினவியல் (2 நூல்கள்)**

புதுமைப் புலவர் புதினப் புலவரானார். 'பூத்துத் தோன்றும் புதினக் கலைகளைப் புலவர்கள் கூர்ந்து கண்டு நூல்களைப் படைக்க வேண்டும்' என்று அறிவுறுத்தும் அடிகளார் தாமே முன்னோடியாகி இப்புதினக்கலையில் புகுந்தார்.

தமிழ்மண்ணில் கதை வடிப்புகள் இருந்தாலும் இஃதொரு தனிக்கலையாகப் பிறப்பெடுத்தது மேலை நாட்டில்தான். 'நாவல்' என்னும் இத்தாலியச் சொல்லிற்குப் 'புதுமை' என்று பொருள். 17-ஆம் நூற்றாண்டின் இத்தாலி நாட்டு அறிஞர் தானியேல் தீபோ என்பார் இப்புதுமையை முதலில் படைத்தார். இவரை இக்கலையின் தந்தை என்பர். இக்கலையையே நாம் புதினம் என்று தமிழில் இப்போது வழங்குகின்றோம்.

அடிகளார் இப்படைப்பை வடிக்கவேண்டுமென்று முனைந்து இரண்டு நூல்களைப் படைத்துள்ளார். ஒன்று 'குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி' என்ற ஆங்கிலப் புதினத்தின் தழுவல். இரெயினால்டு எழுதிய ஆங்கில நாவல் இது. இது தம் கோட்பாடு கொள்கைகளைக் காட்டி எழுத வாய்ப்பாக இருந்ததை உணர்ந்து வடித்தார். தமிழர்தம் நீண்டகாலத் துயில் நீக்க இக்கலையில் எழுதுவதாகக் குறித்துள்ளார்.

"நல்லோர் துன்புற்று இன்புறுவர்; துன்பம் இழைப்போர் துன்புறுவர்; உயிர்ப்பலி அதிலும் மாந்தப்பலி கூடாது; காதலர் கூடுவர்; காதல் பூண்டோர் கடவுள் நிலையையும் பெறுவர்; நல்லாட்சி கண்டோர் வேற்றுகட்சியை விரும்பார்" என்னும் கருத்துகளின் பொதிவு இப்புதினம். இடையிடையே தம் கோட்பாடுகளாகிய சிவம், சித்தாந்தம், தமிழர் பண்பாடு, தனித்தமிழ் வளர்த்தல் முதலியவற்றையும் விவரமாக வைத்துள்ளார். இதனைத் தமிழ் மரபில் கொண்டுசெல்வதை நூலின் பெயரே அறிவிக்கிறது. இதனை ஓர் 'அறநெறிப் புதினம்' எனலாம்.

மற்றொன்று 'கோகிலாம்பாள் கடிதங்கள்'. இஃது அடிகளாரின் உரிமை வடிப்பு. சீர்திருத்தக் கருத்துக்களின் பெட்டகக் கதை இது. சிறுவர் மணக் கொடுமை; கைம்பெண் மணம்; கைம்பெண் காதலுணர்வு; கலப்புத் திருமணம் இவற்றின் தொடர் ஓட்டமே இப்புதினம்.

இக்கதை உத்தி கடிதமுறை உத்தி. கடித முறைப் புதினமும் மேல் நாட்டுப் பிறப்பே. ஆங்கில அறிஞர் சாமுவேல் ரிச்சர்ட்சன் என்பார் 1740ல் இவ்வகைப் புதினத்தைப் படைத்தார். 'பாமெலா' என்னும் புதினத்தை 135 கடிதங்களிலும் 'விளாரிசா' என்னும் புதினத்தை 537 கடிதங்களிலும் படைத்தார். பின்னது 3000 பக்கங்கள் கொண்ட நீள்புதினம்.

இந்த உத்தியில் மனம்பற்றினார் அடிகளார். புதினத்தைப் படைத்தார். இப்புதினங்களில் அடிகளாரின் குமுகாயச் சீர்திருத்த ஊற்றம் ஒலிக்கிறது. பெண்கள் முன்னேற்ற மணம் தென்றலாக வீசுகிறது.

## சீர்திருத்தப் பெட்டகம்

கோகிலாம்பாள் ஏழு ஆண்டு நிறையாச் சிறுமி. இவளுக்கு 45 ஆண்டு நிறைந்த ஒருவன் மணம் முடித்து வைக்கப்பெறுகிறான். அவன் ஓராண்டில் வாயைப் பிளந்து விடுகின்றான். எட்டாண்டு நிறையாத கைம்பெண் கோகிலா. பொட்டிழந்த பொற்சிலை. தன் மாமனார் வீட்டில்-அதிலும் தன் உண்மைப் பெற்றோரை உணராத புதிர் நிலையில்-அதிலும் ஒரு பாரசீக இனத்து மாமனார் இல்லத்தில் அடைபடுகின்றாள். இங்கு ஓர் ஒப்பீடு நயமானது; வியப்பையும் சொல்லுகிறது.

பாவேந்தர் பாரதிதாசனார் பாடல் பின்வருவது :

"ஏழு வயதே எழிற்கருங் கண்மலர்;
ஒரு தா மரைமுகம்; ஒரு சிறு மணியிடை;
சுவைத்தறி யாத சுவைதரும் கனிவாய்;
இவற்றையுடைய இளம்பெண்; அவள்தான்
கூவத் தெரியாக் குயிலின் குஞ்சு;
தாவாச் சிறுமான்;மோவா அரும்பு;
தாலி யறுத்துத் தந்தை வீட்டில்
இந்தச் சிறுபெண் இருக்கின்றாள்"[13]

இக்கவிதைக் கதைதான் அப்படியே அடிகளாரின் உரைநடைக் கதையில் உள்ளதன்றோ ? அடிகளார் புதினம் படைத்த ஐந்தாறு ஆண்டுகளுக்குப் பின்னே பாவேந்தர் பாடல் எழுந்திருக்கலாம். ஆனால், கோகிலாவைப் பார்த்துப் பாவேந்தர் எழுதியதாகக் கொள்ளவேண்டியதில்லை. இரண்டும் வெவ்வேறு முளைவயலில் முளைத்த வெவ்வேறு பயிர்ப் படைப்புகளே.

அடிகளார் கதையைத் தொடர்ந்தால்,

சிறுமி கோகிலா பருவமங்கையாகி "வேரிற் பழுத்த பலாவாய்க் கோரிக்கையற்றுக் கிட"ந்தாள். கோரிக்கை புதிதாகப் பக்கத்து வீட்டுக் காளை தெய்வநாயகத்திடமிருந்து கண்வாயிலாகத் தோன்றி இரு பருவக் கருத்துக்களிடமும் காதலை மலர்த்தியது. மாமி, நாத்தி கடிந்து வருத்துகின்றனர் சொற்களால். கோகிலாமேல் நாம் செலுத்தும் இப்பார்வையோடு பாவேந்தரின் மற்றொரு பாடலுக்குச் செல்வோம்:

"தோட்டத்து வாசல் திறந்திருக்கும்-அங்கு
சொர்ணம் வந்தால் கொஞ்ச நேரம்மட்டும்
வீட்டுக் கதைகளைப் பேசிடுவாள்-பின்பு
வீடு செல்வாள் இது வாடிக்கையாம்"[132]

இந்த வாடிக்கை அந்த வீட்டிலுள்ள கட்டிளங்காளை சுந்தரத்துடன் குலாவ வைத்துவிடுகிறது. இருவரும் பாவேந்தர் சொல்லில்,

"வெள்ளத்தி னோடொரு வெள்ளமுமாய்-நல்ல
வீணையும் நாதமும் ஆகிவிட்டார்"[133]

இதனைக் கண்டு இருவரின் தாயரும் "நீ கைம் பெண்ணடி கைம்பெண். இப்படிச் செய்துவிட்டாயே" என்று பொரிந்தனர். குற்றம் மறுத்திடக் காரணங்கள் கோடியிருந்தும் காதலர்கள் கண்ணீர் வடித்தனர். ஆனால் அடிகளார் படைத்த கோகிலா சற்று மாறுபட்டவள். அவளை அடிகளார் இவ்வாறு அறிமுகஞ் செய்கிறார்:

"கோகிலா பார்ப்பனக் குடிப்பெண்; ஆனால் இப்பற்றில் அகப்படாத தூய்மையும் நுண்ணறிவும் கொண்டவள். கற்பொழுக்கம் உடையவள். அவள் தமிழ்நாட்டு முதலியார் குடியைச் சேர்ந்த தெய்வநாயகத்தைக் காதலிக்கிறாள். தெய்வநாயகத்தைக் கோகிலா வீட்டார் சூழ்ச்சியால் தில்லிக்கு ஓட்டிவிட்டனர். கோகிலா முடங்கல்கள் வழி காதலை வளர்த்தாள். இவ்வாறு கடிதங்கள் 17 வளர்கின்றன. முடங்கல்கள் 17-உம் ஒரே கைதான் எழுதுகின்றது. பதினேழும் கோகிலாவின் முடங்கல்களே. எனவே, முடங்கல் போக்குவரத்து இல்லை; போக்குதான். இது ஒருவழி முடங்கல் காதல் வளர்ச்சி. இறுதியில் தெய்வநாயகம் மறைமலையடிகளார்க்கு எழுதிய முடங்கல் கதையை நிறைவேற்றுகிறது.

ஆம் அடிகளார்க்கு அக்காதலன் அத்துணை முடங்கலையும் அனுப்பியுள்ளான். கதை ஆசிரியர் தாம் படைக்கும் தாம் தோய்ந்து நிற்பர்; ஒன்றிப் பேசுவர்; பங்குபெறுவர். இப்பாங்கில் அடிகளார் இக்கதை உண்மையென்ற உணர்வுகொள்ளும் நிலைக்கு இவ்வாறு தம் பங்கையும் இணைத்துள்ளார். இதுபோன்றே 'சிந்தனைக் கட்டுரை'யிலும் முருகவேள் என்ற தம் பெயரை இணைத்தும் தாம் ஒன்றுகிறார்.

பல்வகைப் புது உத்திகள் அடிகளாரால் கையாளப் பெற்றுள்ளன. ஒவ்வொரு முடங்கலிலும் முதலில் காதலரை விளித்து எழுதப்பெறும் தொடர்கள்,

> "நேசரே! பெருமானே! என் மனத்தடத்தின் மலர்ந்து மணக்கும் தாமரையே! உள்ளக் கமலத்தொளிரும் என் காதற் செல்வமே!"

என்றெல்லாம் வெவ்வேறு அன்பு தவழும் தொடர்களாக அமைக்கப் பெற்றுள்ளன.

கதையோட்டம் மட்டும் முடங்களில் இல்லை. உலகியல் தன்மைகள்; சிவன் அருள்விளக்கம், ஒப்புரவாற்றல் சிறப்பு, அதன் நோக்கம், தமிழில் வடமொழி கலவாப் பாங்கு என அடிகளாரின் கோட்பாடுகள் ஆங்காங்கு மிளிர்கின்றன. பகுத்தறிவையும் ஒதுக்கிவிடவில்லை. புராணத்தில் 'குரங்கு தாவியது, மலையைப் பெயர்த்தது, பத்துத்தலை ஒருவனுக்கு, நிலத்தோடு பெயர்த்துப் பெண்ணைத் தூக்கிச் செல்வது' எனப்பட்டவையெல்லாம் கண்டனத்தால் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன.

இப்புதினம், சிறுவர் மணத்தீமை, காதல் மண உயர்வு, 'கைம்பெண் மண ஆக்கம், உலகியல் - அறிவியல் வற்புறுத்தல் என்றெல்லாம் பளிச்சிடுகிறது. ஆனால், ஒன்றைக் குறித்தாக வேண்டும். அது இதில் தனித்தமிழ்க் கொள்கையின் நடைமுறை. அடிகளாரே முகவுரையில் குறித்துள்ளார்:

> "கோகிலா இடம்பெற்ற குடும்பம் "வடநாட்டவராதலாலும், அவர்களுடைய உரையாடல்களின் இடையிடையே வடசொற்களும், கொச்சைச் சொற்களும் கலந்திருத்தல் காணலாம்".

இவ்வுரைக் குறிப்பு அடிகளார் புதின ஆசிரியர் நிலையிலிருந்தும் மரபுத்தமிழ், தனித்தமிழ்க் கொள்கையிலிருந்தும் சற்று தொய்வுபடுகிறார் என்றாகிறது. அத்துடன் புதினம் போன்றவற்றை எழுதப்புகும் ஆசிரியருக்கு இது வேண்டப்படும் ஒன்று என்று காட்டுவது போன்று அமைத்து அடிகளாரை நாம் சற்று ஓரக்கண்ணால் காண வைக்கிறது.

கோகிலா தம் உண்மைப் பெற்றோரைப் பற்றிய புதிர் கதையின் புதிர். கொள்ளையர் கூட்டத்தில் அன்னார் இருத்தலைத் திடுக்கிட்டு

அமைதிகொள்ள வைக்கும் உத்தி. முடிவில் கோகிலா, தெய்வநாயகம் கூடிவாழ்தல் இன்பியல் புதினமாக்குகிறது.

இப்புதினத்தில் முகவுரை ஆங்கிலத்தில் மிக நீண்டதாக எழுதப்பட்டுள்ளது. தம்மை இணைத்துக் கதையிறுதி முடங்கல் அமையினும் அம்முடங்கலுக்குத் தலைப்பாகப் 'பின்னுரை' என்று அடிகளார் தந்திருப்பது உண்மையை ஓரங்கட்டாது புதுஉத்தி கொண்டதாகிறது. மொத்தத்தில் கோகிலா ப்ாரதியின் புதுமைப்பெண்; பாவேந்தரின் புரட்சிப் பெண்; அடிகளாரின் குறிக்கோள் பெண்.

'கோகிலாம்பாள் கடிதங்கள்' தமிழ்ப் புதினத்தின் வைர விண்மீன்.

இப்புதினங்களோடு காலதயன் கீசிலான் கதை, தேமணிக்கதை, நெறிக் கதைகள் எனச் சின்னஞ்சிறு கதைகளையும் எழுதித் தம் இதழில் வெளியிட்டுள்ளார். இவையெல்லாம் அறநெறிக் கதைகள்.

(11. வாழ்வியல் நூல்கள் அவற்றின் முதன்மைப்பற்றி முன்னர் வைக்கப்பட்டன)

## 12. மொழியியல் (3 நூல்கள்)

உயிரினத்தில் மாந்தனை மேம்பாட்டியலில் நிறுத்தியது மொழி. அதன் இயலைப் பற்றியது மொழியியல். இயல் என்றால் தன்மை என்று பொருள்; தன்மைகளை வரையறைப்படுத்தும் இலக்கணம் என்றும் பொருள்.

இவ்வியல் ஒரு தனிக்கலை. இது ஒலிக்கூறு, ஒலிக்கூட்டலாம் சொல்லின் கூறு; சொல்லின் பொருட்கூறு; பொருள் தொடர்பாகும் சொற்றொடர்க் கூறு என்பனவற்றைக் கொண்டது. இவற்றுடன் மொழித் தோற்றம், மொழி வரலாறு, மொழியைப் படைத்த மாந்தனின் வரலாறு, அவன் தோன்றி வளர்ந்த நில வரலாறு, பல மொழிகளின் ஒப்பீடு இக்கலையின் உறவுக்கூறு.

அடிகளார் இவற்றையெல்லாம் அணுகியுள்ளார்; ஆய்ந்துள்ளார்; விளக்கியுள்ளார்; எழுதியுள்ளார். இக்கலை எழுத்துருவம் அவர் படைத்த பல நூல்களிலும் சிதறல்களாக உள்ளன. இதற்கெனத் தனியொரு நூலை அடிகளார் எழுதவில்லை. ஆயினும் அவ்வாறு எழுதும் எண்ணத்தைக் கொண்டிருந்ததைப் பாவாணரின் ஒப்பியல் மொழிநூலுக்குத் தந்த சான்றிதழில் எழுதியுள்ளார். அவ்வெண்ணத்தால் இரண்டு கட்டுரைகளை மொழியியல் கட்டுரைகளாக 'அறிவுக்கடல்' இதழில் எழுதினார்.

மொழியியலைக் குறிக்கும் ஆங்கிலச்சொல் 'Philology' என்பது 'Philos' = மொழி: desire = ஆர்வ வேட்கை; Logos = சொல்; discourse =

பேச்சு - உரையாடல்' என்னும் நான்கு சொற்களின் கூட்டுருவம். இந்நான்கு பொருள்களும் கொண்ட இச்சொல்லின்படியும் அடிகளார் மொழி பற்றியும் அதன்பால் தாம் கொண்ட ஆர்வவேட்கையையும், சொல்பற்றியும், பேச்சு உரை நடை பற்றியும் திறனாய்வு செய்துள்ளார். இக்காலத்தில் தனியொரு கலையாக அறிமுகமாகி வளரும் மொழியியலின் அகக்கூறு, புறக்கூறு எல்லாம் வெளிப்படுமாறும் கருத்துக்களைத் தந்துள்ளார். 'தமிழின் ஒலியெழுத்துக்கள்' என்னும் கட்டுரை மொழியியலின் அகக்கூறான ஒலிபற்றி விளக்கித் தமிழ் எழுத்தின் ஒலிநுட்பத்தை ஒலிக்கிறது.

முதற்குறள் விளக்கத்தில் அகர ஒலிக்கூறு, ஓம் என்னும் ஒலிக்கூறுகளை ஆய்ந்துள்ளார். பதிவதால் பாதம், பலவற்றைக் கடந்ததால் கடவுள் என்றெல்லாம் சொற்கூறுகளை ஆய்ந்துள்ளார். மனு என்னும் தமிழ்ச்சொல்லை வடமொழியுடனும், ஓரை என்னும் தமிழ்ச் சொல் மூலச்சொல் என்னும் பண்டை எபிரெய மொழியில் ஏறிய வரலாற்றையும் விளக்கியுள்ளார். இவ்வாறெல்லாம் எழுதப்பட்டவை கட்டுரைகளில் சிதறல்கள்தாம். ஒரு தனி நூல் இல்லையென்றாலும், தனித்தமிழும் கலப்புத் தமிழும் என்னும் கட்டுரையுடன் 'தமிழ்த்தாய்' என்னும் தனிநூலில் மொழியியல் தமிழ் மொழியில் வைத்து விளக்கியுள்ளார். 'சிறுவர்க்கான செந்தமிழ்' 'இளையர்க்கான இன்றமிழ்' என்னும் இரண்டும் மொழிப்பாங்கின் எடுத்துக்காட்டு நூல்கள்.

இவையன்றி மொழியின் புறக்கூறுகளான மொழித் தோற்றம், மக்கள் வரலாறு, நில வரலாறுகளையும் பிற பல முழு நால்களில் ஆராயப்பட்டுள்ளன. இவ்வகைகளால் அடிகளார் மொழியியல் துறையில் கருத்துக்கள் வழங்கியுள்ளார் என்றும், மொழி இலக்கிய இலக்கண ஆய்வால் இத்துறையில் தம் பங்களிப்பை வைத்துள்ளார் என்றும் கொண்டு மகிழ முடிகின்றது.

## 13. அரசியல் (2 நூல்கள்)

அரசியல் பற்றி அடிகளார் நேரிடையாகத் தனியொரு நூலும் எழுதவில்லை. இதுபோன்றே அரசியல் பற்றியும் தனியொரு நூலைப் படைக்கவில்லை. ஆயினும், 'இந்தி மொழிப் பயிற்சி ஏற்புடையதாகுமா ?' என்னும் கட்டுரையும்,'இந்தி பொது மொழியா ?' என்னும் சிறு நூலும், இதன் ஆங்கில வடிவமாகிய 'Can Hindi be a Lingua franca of India' என்னும் நூலும் அரசியல் சார்புடையவை.

இந்தி மொழி பற்றிய உருத்தோற்றம், அதன் தனிப்பண்பு இல்லாமை, பொதுமொழிக்குரிய மொழியமைப்பின்மை என்றெல்லாம் இந்நூலில் உள்ளமை மொழிபற்றிய கருத்துக்களாயினும் இந்நூலை எடுத்ததன் நோக்கம் இந்திய ஆட்சி அரசியலில் தமிழ்மக்கள் தள்ளப்பட்ட நிலைக் குடிமக்களாவர் இந்தித் திணிப்பால் என்பதாகும். இதன்கண் அரசியல் அடித்தளம் இருக்கிறது.

ஆட்சிமொழி, மக்களின் பொதுமொழி என்னும் பங்கு அரசியல் பங்கு. இவற்றால் மேற்கண்ட இரு நூல்களையும் அரசியல் நூல்கள் எனலாம். இவ்வாறு கூறுவது கொண்டு அடிகளார் இந்திய அரசியலில் கொண்டிருந்த கருத்தைக் காணவும் நேர்கின்றது.

**பேரியக்கச் சார்பு**

இந்திய தேசிய காங்கிரசின் 'வந்தேமாதரம்' பாடல் ஒலித்த போது அடிகளாரும் கொற்றவையை நாட்டுத் தாய் வடிவில் கண்டு 'வந்தேமாதரம்' என்னும் தலைப்பில் ஒரு பாடல் எழுதினார். 'தமிழிந்திய மாது' என்னும் பாடல்கள் இந்திய நாட்டின் சிறப்பையும் அதன் கலைகள் மேற்கத்தியரால் கவரப்பட்டதன் கவல்வையையும் அறிவிப்பதால் இந்திய அரசியல் தென்படுவதைக் காணலாம். காங்கிரசுத் தலைவர் சுரேந்திரநாத் பானர்ஜியைப் பாராட்டி ஒரு பாடல் எழுதித் தாமே தன் செலவில் அச்சிட்டு வழங்கியமையும், ஒத்துழையாமை இயக்கத்தைப் பாராட்டி வாழ்த்தியமையும், பாலகங்காதர திலகரை அந்தமானுக்கு அனுப்பியதைக் கண்டித்தமையும் அடிகளார் தம் நாட்குறிப்பில் எழுதியிருப்பது அவர்தம் உணர்வில் ஊறிய அரசியல் ஆர்வத்தைக் காட்டுவனவாகும். அண்ணல் காந்தியடிகளை முனிவர் என்றார். அவர் தன் மாகாணத்தில் நிறுவிய இந்து பல்கலைக்கழகத்தை வாழ்த்தினார்.

சென்னைக் கூட்டமொன்றில் அடிகளார் சொற்பொழிவாற்றியபோது இடையில் ஒருவர் திராவிட நாடு திராவிடர்க்கே" என்பது பற்றிய தங்கள் கருத்தென்ன ? என்று வினாவிடுத்தபோது "இந்தியா முழுவதுமே திராவிட நாடுதான்" என்று விடை தந்தார். இவ்விடை தமிழ் அதாவது திராவிட நாகரிகம் ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் பரவி நிலைத்தமையைக் குறிக்குமாயினும், நாட்டுப் பிரிவினையை விரும்பாமல் இந்திய ஒருமைப்பாட்டைச் சுட்டுவதாகவும் உள்ளது.

அனைத்திலும் சிறப்பான இந்தி மொழி என்பதைப் பல்வகையிலும் மறுத்து, தமிழ்தான் இந்திய ஆட்சி மொழியாகவும், பொதுமொழியாகவும் ஆதற்குரியது; ஆங்கிலமும் தொடர்தற்குரியது என்றமை தமிழர் அரசியலில் நிமிர்வதையும், ஒருமைப்பாட்டெண்ணம் மொழியால் துவண்டமையும் அரசியல் வித்தகத்தின் பங்களிப்புகளே.

1938 இந்தி எதிர்ப்பில் தலைதூக்கி அடிகளார் நின்றதும், மீண்டும் 1948-இல் இந்தி எதிர்ப்பில் பெரும் பங்கேற்றதும் அரசியல் நேரடி வெளிப்பாடாகும்.

இந்தி பொதுமொழியா ? என்னும் வினா உத்தி நூலும் அதன் ஆங்கில வடிப்பும் அடிகளாரின் நூல் வடிப்புகளின் அரசியலைச் சேர்க்கவும் அடிகளார்

வரலாற்றில் அரசியல் காற்று வீசியதைக் காட்டவும் வாயில்களாகக் கொள்ளப்பட்டன.

அடிகளாருக்குப் பின்னரும் இந்தி தலைதூக்கியது. பெரியார் அண்ணாவின் தாக்குதல்களால் சற்று பதுங்கியது. இன்று மீண்டும் பாயப் பார்க்கிறது.

பதுங்கி இருட்டில் பாய்கிறது.

"இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமா?
எல்லோரும் கேளுங்கள் நாட்டினரே"

என்று பாடியதைச் சற்றுத் திருத்தி எல்லோரும் பாருங்கள் நாட்டினரே என்று பாடிப் பார்க்கும் அளவு வெளிச்சத்தில் பளிச்சென்று தெரிகிறது.

**இந்திச்சாடல்**

இந்திமைய அரசின் அனைத்து அலுவலகங்களிலும் நடைபோடுகிறது. வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், ஈட்டுறுதி நிறுவனங்கள், புகைவண்டித் தொடர் அலுவலகங்கள் முதலியவற்றிலும் இந்தி செங்கோல் பிடித்து நிற்கிறது. தில்லியில் நிகழ்ந்த குடியரசு நாள் விழாவில் பங்குபெறும் மாணவர்களில் இந்தி கற்றோர் தவிர மற்றையோர் நீக்கப்பட்டனர். சென்னையில் நவோதயாப் பள்ளிகள் என்னும் போர்வையில் இந்தி உடல் மறைத்துத் தலைதூக்கி நிற்கிறது. அதற்கு இன்றைய தமிழக அரசும் பச்சைக்கொடி காட்டுகிறது. சென்னையில் அமைய இருக்கும் உருது பல்கலைக்கழகத்தில் இந்தியும் ஆங்கிலமுந்தான் கட்டாயப் பாடங்களாம். இவ்வாறு அடுக்கும் அளவில் இந்தி வாலாட்டம் தலையாட்டமாகி வருகிறது.

இவற்றிற்கெல்லாம் மேலாகப் பிஞ்சுள்ளங்கள் பயிலும் மழலையர் பள்ளிகளில் முதல் வகுப்பிலேயே ஆங்கிலம், தமிழுடன் இந்தியும் கட்டாயமாகவே இடம்பெற்று நடைமுறையில் உள்ளது. இது இருமொழிப் பாடத்திட்டக் கொள்கை உள்ள அரசின்கீழ் நிகழும் கழுத்தறுப்பு வேலை.

இந்நாளில் அடிகளார் இருந்தால் தம் பங்களிப்பைச் செய்ய முன் வந்திருப்பார். அவர் பெயரால் அறக்கட்டளைச் சொற்பொழிவிற்கு வழிவகுத்திருக்கின்ற டாக்டர் கலைஞர் கருணாநிதிதான் இன்று பெரியார் உணர்விலும், அண்ணா இடத்திலும் அமைந்து இந்தி மேலாண்மையை எதிர்த்துக் குரல் கொடுக்கிறார். மறைமலையடிகளார் பெயரால் தமிழர் அனைவரும் மொழிநலம், இனநலம் கருதி இந்நிலையை எதிர்த்துச் சூளுரை எடுத்து எதிர்க்க வேண்டியவர்களாக உள்ளோம் என்பதை அடிகளார் நினைவு பற்றிய சொற்பொழிவில் நின்று குறிக்க வேண்டியவனாகின்றேன்.

## 14. வரலாற்றியல் (3 நூல்கள்)

அடிகளார்தம் வாழ்வு வரலாற்றில் இந்தி எதிர்ப்பு ஓர் உணர்வு எழுச்சி. இதைவிட மேலாக அவர் தம் உணர்வு வரலாற்றில் இருவர் வரலாறுகள் ஒன்றியவை. ஒருவர் உணர்வு மேம்பட்ட அறிவில் ஒன்றியவர்; அடுத்தவர் அறிவு மேம்பட்ட உணர்வில் ஒன்றியவர். முதல்வர் வழிபடுதெய்வம் போல் கொள்ளப்பெற்ற மணிவாசகர்; இரண்டாமவர் போற்றித் தெய்வமாகக் கொள்ளப்பெற்ற சோமசுந்தர நாயகர். முன்னவர் சைவ சமயக் குரவர்; பின்னவர் சைவ சித்தாந்த அறிஞர். மணிவாசகர் தோன்றாத்துணையாய் ஆட்கொண்டவர். நாயகர் தோன்றும் துணையாய் உளங்கொண்டவர், 'மாணிக்கவாசகர் வரலாறு', 'சோமசுந்தர நாயர் வரலாறு' என்னும் இரு நூல்களையும் வரலாற்று நூலாகத் தமிழுக்கு வழங்கினார்.

சைவச் செம்மலார் இருவரின் வரலாற்று நூல்கள் இரண்டும் இருபேரொளி எனலாம். ஒன்று கதிரொளி; மற்றொன்று நிலவொளி. நிலவுத் தண்மையைக் கதிரிலும் கண்டவர் அடிகளார்; கதிர் வெம்மையில்லாமல் அதனையும் மடைமாற்றம் செய்ததுபோன்று அருள்தன்மை காட்டியவர் அடிகளார்.

### கதைமாற்றம்

மாணிக்கவாசகர் காலத்தை ஆராய்வதற்கு அடித்தளமாக மாணிக்கவாசகர் வரலாற்றை உருவாக்கிய அடிகளார், வழங்கப்பெற்று வரும் மணிவாசகர் கதைகளிலுள்ள குறைகளைக் கழித்துள்ளார். 'திருவாதவூரர் புராணம்' முதலிய மணிவாசகர் வரலாற்றுக் காப்பியக் கதைகளில் பிழையானவை, தவறானவை, புகுத்தப்பெற்ற வேண்டாதவை அனைத்தையும் ஆராய்ந்து உண்மை வரலாற்றைத் தந்துள்ளார். குருந்த மரத்தடியில் சிவபெருமான் அருளியமை, தில்லையில் திருவாசகம், திருக்கோவையார் படைக்கப் பெற்றமை முதலிய இன்றியமையா நிகழ்ச்சிகளை விளக்கி அவையவை நேர்ந்த காலங்களை வரையறுத்துக் கூறி வரலாற்றின் நெறியை நிறைவுபடுத்தியுள்ளார்.

பகுத்தறிவுக்கு ஒவ்வாதவற்றைப் புராணத்தும் கண்டிக்கும் அடிகளார் இவ்வரலாற்றில் இதிலிருந்து சற்று நழுவுகின்றார். இராமாயணத்தைச் சாடும் பாவேந்தர் இராவணனை ஏற்றார். இராவணனுக்குத் தலை பத்தென்பதை மறுப்பவர் அதற்கு மாற்று ஒன்றை நயமாகப் பாடினார்.

"ஐயிரண்டு திசைமுகத்தும் தன்புகழை வைத்தோன்" என்றார். 'இராவணன் பத்துத் தலை பொய்' என்னும் அடிகளார் அதற்கு மாற்று சொல்லவில்லை. ஆனால் 'முருகனுக்கு ஆறு தலை' என்பதற்கு மாற்று

சொல்வார். கந்தபுராணக் கதைகளைச் சாடி 'அது புளுகு மூட்டை' என்றவர், மணிவாசகர் வரலாற்றில் நரிகளைப் பரியாக்கிய பகுத்தறிவுக்கு ஒவ்வா ஒன்றை இறையருள் என்னும் முலாம்பூசி ஏற்றது வரலாற்றுத் தடத்தில் ஒரு குழியிறக்கமாகும்; அல்லது ஒரு நொடிப்பாகும். பொதுவில் மாணிக்கவாசகர் வரலாறு குறிப்பிடத்தக்க வரலாற்று நூல். 'மாணிக்கவாசகர் மாண்பு' என்னும் நூலில் மணிவாசகரின் பெருமை மட்டுமன்றி வரலாற்றுக் குறிப்புக்களும் உள்ளமையால் இஃதும் ஒரு வரலாற்றுச் சாப்புநூல் ஆகும்.

தம் அறிவாசிரியராகிய 'சோமசுந்தர நாயகர் வரலாறு' ஒரு சிறுநூல். அதில் ஒரு சிறு முற்பகுதி நாயகர் வரலாற்றைச் சுருக்கமாகத் தருகிறது. நாயகர் பற்றிய விவரங்கள் பலவற்றை விவரமாகப் பெற முடியாத நிலையில் சுருக்கமாக எழுதி விவரம் கிடைத்தபின் விரிவாக எழுத இருப்பதாகக் குறித்துள்ளார்.

நூலின் பெரும்பகுதி நாயகர் அவர்கள் கோட்பாடாகிய சைவத்தைப் போற்றுவதும், அதுபற்றிய ஆய்வும், ஆழமும் தெளிவாக்கப்படுகின்றன. நாயகர் தந்தை சைவர் என்றும் அம்மையார் வைணவம் என்றும் கண்டு கூறியுள்ளார். நாயகரது ஒவ்வொரு சைவ நிலையையும் நுணுக்கமாகக் காட்டுபவர் அவர் இல்லறவாழ்வில் நாளிட்டு நிகழ்ச்சிகள் நேரத்தில் நிகழாமை ஒரு பெருங்குறை என்று குறைபடுகிறார். வரும் அன்பர்களுடன் நெடுநேரம் உரையாடும் நாயகர் பழக்கத்தையும், தம் மனைவியார்க்குத் தாம் வழங்கிய உரிமை போன்று நாயகர் அவர்கள் வழங்காக் குறைபாட்டால் நேரந்தவறி நிகழ்வனவற்றையும் எண்ணிக் கவல்கின்றார்.

'வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம்' என்று பாண்டித்துரைத் தேவரால் சிறப்புற்ற நாயகர் பற்றிய சைவவிளக்கமே நூலில் நிறைந்துள்ளது. வடசொற்களை மிகுதியாகப் பெய்தெழுதும் நாயகர் அவர்கள் தாம் தனித்தமிழில் எழுதுவதைப் பாராட்டி ஊக்குவித்துக் காட்டியுள்ளார்.

நூலின் பெரும்பகுதியாகச் சைவசித்தாந்த விளக்கம், மாயாவாதம் பற்றிய குறைகள், வைணவ சமய மறுப்பு, திருமால் கண்ணன் பிறப்பு, இருவரும் சிவனுக்குப் படிந்தவர்கள் முதலிய கருத்துக்களே விளக்கப்படுகின்றன.

தாம் எழுதத் துவங்கியதும், பேசத் தொடர்ந்ததும் நாயகர் அவர்கள் எழுத்தாலும் பேச்சாலுந்தான் என்றும், தாம் தொடக்கத்தில் வேதாந்த மாயாவாதத்தில் சிக்குண்டு கிடந்ததையும் நாயகர் அவர்கள் விடுவித்துச் சைவசித்தாந்தியாக்கியதையும் நினைவுகூர்கிறார். தம் வாழ்வின் ஒளியே நாயகர்தான் என்கிறார்.

அடிகளார் தம் நாட்கடமைகளில் விடியலில் செய்யும் வழிபாடு குறிப்பிடத்தக்கது. அம்பலவாணர் முழு வழிபாட்டில் ஈடுபடுபவர். முதலில் தம்

ஆசிரியராகிய நாயகர் அவர்களது திருவுருவப் படத்தை வணங்குவார் என்றால் நாயகர் மேல் கொண்டிருந்த உயிரார்ந்த ஈடுபாடு அளவிடற்கரியது எனலாம். தம் நூல்களிற் சிறந்த ஆய்வு நூலாகிய 'மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்' என்னும் பெருநூலை நாயகர் அவர்கட்கே படைத்துள்ளார்.

சிறப்பாகக் குறித்தால் அடிகளார் படைத்த வரலாற்று நூல்கள் இரண்டும் அதன் துணை நூலும் அடிகளார்தம் வாழ்க்கை வரலாற்றுடன் ஒன்றியவை எனலாம்.

**15. பொதுவியல் (6 நூல்கள்)**

இதுவரை கண்ட 14 இயல்களின் கருத்துக்களின் விரவலாகவும் மேலும் பொதுவகைச் கருத்துக்களையும் கொண்டவையாக வெளிவந்துள்ள நூல்களைப் பொதுவியலில் அடக்கிக் காண்பது பொருந்துவதாகும்.

அடிகளார் இளமையிலேயே ஆங்கில அறிஞர் அடிசன்பால் ஆர்வமும் பற்றும் கொண்டவர். அவர்தம் கட்டுரைகளைத் தமிழாக்கி வெளியிட்டதைத் தொகுத்துச் 'சிந்தனைக் கட்டுரைகள்' என்று நூலாக்கினார். ஆங்கில மொழி பெயர்ப்பென்று கூறமுடியாது; தழுவலாகும். கருத்துக்கள் அடிசனுடையவை; சொல்லோட்டம் அடிகளாருடையவை. மற்றும் தாமே அதனுள் புகுந்து கொள்கிறார். 'The Vision of Mirra' என்னும் கட்டுரை 'முருகவேள் கண்ட காட்சி' என்று தம் புனைபெயர் இணைப்பில் வந்தது. 'The wonder of Creation' என்பது 'படைப்பின் வியத்தகு தோற்றங்கள்' என்று தமிழ்நாட்டுக் காட்சிகள் இடம்பெற்றன. திருவனந்தை மலை, அழகர்மலைப் பகுதிக் காட்சிகள் மிளிர்கின்றன. ஆங்கநாடு தமிழ் நாடாகியுள்ளது. பெயர்கள் தமிழ் உருவில் ஏறத்தாழ அன்பொலிப்பில் அமைந்தன. 'Raphael' இரவேல் ஆனான்; 'Glaphyea'கிளிமொழியானாள். சிந்தனை அடிசன்; கட்டுரைகள் அடிகள். இதனை இலங்கைப் பல்கலைக்கழகம் கல்லூரி இடைநிலைக் கலைமாணவர்க்குப் பாடமாக வைத்தது.

மற்றொரு கட்டுரைத் தொகுப்பு 'அறிவுரைக் கோவை'. தமிழ் தமிழன், தமிழ் மரபு பிற வேற்று மரபுகளில் வீண்தாக்கம் என்றெல்லாம் சுவையுடனும் உணர்வுடனும் அமைந்த கட்டுரைகள் கொண்டது. இது சென்னைப் பல்கலைக் கழகத்தில் பாடமாக வைக்கப்பட்டு பெரும் எதிர்ப்பைக் கிளப்பியது. இதழ்களில், மேடைகளில் இதனால் சலசலப்புகள் கண்டனங்கள் நேர்ந்து பின்னும் பாடமாக்கப்பட்டது. பின்னர் அறவே நீக்கப்பட்டது.

பலவகைக் கட்டுரைகள் சமயம், சித்தாந்தம் இயற்கை முதலியவற்றைக் கொண்ட கட்டுரைத் தொகுப்பொன்று 'முன்பனிக்காலம்' என்று வெளிவந்தது.

அடிகளார்க்குப் பின்னர் கட்டுரைத் தொகுப்பொன்று 'மறைமலையடிகள் கருத்தோவியம்' என்று வெளிவந்துள்ளது. இவை நான்கும் பொதுவான நற்கருத்துக்கள் கொண்டவை. இதுபோன்று பல்வகைப் பொதுக்கட்டுரைகளைக் கொண்ட 'மறைமலையடிகளார் உரைமணிக் கோவை' என்னும் தொகுப்பு நூலும், 'அறிவுரைக் கொத்து' என்னும் தொகுப்பு நூலும் வெளிவந்துள்ளன. இவ்வாறு பொதுவியல் பங்கில் வெளிவந்துள்ள 6 நூல்களும் எளிதாகப் படிக்கவும் பயிலவும், ஆராயவும், கடைப்பிடிக்கவும் துணை நிற்பவை.

## 16. வரைவியல் (இரண்டு வகை நூல்கள்)

அடிகளார் எழுதிய முடங்கல்களும், இவர் நாள்தோறும் தவறாமல் குறித்தெழுதிய நாட்குறிப்பும் இவ்வரைவியல் பங்குகள். முடங்கல் உள்ளத்துடன் உறவாடும், அன்பைப் பரிமாறும், கருத்தை அதிகரிக்கும் பதிவு வரைவுகள். நாட்குறிப்பு அன்றன்றைய நடப்பு வரைவுகள். எனவே இவை வரைவியல் எனத் தக்கவை. இவையிரண்டும் உணர்வு வெளிப்பாட்டுக் கல்வெட்டுக்கள்; வாழ்வியல் நடப்பியல் பதிவுச் சுவடுகள். இரண்டிலும் எழுதியோர் இயல்புகளையும், அறிவார்ந்த நடப்புகளையும் காணலாம்.

பல செய்திகளையும் கருத்துக்களையும் தொகுப்பதை ஆர்வமாகக் கொண்டு அதையோர் சுவையாகக் கொண்ட திரு அன்புப்பழம் நீ என்னும் அன்பில் பழம் 'மறைமலையடிகளார் கடிதங்கள்' என்றொரு நூலைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். அதில் அடிகளார் நாட்குறிப்பில் குறிப்பிட வேண்டிய சில குறிப்புக்களையும் சேர்த்துள்ளார். பன்மொழிப்புலவர் திரு. மு. சதாசிவம் அவர்கள் "அடிகளார் நாட்குறிப்பெழுதும் திறம்' என்றொரு கட்டுரை எழுதியுள்ளார். சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் 'மறைமலைடிகளார் நாட்குறிப்புகள்' என்றொரு நூலைப் பதிப்பித்துள்ளார்.

அடிகளாரின் முடங்கல்கள் அடிகளாரின் உணர்வுகளை, நடைமுறைகளை, ஆர்வங்களை, நூற்படிப்பை, மனக்கனல்களை, தொண்டுகளை, எழுத்துப் பணிகளை அவர் தம் கையாலேயே எழுத்துவடிவில் காணும் வாய்ப்பினை நல்குகின்றன.

### ஆங்கிலத்தில் குறிப்பு

முத்துச்சாதி போன்ற எழுத்தமைப்பும், முத்துச் சீரான வரிக்குவரி இடைவெளியமைப்பும் இவரது. எழுத்தழகில் அடிகளார்தம் கைச்சான்று ஒரு தனி எழிலானது. 'மறை' என்பதில் அமைந்த 'ற' எழுத்தில் கீழிறக்கம் நீண்டு வளைவு வேரைப் பெற்றிருப்பதும் கைப்பழக்கமாகிப் போனவை.

அஞ்சலட்டைகளை மிகப்பலர் படிக்காதிருக்க ஆங்கிலத்திலும், உறைகளைத் தமிழிலும் எழுதுவதாகக் குறித்துள்ள அடிகளார் தமிழிலும்

அஞ்சலட்டைகள் விடுத்துள்ளார். நாள்தோறும் எவருக்கேனும் முடங்கல் எழுதும் பழக்கத்தைப் பல்லாண்டுகளின் முன்னே தொடங்கி வாழ்விறுதி வரை கைக்கொண்டுள்ளார்.

1898 முதல் 1950 வரை 52 ஆண்டுகள் தொடர்ந்து நாள்தோறும் தவறாது நாட்குறிப்பை ஆங்கிலத்தில் எழுதி வந்துள்ளார். நாட்குறிப்பை ஆங்கிலத்திலேயே எழுதியுள்ளார். அதற்கு அடிகளார் கூறிய காரணம் 'தமிழில் எழுதியும் பேசியும் வருவதால் ஆங்கில அறிவு தளராமல் இருப்பதற்கு' என்பதாகும்.

ஒரு புத்தாண்டு நாளில் (1.1.1899) பாலையூரிலிருந்து கொரடாச்சேரி வந்தவர் "அன்றே திருவாரூர் சென்று ஆசிரியர் திரு வே. நாராயணசாமி பிள்ளையவர்களைக் கண்டு வணங்க வேண்டும்" என்று குறித்திருப்பது அவர் தம் நல்ல பண்பாட்டைப் பேசுகிறது. நூல்களைத் தொகுப்பது, குறிப்பெடுப்பது, நூல்களை முடித்தது போன்ற குறிப்புகள் அவர்க்கே பிற்காலத்தில் புரட்டிக் கண்டு நூல்களில் குறிக்கப் பயன்பட்டுள்ளன.

பாரதியார் நான்கு திங்கள் கவிதை எழுதாமல் கழித்ததை எண்ணிக் கனன்று கலைமகளிடம் முறையிட்டு வேண்டினார்:

> "மாதமோர் நான்காய்நீர் (கலைமகள்)-அன்பு
> வறுமையிலே (கவிதைச்செல்வம் படைக்காத வறுமையில்)
> என்று வைத்துவிட்டீர்"

இதுபோன்று அடிகளார் சில நூல்களைப் படிக்காமல் எண்ணிக் கவன்றதைக் குறித்துள்ளார். தமிழ், ஆங்கிலம், வடமொழி நூல்களை வாங்குவதில் சளைக்காத அடிகளார், 'இன்று இன்னின்ன நூல்களை வாங்கினேன்' என்று பட்டியலிட்டுள்ளார். அத்துடன் நூலாசிரியர்கள் பற்றிய தம் உணர்வுகளை நாட்குறிப்பில் வெளிப்படுத்தியுள்ளார். செல்லி, மில்தன், ஆர்னால்டு, கீத்சு முதலானோர் நூல்களை வாங்கியதைக் குறிக்கின்றனர். அதே எழுத்தோட்டத்தில் "நான் கவி பைரனை மிகவும் வெறுக்கிறேன்" என்று எழுதியுள்ளமை கருதத்தக்கது. பைரன் காலத்திலேயே அவர்தம் கவிதைகளை 'எடின்பரோ ரெவ்யு' என்னும் இதழ் பாராட்டி எழுதியதை அடிகளார் படித்துள்ளார். கடவுளை ஏற்காதவராகிய செல்லியை மிகவும் விரும்புகின்ற அடிகளார் பைரனின் செல்வநிலை உயர்வையும், சில கொள்கைகளையும் எண்ணிப் பார்த்து அவரை வெறுப்பதாக எழுதினார். பைரன் இயற்கையைப் பாடுவதில் வல்லவராயினும், அவர்தம் ஒவ்வாக் கொள்கைகள் கருதி அவரை வெறுப்பதாகக் குறித்தமை அடிகளாரின் கோட்பாட்டு நிலையைக் காட்டுகிறது.

**உணர்வுப் பதிவு**

"கல்லில் நார் உரிப்பதுபோன்று வருந்தித் தேடிய 300 உரூபா தொலைத்தது" பற்றிக் கவன்றதும், பல ஆண்டுகளுக்குப் பின்னர் நாகையில்

தம்முடன் பயின்ற உடன்மாணவர் இசுலாமிய நண்பர் ஒருவரைக் கண்டபோது கண்ணீர் மல்கியதும் குறித்துள்ளமை அவர்தம் இளகிய உள்ளத்தைக் காட்டுகின்றன.

முடங்கல்கள் உலக அறிஞர்களால் எழுதப்பெற்ற ஒரு பெருங்கருவூலம் போலக் கொள்ளப்படும் பாங்கில் அடிகளார் முடங்கல்களும் அக்கருவூலங் களாகின்றன.

உலகில் சான்றோர்களின் நாட்குறிப்பு, கிடைத்தற்கரிய புதையல்களாக உள்ளன. அறிஞர் சாமுவேல் பெலிசு, அறிஞர் சான் எவெயின் எழுதிய நாட் குறிப்புக்கள் உலகப் புகழ் பெற்றவை. அடிகளார் நாட்குறிப்பு முழுமையாக ஒளிவு மறைவின்றி, விடுத்தல் ஒதுக்கல், நீங்கல் இன்றி வெளியிடப்பெறுமானால் அறிவியல் வாழ்வுமட்டுமன்றி, நூலாக்கத்திறன் மட்டுமன்றி, காலக்குறிப்புகள் மட்டுமன்றி, புலமைத்திறம் மட்டுமன்றி, வாழ்வியல் நெறிகளும், நூலார்வத் திறமும், காதற் குறிப்புகளும் கூட வழிகாட்டும். அத்துடன் வாழ்வில் கவனங்கொள்ளாது விடுக்க வேண்டியவற்றையும் அறிவுறுத்தும் ஒளிப்பாதையாகும்.

ஒன்றைக் குறித்துக் காட்டி அடிகளார்தம் நாட்குறிப்பைப் பற்றி நிறைவேற்றுவதை இன்றியமையாததாகக் கருதலாம். அடிகளார் 15.9.1950-இல் புகழுடம்படைந்தார். அந்நாளுக்கு ஒரு திங்கள் முன்னர், அதாவது 14.8.1950 வரை நாட்குறிப்பு எழுதியுள்ளார். இந்நாளுக்குப் பத்து நாள்களுக்கு முன் நாள் அதாவது 4.8.1950 நாட்குறிப்பு அறிவிக்கும் நயப்பும் வியப்பும் எழுப்பும் எழுத்து பின்வருவது.

> "இன்று பெரியார் ஈ.வே. இராமசாமி நாயக்கர் ஆடலரசுடன் காண வந்தார். ஒரு மணி நேரம் உரையாடினேன்."

இதனை உவந்து எண்ணி 'வாழ்க தமிழும் தமிழினமும்' என்று வாழ்த்த வேண்டியுள்ளது.

**பதிப்பு வரலாறு**

அடிகளாரின் கையால் உருவான நூல் மலைகளைக் கண்டோம். இவை 4 வகைகளில் அமைந்த 16 இயல்களில் 85 நூல்களாகும். 65-இல் நான்கு ஆங்கில நூல்கள். அவற்றுள் அவர்தம் தமிழ் நூல்களின் அவர்தம் ஆங்கில ஆக்க நூல்கள் 2. அவர்தம் ஆங்கில வடிப்புகள் 2. கூட்டுமொத்தமாக 8200 பக்கங்களில் அடிகளார் நூல்கள் நிறைவுபெறுகின்றன.

அடிகளார் நூல்களில் பதிப்பு வரலாறு, அவர்தம் நூலாக்க உள்ளீடுகள் அடிகளார் தம் நூல்களைப் பற்றிய அருமைகள் பற்றிக் கூறி, எழுதி நிறைவேற்றுவது தான் இப்பேச்சிற்கும், இதன்வழி எழுத்துலகிற்கும் மரபாகும்; முறையுமாகும்.

அடிகளார்தம் நூல்களின் பதிப்புகள் அக்காலக் கணிப்புடன் காணத்தக்கவை. அச்சுக்கலை தோன்றித் தமிழகத்தின் வளரத் தொடங்கிய காலம் அது. நூலாக்கமும் பையப் பைய நடக்கத் தொடங்கி மிகுநடைக்குக் கடைகால் ஊன்றிய காலம். நூல்களுக்கு 'குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி', 'யோகநித்திரை அல்லது அறிதுயில்', 'மனித வசியம் அல்லது மனக்கவர்ச்சி' என்றெல்லாம் இரட்டைப் பெயரிட்டார். நூலின் தலைப்புகளே உட்பொருள்களைத் தெரிவிக்கும் குறிகளாக அமைந்தன. தம் நூல்களில் சிலவற்றைத் தம் உள்ளத்தில் ஒளிர்ந்த ஆசிரியர்க்கெல்லாம் படைப்பாக்கியுள்ளார். இயற்றமிழாசிரியர் நாகை.வே. நாராயணசாமி பிள்ளை, சித்தாந்த ஆசிரியர் சோமசுந்தர நாயகர், வேதாகம ஆசிரியர் நாகை வீரப்ப செட்டியார் ஆகிய ஆசிரியர்க்கெல்லாம் படைப்பு காட்டியுள்ளார். அதனையும் படைப்பு என்று எழுதாமல் மன ஒன்றிப்பை வெளிப்படுத்தும் உணர்வு வடிப்புகளாகத் தந்தார். ஒன்று சான்றுக்கு:

> *"கைம்மாறு சிறிதுங் கருதாது பேரருட்பெருக்கத்தால் எனக்குத் தமிழ் செவியறிவுறுத்திய என் இயற்றமிழாசிரியர் திருவாளர் வே. நாராயணசாமி பிள்ளையவர்களை நினைந்துருகுதற் பொருட்டாக இந்நூல் என்னால் வகுக்கப்பெற்றது"*

என்று தம் பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை நூலைப் படைத்தார்.

அடிகளாரின் நூல்கள் பல நீண்ட முகவுரைகளைக் கொண்டவை. ஆங்கில நாடகப் பேராசிரியர் பெர்னார்டுசாவைப் போல நீண்ட பெரும் முகவுரைகளை ஆங்கிலத்தில் எழுதினார். இலக்கிய நயம்செறிந்த அடிகளார்தம் ஆங்கில நடை நீண்ட தொடர்களாலானது. 75 சொற்களுக்கு மேலும் கொண்ட தொடர்களைக் காணலாம்.

அடிகளார் காலம் தமிழ் நூல்களுக்கு நல்ல விற்பனைக்களம் இல்லாத காலம். ஓரிரு நூல்களே 1000 படிகள் பதிப்பாயின. பல நூல்கள் பல பதிப்புகளைப் பெற்றாலும் மறுபதிப்புக்கள் 200-320 படிகள் எனவும் அமைந்தன. பத்து ஆண்டுகள் முதல் 17 ஆண்டுகள் வரை அவர்தம் நூல்கள் விற்பனை வரலாற்றில் முதுமையடைந்தன.

> *"ஒரு சிறந்த நூல் என்பது ஒரு சிறந்த அறிஞனின் அழியா வாழ்க்கைச் சாரம்"*

என்றார் கவிஞர் மில்தன். இது அடிகளார் நூல்களுக்கு மிகுதியும் பொருந்தும்.

நீண்ட முகவுரை போன்றே 'மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்' என்னும் ஆய்வுநூலில் 60 பக்கங்களுக்கு மேற்பட்ட பொருளடக்கம் விரித்துக் காட்டியுள்ளார். அதனைப் படித்தாலே நூலின் நுணுக்கங்களையும் அறியலாம். நூலின் முடிவாக அதாவது கடைகாப்பாகச் சில நூல்களில் தம் பெயரும், நூல்

முடிந்த காலமும் காட்டியுள்ளார். மேற்கண்ட வரலாற்று நூலின் இறுதியில், "பல்லாவரம் பொதுநிலைக் கழக ஆசிரியர் 'நாகைக் கிழார்' மறைமலையடிகள் ஆராய்ந்து எழுதிய மாணிக்கவாசகர் காலமும் வரலாறும் என்னும் நூல்' என்று காட்டியுள்ளார். நாகை வாழ்வை விடுத்துப் பல்லாவரம் வாழ்வில் நெட்டாண்டுகள் வாழும்போதும் "நாகைக் கிழார்" என்று குறித்தமை அவர்தம் நாகைப் பற்றை மட்டுமன்றி, நாகையில் எழுதத் துவங்கிய இந்நூல் பல்லாவரத்தில் நிறைவேறியதையும் காட்டுவதாகும். அதுமட்டுமன்றி 'நாகையில் ஒரு மலை' என்னும் இச்சொற்பொழிவுத் தலைப்பொன்றுக்கும் சான்றாகிறது.

**அச்சு வரலாறு**

அடிகளார்தம் நூலச்சேற்றத்தில் அடிகளாரின் பங்களிப்பும் உண்டு.

> "தம்மால் முடிவதனைத் தாமாற்சி செய்தல்லாற்
> பின்னை ஒருவரால் செய்வித்தும் என்றிருத்தல்
> செல்வீர் அருவி மலைநாட, பாய்பவோ
> வெந்நீரும் ஆடாதார் தீ'' [134]

எனும் பழமொழிப் பாடல் அறிவிப்பது போன்று அடிகளார் தம்மால் முடிவதனை ஆராய்ந்து தாமே செய்தார். தம் இல்லத்தில் தமக்குவேண்டிய திருமுருகன் அச்சகத்தை நிறுவினார். நூல்களை எழுதிய அவர் தாமே அச்சுக்கோர்க்கும் பணியிலும் பங்குகொண்டார். மெய்ப்புத் திருத்தினார்; அச்சில் மெய்ப்புத்திருத்தம் செய்தார்; அச்சுப்பொறியில் பல நேரங்களில் அச்சேற்றினார்; நூல்கட்டு செய்தார். வெளியூருக்கு நூல் அனுப்பக் கட்டுக் கட்டினார். இவ்வாறு பதிப்பில் தம்மால் முடிவதனைத் தாமாற்றினார். பதிப்பு வரலாற்றில் அடிகளார் பங்கு ஓர் உழைப்பு முத்திரை.

**உலகம் உள்ளளவும்**

அடிகளார் சில மணித்துளிகள் பேசப் பல ஆய்வுகளைச் செய்தார். ஒரு தொடர் எழுதப் பல நூலறிவைப் பயன்படுத்தினார். எனவே அவர்தம் ஒரு நூலைப் படிப்பது பல நூல்களை அறிவதாகும். அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள்,

> "தமிழர்கள் கொள்ள வேண்டியன இரண்டு உண்டு.
> ஒன்று படித்த சிலவற்றை மறக்க வேண்டும்;
> படிக்க மறந்துவிட்ட பலவற்றைப் படிக்க வேண்டும்''

என்று பொதுவாகத் தம் திராவிட நாடு இதழில் எழுதினார்கள். அடிகளார் நூல்களில் மறக்கவேண்டியவை இல்லை. தமிழர் படிக்க மறந்துவிட்ட நூல்கள் பலவும் அடிகளார் நூல்களில் உள்ளன. அறிஞர் பெருந்தகை சொற்படி படிக்க வேண்டும். படித்தால்,

"யான் தமிழில் எழுதும் ஒவ்வொரு சொல்லையும்
சொற்றொடரையும் நீங்கள் செவ்வையாக உன்னித்து வந்தால்
தமிழிற் பிழையின்றிப் பேசவும் எழுதவும் ஆற்றல் பெறுவீர்கள்"

என்று அடிகளாரின் தன்னம்பிக்கை அறிவிப்பின்படி நாவாலும் கையாலும் ஒவ்வொருவரும் மலையாகலாம்; இயலாது போனால் குன்றாக ஆகலாம்.

அடிகளார் திறம்பற்றிய இன்றியமையாச் சுவைச் செய்தியை இங்குக் காட்ட வேண்டும்:

"அடிகளார் எழுத்தில் மட்டும் தேன் சொட்டவில்லை;
அவரது பேச்சு பலாச்சுவையாய்ப் பைந்தமிழர்க்கு இனிக்கிறது"

என்னும் இச்சுவை வடிப்பு இவ்வறக்கட்டளையை நிறுவியுள்ள டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் வடிப்பு.

"உலகம் உள்ளளவும் தம் தமிழ்த்தொண்டு நிலைபெற்றுப்
பெரும்பயனும் பெரும்புகழும் விளைக்கும்"

என்று அடிகளார் தம்பொறுப்பில் விட்டு எழுதியதை நினைவிற் பதிக்க வேண்டிய இப்பொழிவை நிறைவேற்றுகின்றேன்.

**நிறைவின் முடியாக,**

அறக்கட்டளை நிறுவிய டாக்டர் கலைஞருக்கு நெஞ்சம் கனிந்த பாராட்டு;

நன்றி.

இராசராசன் விருது படைத்த முன்னாள் துணைவேந்தர்
முனைவர் வ.அய். சுப்பிரமணியம் அவர்களுக்கு வணக்கமும் வாழ்த்தும்;

இன்று நடைமுறைப்படுத்திய இந்நாள் துணைவேந்தர் தமிழ்நெஞ்சத்து முனைவர் அவ்வை நடராசனார்க்கும் வாழ்த்தும் பாராட்டும் நன்றியும்; இன்று நிகழ்த்திய இலக்கியத் துறையினர்க்கு அனைத்து நன்றியும்; செவிமடுத்து உவப்பித்த பெருமக்களுக்கு உளந்தோய்ந்த நன்றி.

வணங்கி அமைகின்றேன்.

# மேற்கோள் கொண்டு காட்டு


1. பாரதிதாசன், தேனருவி பாடல் 57.
2. சௌந்தரா கைலாசம், நாகைத் தமிழ்ச் சங்க மறைமலையடிகளார் நினைவு மலர், ப.71.
3. மு. வரதராசன், மேலது, ப.61.
4. மறைமலையடிகள், திருவொற்றி முருகன் மும்மணிக்கோவை, முகவுரை.
5. தொல்காப்பியர், தொல்காப்பியம் பொருளதிகாரம், நூற்பா 190.
6. அடிகள், நாட்குறிப்பு 8.5.1912
7. எட்கர் தர்ஸ்ட்டன், தென்னிந்தியக் குலங்களும் குடிகளும், தொகுதி 1, ப.87. (தமிழ்ப் பதிப்பு).
8. மேலது, ப.165.
9. வெண்ணிக்குயத்தியார், புறநானூறு பாடல் 66, அடி 2.
10. க.ச. முருகேச முதலியார், பொருட் பண்பு நூல், பயிர் வகுப்பு, ப.5.
11. அடிகளார், பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும், ப.4.
12. இருக்கு மறை, மண்டிலம் 1, பதிகம் 42.
13. அடிகளார், முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், ப.132.
14. அடிகளார், பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும், ப.28.
15. பாரதிதாசன், தமிழியக்கம், பாடல் 44.
16. அடிகளார், முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், ப.16.
17. Rhys David, Buddhist India, p.119.
18. இராகுல சாங்கிருத்தியாயன், வால்கா முதல் கங்கை வரை, ப.123.
19. சி.என். அண்ணாதுரை, மறைமலையடிகளார் நினைவு மலர் (நாகைத் தமிழ்ச் சங்கம்), ப.31.
20. அடிகளார், பண்டைத் தமிழரும் ஆரியரும், பதிப்பு 2, முகவுரை.
21. அடிகளார், பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார், கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டுவிழா, மறைமலையடிகள் வரலாறு, பக்.522-23.

22. தொல்காப்பியர், தொல். சொல்லதிகாரம், நூற்பா 401.
23. பாரதிதாசன், தமிழியக்கம், பாடல் 42, 43.
24. மேலது.
25. மேலது, பாடல் 43.
26. சுவாமிநாத தேசிகர், இலக்கணக்கொத்து நூற்பா 7, அடி 25, 26.
27. சுவாமிநாத தேசிகர், இலக்கணக் கொத்து, நூற்பா 7, அடி 27-29.
28. மேலது, அடி 30,31.
29. அடிகளார், பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும், பக்.36,37.
30. மேலது, ப.22
31. எட்கர் தர்ஸ்ட்டன், தென்னிந்தியக் குலங்களும் குடிகளும், தொகுதி 1 அறிமுகம்.
32. அடிகளார், சோமசுந்தர நாயகர் வரலாறு, ப.14.
33. அடிகளார், தமிழின் தனிச்சிறப்பு, ப.9.
34. Adison, Spectator, Magazine.
35. அடிகளார், கரந்தைத் தமிழ்ச் சங்க 15,16 ஆம் ஆண்டு விழா - தலைமையுரை.
36. — —, மேலது, முடிவுரை.
37. — —, பண்டைக்கால தமிழரும் ஆரியரும், ப.12.
38. — —, கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவமாகா, ப.66.
39. — —, முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், ப.158.
40. — —, கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவமாகா, ப.24.
41. C. Meklin, Administration Guide.
42. William James, Ibid, p.454.
43. அடிகளார், கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவமாகா, ப.100.
44. நக்கீரர், திருமுருகாற்றுப்படை - 1,2
45. அடிகளார், கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவமாகா, ப.113.
46. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 1, ப.174.
47. நக்கீரர், திருமுருகாற்றுப்படை 1,2

48. திருவள்ளுவர், திருக்குறள் 610.
49. அடிகளார், கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவமாகா, ப.109.
50. மேலது, ப.110.
51. மேலது, ப.110.
52. திருநாவுக்கரசர், தேவாரம் ஆதிபுராணத் திருக்குறுந்தொகை, பாடல் 8.
53. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம் 1 : 4.
54. அடிகளார், மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை, ப.148.
55. சேக்கிழார், திருத்தொண்டர் புராணம், வாயிலார் 6-2.
56. சேக்கிழார், திருத்தொண்டர் புராணம், இளையான்குடி மாறர் 1-2.
57. சுத்தானந்த பாரதி, நாகைத் தமிழ்ச் சங்க மறைமலையடிகளார் நினைவு மலர், ப.66.
58. திரு.வி. கலியாணசுந்தரம், மறைமலையடிகள் வரலாறு, ப.320.
59. சுத்தானந்த பாரதி, நாகைத் தமிழ்ச் சங்க மறைமலையடிகளார் நினைவு மலர், ப.66.
60. மேலது.
61. அடிகளார், மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர், ப.17.
62. அடிகளார், மறைமலையடிகளார் வரலாறு, ப.685.
63. சே. சிவசண்முகம் பிள்ளை, மறைமலையடிகளார் வரலாறு, பெரும்புலவோர் பதிவு, ப.48.
64. வாணிதாசன், நாகைத் தமிழ்ச் சங்க மறைமலையடிகளார் நினைவு மலர், பக்.74,75.
65. தொல்காப்பியர், தொல் பொருள், 2 : 27.
66. மருதன் இளநாகனார், கலித்தொகை 95-25, 26.
67. பேராசிரியர், தொல். பொருள். 498 உரை.
68. நாற்கவிராசநம்பி, நம்பியகப் பொருள் நூற்பா 26.
69. திருவள்ளுவர், திருக்குறள் 836.
70. மேலது, 627.
71. பரிமேலழகர், திருக்குறள் 627 உரைவிளக்கம்.

72. அடிகளார், தொலைவிலுணர்தல், ப.131.

73. அடிகளார், சென்னை, சைதைச் சொற்பொழிவு, நாள் 15.5.1949.

74. பரிதிமாற்கலைஞர், மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர், ப.46 (மேற்கோள்).

75. சோமசுந்தர நாயகர், அடிகளார் கூற்று, சென்னை சைதைச் சொற்பொழிவு, 15.5.49.

76. அ. சிதம்பரநாதன், மறைமலையடிகள் வரலாறு, ப.45.

77. சி.என். அண்ணாதுரை, நாகைத் தமிழ்ச் சங்க மறைமலையடிகளார் நினைவு மலர், பக்.5,6.

78. அடிகளார், பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும், ஆங்கில முகவுரை.

79. குமரகுருபரர், சகலாகலாவல்லிமாலை, பாடல் 1, அடி 1,2.

80. சி. சுப்பிரமணிய பாரதியார், பாரதியார் கவிதைகள், ஆய்வுப் பதிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு, பாடல் 1862.

81. அடிகளார், பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும், ஆங்கில முன்னுரை.

82. அடிகளார், ஒரு முடங்கலில்.

83. உமாபதிதேவ நாயனார், சிவப்பிரகாசம் 12 (அவையடக்கப் பாடல்)

84. அவ்வையார், நல்வழி 40.

85. அடிகளார், சித்தாந்த ஞானபோதம்-வேத சிவாகமப் பிரமாண்யம், ப.19.

86. உருத்திரங்கண்ணனார், பட்டினப்பாலை 299,300.

87. மேலது, 300, 301.

88. மேலது, 3,4.

89. அடிகளார், பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, ப.103.

90. மு. கதிரேசனார், மறைமலையடிகள் வரலாறு, ப.326.

91. அடிகளார், பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, உரைப்பாயிரம், அடி 6-17.

92. திருஞானசம்பந்தர், திருப்பிரமபுரம், பதிகம் 11.

93. அடிகளார், மறைமலையடிகளார் பாமணிக் கோவை, சித்திர விநாயகர் பதிகம்

94. மேலது, வாழ்க்கைக் குறள், 3.

95. மேலது, தமிழ்த்தாய் நூலுக்கு வாழ்த்து.
96. மேலது, தமிழத்திய மாது.
97. Gray, Lublucs
98. அடிகளார், திருவொற்றி முருகன் மும்மணிக்கோவை, பாடல் 24.
99. மேலது, பாடல் 27.
100. திவாகரர், சேந்தன் திவாகரம், செயல் பற்றிய பெயர்.
101. பலவந்தி முனிவர், நன்னூல் பொதுப்பாயிரம், நூற்பா 9.
102. மாமூலனார், அகநானூறு 1 5.
103. பரணர், அகம். 356-9.
104. அடிகளார், திருவொற்றி முருகன் மும்மணிக்கோவை 12-3,4.
105. திருஞானசம்பந்தர், திருப்பிரமபுரம் பதிகம்.
106. திருவள்ளுவர், திருக்குறள் 725.
107. பரிமேலழகர், திருக்குறள் 725 உரை, உரைவிளக்கம்.
108. பாரதிதாசன், தேனருவி பாடல் 5.
109. அடிகளார், சைவ சித்தாந்த ஞானபோதம், ப.119.
110. மேலது, 119.
111. G.U. Pope, Thiruvasagam - English Translation, P.ixxiv.
112. தொல்காப்பியர், தொல். பொருள் நூற்பா 88.
113. நச்சினார்க்கினியர், தொல். பொருள் நூற்பா 88 உரைவிளக்கம்.
114. நச்சினார்க்கினியர், காமிகாமகம் படலம் 4, பாடல் 437-39.
115. அடிகளார், கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவமாகா, ப.64.
116. மேலது, ப.64.
117. அடிகளார், பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும், ப.4.
118. திருநாவுக்கரசர், தேவாரம், திருவாரூர்ப் பதிகம் 1.
119. அடிகளார், மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் முதற்பாகம், ப.65.
120. அடிகளார், சாகுந்தல நாடக ஆராய்ச்சி, ப.11.
121. பரிமேலழகர், திருக்குறள் 43, உரைவிளக்கம்.
122. நெட்டிமையார், புறம், பாடல் 9-3,4.
123. அடிகளார், பண்டைக்காலத் தமிழரும், ஆங்கில முகவுரை, ப.1.

124. அடிகளார், மேலது, இரண்டாம் பதிப்பின் முகவுரை.
125. அடிகளார், சாகுந்தல நாடக ஆராய்ச்சி, ப.146.
126. அம்பிகாபதி, தனிச்செய்யுட் சிந்தாமணி (பழைய முதற் பதிப்பு), ப.51.
127. கம்பர், தனிச்செய்யுட் சிந்தாமணி (பழைய முதற் பதிப்பு) ப.47.
128. மேலது, ப.50.
129. சி. சுப்பிரமணிய பாரதியார், பாரதியார் கவிதைகள், ஆய்வுப் பதிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு, பாடல் 2465, அடிகள் 54-58.
130. மேலது, பாடல் 2477-2480.
131. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள்-தொகுதி 1.
132. மேலது, 13 காதற் குற்றவாளிகள், பாடல் 1.
133. மேலது, பாடல் 4.
134. மூன்றுறையரையர், பழமொழி, பாடல் 160.